
# பட்டினத்தடிகள்

87

டாக்டர். ந.சுப்பு ரெட்டிய



# பட்டினத்தடிகள்

'தமிழ் வாகைச்செம்மல்' 'கலைமாமணி'
'ஆய்வுத் தமிழரசு', 'பொதுமறைச் செம்மல்'
பேராசிரியர்
டாக்டர் **ந. சுப்புரெட்டியார்**
M.A., B.Sc., L.T., Vidwan., Ph.D., D.Lit.,
(1) வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்,
தமிழ் இலக்கியத் துறை, செ.ப.க.
(2) மதிப்பியல் இயக்குநர், தென்கிழக்கு தெற்கு ஆசிய
நாடுகளின் மரபுவழிப் பண்பாட்டு நிறுவனம்
சென்னைப் பல்கலைக் கழகம்

**கலைஞன் பதிப்பகம்**
**19 கண்ணதாசன் சாலை,**
**தியாகராய நகர் சென்னை - 600 017.**

**Rs.45-00**

**PATTINATHADIGAL**

© **Dr.N. SUBBU REDDIAR**

Pages: xvi+136 = 152

First Edition May 2003

Published by
**KALAIGNAN PATHIPAGAM**
19 Kannadhasan Salai
T.Nagar, Chennai - 600 017

Typeset
**Oviyam**
Chennai - 600 020

Printed at
**Sakthi Printers**
Chennai - 600 021

பார்அனைத்தும் பொய்எனவே
பட்டினத்துப் பிள்ளையைப்போல்
ஆரும் துறக்கை
அரிதுஅரிது!

— தாயுமான அடிகள்



பட்டினத்தடிகள்

1. தா.பா: உடல் பொய்யுறவு - 57

பட்டினத்தடிகள்
மரபில் வந்த
தனித்தன்மையான பண்பாட்டுடன் வாழும்
நகரத்தார் பெருமக்களுக்கு

## அன்புப் படையல்

கடல்கடந் துயர்ந்த புகழினைப் பெற்ற
கண்ணியர்; ஒற்றிமா நகரில்
திடமுடன் அமைந்த கோவிலில் மேவும்
சீரிய பட்டினத் தாரின்
அடல்மிகு குலத்தில் பிறந்தவர்; என்றும்
அணைந்திடா விளக்கெனப் பொலிவோர்;
மடமையைப் போக்கும் நகரத்தார் தங்கள்
மாண்பினுக் குரியதின் நூலே.

# அணிந்துரை

## (திரு. **எஸ்.தியாகராசன்** B.E. [1])



மூதறிஞர் டாக்டர் சுப்புரெட்டியார் **"பட்டினத்தடிகள்"** பற்றிய ஓர் அருமையான நூலை வரைந்துள்ளார். பதினொராந் திருமுறையில் சில பிரபந்தங்களை அருளியுள்ள திருவெண்காட்டிகளையும், 'பட்டினத்தடிகள் பாடல் திரட்டு' என்ற நூலில் காணப்பெறும் பனுவல்களைப் பாடிய அருளாளர் ஒருவரையும், வேறுசில பாடல்களைத் தந்த பெரியார் ஒருவரையும் **பட்டினத்தார்** என்றே தமிழுலகம் வழங்கி வருகிறது. மூவர் வரலாறும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் சொல்வதுபோலப் "பஞ்சாமிருதமாய்" வழங்குகின்றன. நக்கீரர், ஔவையார், கம்பர் முதலிய பலரும் இந்தச் சிக்கலுக்கு உள்ளானவர்களே! ஆதிசங்கரர் பேரிலும் கதைகள் கட்டப்பட்டதும் மற்றவர் பாடிய பாடல்கள் அவர் தலையில் ஏற்றப்பட்டதும் உண்டு.

பேராசிரியர் சுப்புரெட்டியார் பட்டினத்தாரைப் பற்றிய சிக்கலுக்கு ஒரு தெளிவு தரும் நேரத்தில் மூன்றாவது பட்டினத்தார் ஒருவரையும் நமக்கு அறிமுகம் செய்கிறார். நாட்டுக்கோட்டை நகரத்தாரில் **'பட்டினச்சாமி'** என்று ஒரு மரபினர் உள்ளனர். அரசர் அண்ணாமலைச் செட்டியார் அம்மர

1. 104, **அண்ணாநகர் கிழக்கு, சென்னை** - 600 102 **தொழிலதிபர்**; (M/S. Southern Alloy Foundaries (P) Ltd.); **தலைவர், சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை** - 600 004.

பினரே. மூன்று பட்டினத்தாரில் இவர் ஒருவரா? அன்றி நாலாமவராகக் கொள்ளத்தக்கவரா என்ற வினாவும் எழுகிறது.

திருவொற்றியூருக்குப் பதினொராந் திருமுறைத் திரு வெண்காட்டடிகள் பாடலும் உண்டு. பாடல் திரட்டுப் பட்டி னத்தார் அந்தாதியும் உண்டு. ஆதலால் மூவரில் அல்லது நால்வரில் எந்தப் பட்டினத்தாருக்கு உரியது ஒற்றிக் கடற்க ரைத் திருக்கோயில்? நமக்குத் தெளிவு கிடைக்கவில்லை.

தமிழர்கள் வரலாற்றுணர்வு பெற வாழ்ந்திருந்தால் இந்தச் சிக்கல்கள் எழுந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் யாவர் வரலாறும் ஒன்றாய் இணைந்த 'பஞ்சாமிருதக்' கலவை வர லாறு கேட்கச் சுவையாக ஒருவர் வரலாறாகவே இன்றளவும் கொள்ளப் பெறுகிறது. நிற்க.

பட்டினத்தார் முதலிருவர் வரலாறுகள் சிவநேயச் செல் வர் வரலாறாகத் திகழ்கின்றன. மூன்றாமவர் சித்த புருடராகத் தெரிகிறார். சித்தர்கள் வாலை (சத்தி) வழிபாட்டுக்காரர்கள். நாலாமவர் மூனறாமவரின் சீட பரம்பரையினராகக் கொள்ளத் தக்கவர்.

'ஞானம்' என்ற சொல் ஆசிரியர் ஒருவர் பெயரை அடுத்து வருமானால் அம்முதலாசிரியரின் சீட பரம்பரையில் சந்தானமாகப் பெற்ற ஞானம் என்ற பொருளே தரும். சித்தர் நூல்களில் 'காகபுஜண்டர் ஞானம்', 'திருவள்ளுவர் ஞானம்' முதலியன காண்க.

பட்டினத்தடிகள் வரலாறுகளை ஆராயும்போது முதலாம வர் இராஜராஜன் காலத்துக்கு முற்பட்டும், வரகுண பாண்டி யர் காலமாகிய ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டும் வாழ்ந்தவர் ஆதல் வேண்டும். இரண்டாமவர் பத்தாம் நூற் றாண்டுக்குப் பின்னரும் பதினாலாம் நூற்றாண்டுக்கு முன்னும் வாழ்ந்தவர் எனலாம். மூன்றாமவர் அதற்குப் பின்னர் வாழ்ந் திருத்தல் கூடும்.

முதல் பட்டினத்தாரைச் சிலர் 'வேளாண் மரபினர்' என்பர். இரண்டாவது பட்டினத்தார் 'வணிகர்' என்று கூற இடம் உண்டு.

**வித்தாரம் பேசினும் சோங்கு ஏறினும் கம்பமீதிருந்து**
**தத்தா என்றோதிப் பவுரிகொண்டாடினும்.....**

என்னும் பாட்டில், சோங்கு - மரக்கலம் என்று பொருள்படும். நடைமுறையில் வழங்கும் கதைகள் பட்டினத்தாரை வணிக மரபினர் என்பதற்கு இது துணையாக நிற்குமேயன்றி இந்த ஒரு காரணம் பற்றி அவரை 'வணிகர்' என்று துணிந்து கூறவும் முடியாது.

தாயுமான அடிகள் பட்டினத்தாரைப் பாராட்டும் அடிகள் இங்கு நினைக்கத்தக்கன.

**"பாரனைத்தும் பொய்யெனவே - பட்டினத்துப்**
**பிள்ளையைப்போல், ஆரும் துறத்தல் அரிது அரிது"**

என்பதில் இரண்டு செய்திகள் புலனாகின்றன. பட்டினத்தாருக் குப் 'பிள்ளையார்' என்ற திருநாமம் உண்டு. அவர் மிகப் பெருஞ்செல்வம் உடையவராயிருந்தார். வணிகர் பெருஞ் செல்வர் உடையராயிருத்தல் இயல்பு. அவர் ஒரு கணத்தில் அச்செல்வத்தை வெறுத்துத் துறந்தவர் என்பது விளங்குகின் றது.

இன்னொரு பாட்டில் 'பட்டினத்தார் பத்திரகிரி பண்புணர் வதெந்நாளோ?' என்பதனால் பட்டினத்தடிகளும் பத்திரகிரி யாரும் மிக்க கேண்மையுடையவர்களாயிருந்தார்கள் என்பது குறிப்பால் புலப்படுகிறது.

ஆனால், உஜ்ஜயினி என்ற மத்திய இந்தியப் பகுதியை ஆண்டதாகக் கூறப்படும் பத்திரகிரியாரா இவர்? ஐயப்பாடே! சிருங்கார சதகம் முதலியவைகளை வடமொழியில் இயற்றிய அந்த பத்திரகிரியாரா இவர்?

பட்டினத்தார் தமிழ்நாட்டைத் தாண்டியவராகத் தெரிய வில்லை. காரைக்குடிக்கு ஆறு கல் அளவுத் தொலைவில் உள்ள உஞ்சனை வடநாட்டு உஞ்சையை நினைவு கொள்ள எழுந்த தலம். கல்வெட்டுகள் இதனை உஞ்சேனை என்கின் றன. நம் பத்திரகிரியார இந்த உஞ்சனையைச் சேர்ந்தவரா? பத்தாம் நூற்றாண்டுப் பட்டினத்தார் திருவெண்காட்டாராயி ருக்க வாய்ப்பில்லை. திருவெண்காட்டார் நகரத்தார் வாழ்வுப் பகுதியில் உள்ள உஞ்சேனையைக் கருத்தில் வைக்கவும் வாய்ப்பில்லை.

பத்திரகிரியார் தமிழ்நாட்டவராகவேயிருந்து 'புலம்பல்' என்ற அருந்தமிழ் மாலை பாடியிருத்தல் வேண்டும். பேராசிரி யர் சுப்புரெட்டியார் அவர்கள் இந்தச் சிக்கலில் மாட்டிக் கொள்ள விரும்பவில்லை. அவர்கள் பட்டினத்தாரின் கருத்துக் களிலேயே கவனம் செலுத்த விரும்பகிறார்.

பதினொராந் திருமுறைப் பனுவல்களில் தோய்ந்து அழ கிய பகுதிகளை எடுத்து விளக்குவது மிக அருமையாக இருக்கிறது. அதனுள்ளும் கோயில் நான்மணி மாலையில்

**...... சராசரம் அனைத்தும்**
**நின்னிடைத் தோன்றி நின்னிடை அடங்கும் நீ**
**ஒன்றினும் தோன்றாய் ஒன்றினும் அடங்காய்....**

என்னும் பாட்டு அடிகட்கு முதற்காரணமும் நிமித்த காரண மும் முதல்வனே என்று கொள்ளும் விசிட்டாத்துவைத சிவாத் துவைதக் கொள்கைப்படி மயங்கிப் பொருள் கொள்ளலாகாது என்று காட்டி, சைவ சித்தாந்தக் கொள்கைப்படி விளக்கம் கொடுத்துள்ள பேராசிரியர் ரெட்டியார் அவர்களின் புலமை நலம் பாராட்டத்தக்கது.

பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் பட்டினத்தடிகளார் பெண்பாலர்பால் வெறுப்புக் கொண்டு பேசிய இடங்களைக் காட்டி, ''ஆயின் ஆண்பாலார் அல்லரோ தவறிழைப்பவர். பெண்பாலரை இத்துணை இழித்துப் பேசலாமா?'' என்று கேட்டு நம்மைச் சிந்திக்க வைக்கிறார்.

பட்டினத்தடிகள் காலந்தொடங்கி இப்போக்கு சைவத் தமிழிலக்கியத்தில் மிகுதியாகவே காணக் கிடக்கிறது. பட்டினத்தடிகள், தாயுமானவர், அருணகிரியார், இராமலிங்கர், குணங்குடியார் இவர்களும் இப்போக்கைக் கடைப்பிடிக்கின்றனர். பிறர் குறைகளையும், குற்றங்களையும் தம்மேல் இட்டுக் கொண்டு நீல நினைந்திரங்கலாக அவர்தம் பாடல்கள் விளங்கக் காண்கிறோம்.

இராமகிருஷ்ண பரமஹம்ஸர் எப்போதுமே 'காமினீ காஞ்சனம்' (பெண் - பொன்) வெறுத்து இருக்க வேண்டும் என்று ஓயாது அறிவுறுத்தி வந்தனர். ஆண்களெல்லாம கற்புவிட்டுத் தவறு செய்தால் அழகான பெண்மை நலம் அழிந்திடாதோ என்று பேசினார் பாரதியார். இது அந்த அருளாளர்க்குப் புரிந்திராத ஒன்று அன்று.

மனிதன் பெரிதுஞ் சறுக்குவது இன்பத்துறையில்தான். திருநீலகண்டர் பத்தராயிருந்தும் இன்பத் துறையில் எளியராயிருந்தார். அவரைத் தெளிவாக்கவே இறைவன் திருவோட்டுத் திருவிளையாடல் நிகழ்த்தினான். எண்பதாண்டு கடந்த அப்பருக்குப் பெண் பொன் தேர்வு வைத்து அவர் உள்ளத்துறுதியை மற்றையோருக்குத் தெரியக் காட்டினான் சிவபெருமான்.

**காமமும் பசியும் யானை முதலா எறும்பீறாகவுள்ள**
**யோனி பேதம் அத்தனைக்கும் உள்ள உணர்வுகளில்**
**காமம் உயிர்த்தொகுதி இடையறவு படாமல்**
**காக்கும் உணர்வு; பசியோ உடலில் உயிர் நீட்டித்தலைச் செய்வது.**

விலங்கு முதலிய அஃறிணைகளுக்கு இவ்விரண்டும் உணர்வுகளாகவே இன்றளவும் நீடிக்கின்றன. மனிதன் காமம், பசி இரண்டிற்கும் நிறைவு காண்பதைக் கலையாகவே வளர்ந்திருக்கிறான். இரண்டையும் துய்ப்பதில் வரையறை இல்லாதவனாக இருப்பதே பல சமுதாயச் சிக்கங்களுக்கும் தோற்றுவாய் செய்து விட்டது.

பெண்ணைத் துய்ப்புக்கு உரிய பொருளாக ஆடவர் நினைக்கலாகாது என்பதே பட்டினத்தார் அருணகிரியார் முதலிய ஞானிகள் உள்ளக்கிடக்கை. இளம்பருவத்தினரைக் குறித்தும் மற்றையோரைப் பொதுவில் நோக்கியும் பெண் பொன் பித்தினைப் போக்குவதற்கு இவ்வுத்தியை முன்சொன்ன அருளாளர் பலரும் கைக்கொண்டனர்.

அதே சமயத்தில் பெண்ணைத் தாயாகப் பார்க்கப் போதிக்கின்றார் பட்டினத்தார் என்பது நன்கு உணரக் கிடக்கின்றது. **'வெட்டாத சக்கரம்'** என்னும் பாட்டின்மூலம் பட்டினத்தார் யோக மார்க்கத்தைப் பின்பற்றியவர் என்பது நன்கு புலனாகின்றது. **'சொல்லினும் வேதச் சுருதியினும்'** என்ற பாட்டின்மூலம் அது உறுதிப்படுகின்றது.

பட்டினத்தடிகள் என்று ஒரே பெயரில் வழங்கப்பெறும் ஞானியாரின் வரலாறுகளையும் அவர்களின் அருளிச்செயல்களையும் ஒருசேர யாவரும் கற்று உணரும் வகையில் எளிய இனிய தமிழ்நடையில் ஆய்வுநோக்கில் தந்துள்ளனர் பேராசிரியர் சுப்புரெட்டியார். அவர்களையும் இந்நூலையும் பாராட்டி மகிழ்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

104, அண்ணாநகர் கிழக்கு
சென்னை - 600 102.

**எஸ்.தியாகராஜன்**

# நூல்முகம்

மலஞ்செய்த வல்வினை நோக்கி
உலகை வலம்வரும்அப்
புலஞ்செய்த காட்சிக் குமரற்கு
முன்னே புரிசடைமேல்
சலஞ்செய்த நாரைப் பதிஅரன்
தன்னைக் கனிதரவே
வலஞ்செய்து கொண்ட மதக்களி
றே!உன்னை வாழ்த்துவனே [1]

**— நம்பியாண்டார்நம்பி**

என்னுடைய கல்லூரி வாழ்க்கை திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் (1934-39) நடைபெற்றது. அருள்தந்தை ஜெரோம் டி சௌசா என் ஆங்கில பேராசிரியர்; அவர் வாரம் ஒரு மணி நேரம் நல்லொழுக்க வகுப்பு எடுத்து நடத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவர் கூறிய கருத்துகளில் சில என் பிஞ்சு மனத்தில் ஆழப் பதிந்தன. அக்காலத்தில் விடுமுறை நாட்களில் (புதன், ஞாயிறு) உணவு விடுதியில் உணவு கொண்டு திரும்பும்போது வழியில் இருந்த மாவட்ட வாரிய நூல் நிலையத்தில் ஒரு மணி நேரம் நூல்களை புரட்டிப் பார்ப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். அப்படிப் புரட்டுவதில் தாயுமானவர், பட்டினத்தார், திரு. வி.க. நூல்கள் பழக்கமாயின. முன்னவர் இருவர் நூல்களிலுள்ள ஒரு சில பாடல்கள், கண்ணிகள் என் கவனத்தை ஈர்த்தன. அவற்றில் மனப்பக்குவ நிலையில் ஈடுபட்டதாகச் சொல்ல முடியாது. ஏதோ ஆன்மிகத் துறையில் பக்குவம் ஏற்படாத ஒரு கல்லூரி மாணவன் நிலையில் அவற்றில் ஈடுபாடு கொள்ள நேர்ந்தது. தாயுமானவர் பாடல்களில் ஒரு சில கண்ணிகளை வண்ணக் காம்புகளைக் கொண்டு அழகாக எழுதி என் அறையிலும் எங்களூரைச் சேர்ந்த சகோதரர் இருவரால் நடத்தப் பெற்றுவந்த நீராகார மடத்தின்

1. திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை - 8

(காவிரியாற்றுக் கரையருகில் சாலையோரத்தில் இன்றளவும் இருந்து வருகிறது) சுவர்களிலும் எழுதி வைத்து மகிழ்ந்த துண்டு.

இந்தப் பழக்கத்தால் ஏற்பட்ட தாக்கம்தான் பிற்காலத்தில் (1970க்கு மேல்) ஆன்மிகத் துறையில் ஈடுபாடு கொள்ளச் செய்தது போலும் என நீள நினைத்து பார்க்கின்றேன். ஆழ்வார் பெருமக்கள் அருளிச் செயல்களிலும் சைவ சமய குரவர் நால்வரின் அருளிச் செயல்களிலும் பல நூல்கள் (30க்கும் மேற்பட்டவை) எழுதி வெளியிட்ட பிறகு **'தாயுமானவர்'** என்ற நூலை எழுதி வெளியிட்டு (நவம்பர் 2001) மகிழ்ந்தேன்.

இப்பொழுது **'பட்டினத்தடிகள்'** என்ற நூல் எழுதப் பெற்று வெளிவருகின்றது.

> **ஒட்டுடன் பற்றுஇன்றி**
> **உலகைத் துறந்துசெல்வப்**
> **பட்டினத்தார் பத்திரகிரி**
> **பண்புணர்வது எந்நாளோ?** [1]

என்ற கண்ணிதான் இந்நூல் எழுதத் தூண்டியது. இக்காலம் ஆன்மிகத் துறையில் ஆழங்கால்பட்டு ஓரளவு மனப்பக்குவம் ஏற்பட்ட நிலை (அகவை 87).

இச்சிறுநூல் **ஆறு** இயல்களாக அமைகின்றது. **முதல் இயல்** தோராணவாயில். இங்கு பருந்து நோக்காகச் சிலச் செய்திகள் சுட்டப்பெறுகின்றன. இந்த இயலில் செட்டிநாட்டுப் பகுதியில் மிகுந்த பண்பாட்டுடனும் மிகுந்த பக்தியுடனும் சைவப் பெருமக்களாக, ஒன்பது கோயில் பிள்ளையார்களைக் குலதெய்வமாகக் கொண்டு ஒரே குலத்தவர் போல் சிறப்புடன் வாழ்ந்து வரும் **'நகரத்தார்'** பெருமக்கள் பட்டினத்தடிகளின் மரபில் வந்தவர்களே என்பது துணிவுடன் வற்புறுத்தப் பெறுகின்றது.

1. **தா.பா. எந்நாட்கண்ணி - அடியார்வணக்கம் -5**

**இரண்டாம் இயலில்** இந்த மகானின் வாழ்க்கை மக்கள் இயல்பைக் கடந்த செய்திகளும் விநோதக் கதைகளும் பல்கி 'மூடுபனிபோல்' இருக்கும் தெளிவற்ற நுலை சுட்டப் பெறு கின்றது. கிடைத்த மூலங்கள் **மூன்றும்** 'பஞ்சாமிருதம்' போல் - அவியல்' போல் - இருக்கும் நிலை காட்டப் பெறுகின்றது. இவர் புலவர்கட்கு மட்டிலும் எட்டும் புகழ்மிக்க புலவராகத் திகழ்வதைக் காண்கின்றோம்.

**மூன்றாம் இயலில்** பட்டினத்தடிகள் வரலாற்றுடன் வட மொழி - தமிழ் கலந்த மணிப்பிரவாளம்போல் பின்னிப் பிணைந்து கலந்து திகழும் பத்திரகிரியாரின் வரலாறு அமை கின்றது. இவர்தம் திருப்புலம்பலிலுள்ள பாடல்களில் பல சித்தாந்தக் கருத்துகள் கலந்து இருப்பதால் சித்தாந்த சாத்திரங் கள் தோன்றிய காலத்திற்கும் பிற்பட்டதாகக் கருதவேண்டிய நிலை பொருந்துவதாக அமைகின்றது இவர் காலம் என்பது குறிப்பிடப் பெற்றது.

**நான்காம் இயலில்** பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவராகக் கருதப் பெறும் - நம்பியாண்டார் நம்பியின் காலத்தில் உள்ளவரான ஐந்து பிரபந்தங்கள் படைத்த பெரும் புலவர் பெருமான் பட்டினத்தடிகள் என்ற பெயருடன் திகழ்ந்த ஒருவரின் வாழ்க்கைக் குறிப்புகளும் பிரபந்தங்களின் சிறப்புகளும் ஆராயப் பெறுகின்றது.

**ஐந்தாம் இயலில்** 'பிரபந்தத் திரட்டு' படைத்த பட்டினத் தடிகளின் வரலாற்றுக் குறிப்புகளும் பாடல்களின் புகழ்மிக்க சிறப்புகளும் விவரமாக ஆராயப் பெறுகின்றன. இவர்தம் பாடல்கள்தாம் மக்கள் வாழ்வுடன் பின்னிப் பிணைந்த மாணிக்கங்களாகத் திகழ்வதும் சில பாடல்கள் அவர்கள் நாவில் நளினமாக நடனமாடுவதுமான செய்திகள் விரிவாக விளக்கம் அடைகின்றன. இந்த இரு பெரியார்களும் காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து வந்தவர்களே.

**ஆறாம் இயலில்** செருகு கவிதைகளிலிருந்து அவதரித்த ஒரு கற்பனைப் படைப்பு அமைகின்றது; 'பல அநாமதேயங் கள்' கலந்த 'பட்டினத்தார்' என்ற திருநாமத்துடன் நடமாடும் ஒரு **'கற்பனைப் பெரியார்'** காட்டப் பெறுகின்றார். முதலிருவ ரைப் போல் ஓர் அன்னை வயிற்றிலிருந்து பிறந்து வளர்ந்து புகழ் பெற்றவர் அல்லர் இவர் என்பது விளக்கப் பெறுகின்றது.

இந்த அரிய சிறிய நூலுக்கு 'அணிந்துரை' வழங்கியவர் என்கெழுதகை நண்பர், ஒரு பொறியாளர், தொழிலதிபர்; இத்தனைக்கும் மேலாக ஒரு சைவ சித்தாந்தி; சைவ சமய நூல்களில் ஆழங்கால்பட்டவர். முத்து விழாக் கண்டவர் (அகவை 70). தொழில் துறையில் பல்வேறு தொழில் நிறுவனங்களின் தலைவராக இருப்பவர். வெளிநாடுகளுக்கு (அமெரிக்கா, இரஷ்யா, ஜெர்மனி, பிரிட்டன், ஃபிரான்ஸ், ஏமன், ஜப்பான், தூபாய் போன்றவை) நாடுகளில் நடை பெற்ற தொழில் துறை மாநாடுகளில் பங்கு கொண்டு நடைமு றையில் பயன்படும் பல ஆய்வுக் கட்டுரைகளை வழங்கி உலகப் புகழ் பெற்றவர்; பலப்பல விருதுகளையும் பெற்றவர். தவிர, கனடாவில் உள்ள யார்க் பல்கலைக் கழகத்திலும், பிற இடங்களிலும் சைவ சித்தாந்தத்திலும் பல ஆய்வுக் கட்டுரை கள் வழங்கிய தமிழ் இலக்கியப் புலவர். அண்ணாநகர் தமிழ்ச் சங்கம் பல்லாண்டுகட்கு முன்னரே இவரை என்கெழுதகை நண்பராகச் சேர்த்து வைத்தது. என்னுடைய **'நினைவுக் குமிழிகள்'** என்ற நூல் ஒன்றினை இவரால் வெளியிடும் அரிய வாய்ப்பினையும் பெற்றேன். இப்பொழுது இந்நூலுக்கு 'அ ணிந்துரை' பெறும் வாய்ப்பினையும் பெறுகின்றேன். பண் பாட்டுக்கு இலக்கியமாகத் திகழும் இவ்அரிய நண்பருக்கு என் இதயங்கலந்த நன்றி' உரியது.

இந்த நூலை பல்லாண்டுகள் நகரத்தார் பெருமக்களுடன் சேர்ந்து வாழவும், அவர்தம் பண்பாட்டுடன் கூடிய பக்தி நெறிகளில் கலந்து நுகரவும் வாய்ப்பு பெற்ற அப்பெருமக்க ளுக்கு அன்புப் படையலாக்கி மகிழ்கின்றேன்.

இந்த நூலை 87-ஆம் வயதில் அருளாசிரியர்களின் அருளிச் செயல்களில் ஆழங்கால்பட்டு நெஞ்சு நெக்குருகக் கண்ணீர்த் துளிகள் சிந்திய நிலையில் அவற்றை நுகரவும் அந்த நுகர்ச்சியை நூல் வடிவமாக்கவும் என்னுளே தோன்றாத் துணையாக எழுந்தருளியிருக்கும் மாதொரு பாகனாகிய கயிலைநாதனுக்கு எண்ணற்ற சரணாகதி வணக்கங்கள்.

**வேண்டத் தக்க தறிவோய்நீ;**
**வேண்ட முழுதும் தருவோய்நீ;**
**வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ;**
**வேண்டி என்னைப் பணிகொண்டாய்;**
**வேண்டி நீயா தருள்செய்தாய்**
**யானும் அதுவே வேண்டினல்லால்**
**வேண்டும் பரிசொன்று உண்டுஎன்னில்**
**அதுவும் உன்றன் விருப்பன்றே [2]**

**— மாணிக்கவாசகர்**

'வேங்கடம்
AD-13, அண்ணாநகர்
சென்னை - 600 040.
தொலைபேசி: 26211583

**ந.சுப்புரெட்டியார்**

2. திருவா குழைத்த பத்து - 6

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | அன்புப்படையல் | iv |
| | அணிந்துரை | v |
| | நூல்முகம் | xi |
| 1. | தோரணவாயில் | 1 |
| 2. | பட்டினத்தடிகள் வாழ்க்கை வரலாறு | 6 |
| 3. | பத்திரிகிரியார் | 15 |
| 4. | முதல் பட்டினத்தார் - படைப்புகள் | 23 |
| 5. | இரண்டாம் பட்டினத்தார் - படைப்புகள் | 63 |
| 6. | மூன்றாம் பட்டினத்தார்? | 124 |
| | **பின்னிணைப்பு** | |
| | பயன்பட்ட நூல்கள் | 128 |
| | பேராசிரியர் ரெட்டியாரின் நூல்கள் | 129 |

# இயல் - 1

# தோரணவாயில்

வெள்ளைப் பரிமுகர் தேசிக
ராய்விர கால்அடியோம்
உள்ளத் தெழுதியது ஓலையில்
இட்டனம் யாம்;இதற்குஎன்?
கொள்ளத் துணியினும் கோதுஎன்று
இகழினும் கூர்மதியீர்!
எள்ளத் தனைஉக வாதுஇக
ழாதுஎம் எழில்மதியே [1]

— **வேதாந்த தேசிகர்**

படைப்பு ஏணியில் மனிதன் தான் உயர்ந்த நிலையில் இருப்பவன். காலால் நடக்கும் உயிர் வகைகளுள் முதல் நிலையில் இருப்பவன். காலால் நடப்பவை யாவும் 'கால்நடை' என்று பெயரால் வழங்குவதற்கு ஏற்ப மனிதனைத் தவிர ஏனையவை தோன்றிய நாள் தொட்டு இன்று வரை காலால் நடந்து கொண்டிருப்பதால் 'கால்நடை' என்ற பெயரை நிலையாகப் பெற்றுள்ளன. இவையெல்லாம் ஐயறிவு பெற்றுள்ளவை. மனிதன் மட்டிலும்தான் காலால் நடப்பதுடன் பல்வேறு வகை ஊர்திகளைக் கண்டறிந்தவன். விண்வெளிப் பயணத்தில் பயன்படும் இராக்கெட்டு, விண்கலம் வரை கண்டறிந்து புகழ் பெற்றவன். இஃதெல்லாம் உடற் பயணம் பற்றியவை.

எல்லாப் பிராணிகட்கும் 'ஆன்மா' உண்டு. அது அப்படியே உடலுடன் நின்று வளர்ச்சி பெறாமல் குன்றிய நிலையிலேயே உள்ளது. மனிதனுடைய ஆன்மவளர்ச்சி பரமான்மாவை அடையும் வரை

1. தேசிகப் பிரபந்தம் - அதிகார சங்கிரகம் - 95

வளர்ச்சி பெற்றுத் திகழ்கின்றது. தன்னுடைய அறிவு வளர்ச்சியில் மொழியைப் படைத்து அம்மொழியின் துணையால் தன் அநுபவங்களையெல்லாம் பல துறை யாகப் பிரித்து மன்பதை உய்யும் பொருட்டுப் பதிவு செய்து வைத்துள்ளான்.

இத்தகைய நூல்களைப் படிக்கும் பயனை,

அறம்பொருள் இன்பம்வீடு
அடைதல்நூல் பயனே [2]

என்றும் மன்பதைக்கு வழிகாட்டும்பாங்கில் வரைந்து வைத்துள்ளான். மனித அநுபவங்களை கற்றல் 'கல்வி' என்பது. அக்கல்வியின் பயனையே இந்நூற்பா குறிப்பி டுகின்றது. வீடு பேறே நூல் கற்பதன் நோக்கம்; நூல் நுதலும் பொருளும் அதுவே. ஆன்மா பரம்பொருளை அடைவதற்கான வழியைச் சொல்ல வேண்டும்.

சொல்பவனாகிய புலவன் தன்னைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை என்பதே சங்க காலத்தின் பின் வந்துள்ள தமிழ்ப் புலவர் அனைவரும் கொண்டி ருந்த கருத்தாகும். இக்காரணத்தால் ஒரு புலவரையோ அவர் செய்த நூலையோ நாம் ஆராயப் புகுந்தால் உண்மைச் செய்திகள் கிடைப்பது அருமையிலும் அரு மையாக உள்ளது. புலவர் தம்மைப் பற்றிச் சொல்வது பெரும்பான்மையும் இல்லை. பின் வந்தோர் சொல்லும் கதைகளே நமக்குக் கிடைத்துள்ள பொருள். இவையும் படலம் படலமாக உண்மை காண முடியாமல் மறைப்ப வையாகவே அமைந்துள்ளன. பெரும்பாலும் இவை கற்பனை, உயர்வு நவிற்சியாக இருப்பதால் வரலாற்று ணர்ச்சிக்குப் பொருத்தமான செய்திகள் கிடைப்ப தில்லை.

2. நன்னூல் - பாயிரம் - நூற்பா - 10

சிறப்புப் பாயிரம் கூறுதல் என்ற ஒரு மரபு பண்டைக் காலத்தில் இருந்தது. அதன்படி ஆக்கியோன் பெயர், வழி, எல்லை, நூற்பெயர், யாப்பு, நுதலிய பொருள், கேட்போர், பயன் ஆகிய எட்டுப் பொருளும் இவற்றுக்கு மேலாக காலம், களன், காரணம் என்ற மூன்றையும் கூட்டிச் சொல்லலாம் என்பது.[3] எனவே, சிற்சில நூல்களையும் அவற்றை இயற்றிய ஆசிரியர்களையும்பற்றிய செய்திகள் சிறப்புப் பாயிரத்தினால் விளங்குகின்றன. பனம்பாரனாரின் தொல்காப்பியப் பாயிரம் மிகு புகழ் பெற்றது இருப்பினும் காலம், பெரும்பாலும் விளங்குவதில்லை; பல நூல்களுக்கு ஆசிரியர் இன்னாரென்று தெளிவாகாதபோது காலம் விளங்காதது வியப்பன்று. சில சமயங்களில் திருக்கோயில்களில் காணப்பெறும் கல்வெட்டுகளால் அறியப் பெறும் செய்திகளால் பல வரலாறுகள் விளக்கமுறுகின்றன.

புலவர் வரலாற்றிலும் சமயப் பெரியார் வரலாற்றிலும் மக்கள் இயல்பைக் கடந்த செய்திகளும் கதைகளும் பல்கிப் பெருகி 'மூடுபனிபோல்' அமைந்து உண்மையைக் காண முடியாமல் மறைக்கின்றன. உமாபதி சிவம், வேதாந்த தேசிகர், அருணகிரிநாதர் போன்றோர் வாழ்க்கை வரலாற்றில் இத்தகைய 'மூடுபனிகளைக்' காணலாம். அற்புத நிகழ்ச்சிகளால் நாம் எதையும் நிலைநாட்ட முடியும் என்று மக்கள் நம்பிக்கை கொண்டிருந்த காலத்தில் இத்தகைய 'மூடுபனிகள்' அதிகமாகத் தோன்றுதல் வியப்பன்று. ஆகவே, அற்புதச் செயல்களும் சம்பவங்களும்போல வழிவழியாக வருபவற்றையும் நாம் தவிர்க்க முடிவதில்லை. நாம் எழுதுபவற்றில் அவை கலந்தே வரும்.

3. மேலது - மேலது - நூற்பா 47,48

நூலாசிரியர்களின் பெயர்களும் குழப்பத்தை விளைவிக்கின்றன. ஒரே பெயரைக் கொண்டவர்கள் பலர். அவ்வையார், பட்டினத்தார் என்ற இரு பெயர் களை மட்டிலும் ஈண்டு நோக்கலாம். சங்ககால அவ்வை யார் ஒருவர்; இடைக்கால அவ்வையார் மற்றொருவர்; பிற்கால அவ்வையார் பிறர் ஒருவர். பின்னும் சிலரும் வாழ்ந்திருக்கக் கூடும். ஆனால், அவ்வையார் வரலாறுக ளில் ஒரே அவ்வையார்தான். அவரே அதிகமானைப் பாடிய சங்க நூற் புலவர்; அவரே சேரமான் பெருமாள் காலத்தில் இருந்தார்; அவரே ஆத்திசூடி மூதுரைப் பாடினார். அவரே விநாயகர் அகவலும் ஞானக்குறளும் பாடினார் என்பதே இதுவரை எழுதியுள்ள இலக்கிய ஆசிரியர்களின் கூற்றுகள். இக்கூற்றுகளை ஆராய்ந்து இன்னின்ன காலத்தில் இன்னவர் வாழ்ந்தார், அவரைக் குறித்த கதை இது, அவர் பாடிய பாடல் இது என்று பாகுபடுத்தி முடிவு காண்பது எளிதான செயலன்று. பட்டினத்தார் போன்றோருக்கும் இந்நிலைமை பொருந் துவதேயாகும். அடுத்துவரும் இயலில் பட்டினத்தடிக ளின் வாழ்க்கை வரலாறு கூறும்போது இத்தகைய இடர்ப்பாடுகளைக் காணலாம்.

பட்டினத்தார், பட்டினத்தடிகள், பட்டினத்துப் பிள் ளையார், திருவெண்காடர், திருவெண்காட்டடிகள் என் றெல்லாம் வழங்கப்பெறும் இப்பெருமகனார் பூம்புகார் என்று வழங்கப்பெறும் காவிரிப்பூம்பட்டினத்தில் தனவ ணிகர் குலத்தில் அவதரித்தவர். இலிங்கமாக மாறி திருக் கோயில் கொண்ட இடம் திருவொற்றியூர்.[4] இன்றும் சென்னை வாழ் நகரத்தார் தங்கள் இல்லத்தில் யாரேனும் சிவப்பேறு அடைந்தால், அவருக்குரிய எல்லாச் சடங்கு களும் திருவொற்றியூரில் செய்யப் பெற்று வருவது நடைமுறையில் இருந்து வருகின்றது.

4. செட்டிகுலப் பெருமக்கள் அனைவரும் இவரைத் தம் குலத்தவர் என்றே போற்றுகின்றனர்.

தண்ணீருக்குப் பயந்து தண்ணீர் இல்லாக் காட்டில் (செட்டிநாட்டுப் பகுதி) குடியேறினர் போலும் என்று என் அரிய கெழுதகை நண்பர் அமரர் கம்பன் அடிப்பொடி சா.கணேசன் அவர்கள் அடிக்கடிச் சொல்லி வருவதைக் கேட்டு மகிழ்ந்ததுண்டு.

காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து வந்தவர்கள் பட்டினத்தார் (பட்டினத்தடிகள், பட்டினத்தார் என்ற பெயர்களுடன் குழப்பம் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு) தங்களை 'நகரத்தார்' என்று வழங்கிக் கொண்டனர் போலும். நூலுள் காணப்பெறும் சில சொற்களும் இவர்களை 'நாட்டுக் கோட்டை நகரத்தார்' என்று பறை சாற்றிக் கொண்டுள்ளன. தவிர இக்குலத்தவர் மட்டிலுமே மலேசியா, சிங்கப்பூர், பர்மா முதலிய அயல்நாடுகட்குச் சென்று வாணிகம் செய்து வருகின்றனர்.[5] பட்டினத்தடிகள் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற முதுமொழிக்கிணங்க கடல் வாணிகம் செய்து வந்ததையொட்டி தாமும் அதனைத் தம் குலத் தொழிலாகக் கொண்டு அவ்வாறு செய்து வருகின்றனர் போலும் என்று கருதவும் இடந் தருகின்றது. இன்றளவும் இக்குலத்தார் மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் வாழ்ந்து வருவதையும் கருதலாம். வேறு செட்டி இனத்தைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு அயல்நாடுகட்குச் சென்று வாணிகம் செய்ததாக வரலாறு இல்லை என்பதும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

இன்னொரு செய்தியும் ஈண்டு கருதத்தக்கது. நகரத்தார் குலத்தில் இளையாற்றங்குடிக் கோயிலில், 'அரும்பார்க்கிளையார்' என்ற பிரிவினர் பட்டினத்தார் வழி வந்தவர்கள். ஆனதால் பட்டினத்தார் காலத்திற்குப் பின்னர் தங்களுக்கு 'அரும்பார்க் கிளையாரான பட்டணச் சாமியார்' என்று கோத்திரப் பிரிவு சூடிக் கொள்வராயினர். இச்செய்தியும் பட்டினத்தடிகள் நகரத்தார் குலத்தைச் சார்ந்தவர் என்ற உண்மைக்கு அரணாக அமைகின்றது.

5. பட்டினத்தடிகள் வெளிநாடுகளில் கப்பல் வாணிகம் நடத்தி வந்ததாக வரலாறு.

## இயல் - 2

# பட்டினத்தடிகள் வாழ்க்கை வரலாறு

**ந**ம் நாட்டில் வாழ்க்கை வரலாறும் நாட்டு வரலாறும் செம்மையாக அமையவில்லை. பொய்யும் புளுகும் புனைசுருட்டும் புராணங்கள் உருவில் பின்னிப் பிணைந்து கொண்டு அறிஞர்களையே மயக்குவதைக் காணலாம். இத்தகைய அடிப்படையில்தான் தல புராணங்கள் அதிகமாகப் பல்கி பெருகியுள்ளதையும் தெளியலாம். படிப்பதற்கே அருவருக்கத்தக்க குறிப்புகள் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் என்ற புராணத்திலும் புகுந்து கொண்டிருப்பதை ஊகித்து உணர்வார்க்குத் தெளிவாகத் தெரியும். மாபாதகங்கள் தீர்த்த படலங்கள் போன்றவை இதற்கு இமாலயச் சான்றுகள். அடியார்கள் அருவருக்கத்தக்க கற்பனைகளைப் படைத்து அவற்றை எல்லாம் வல்ல இறைவன் மீது ஏற்றி வைத்திருப்பது வியப்பினும் வியப்பாகும்.

பட்டினத்தடிகளைப் பற்றிய வரலாற்றில் ஒரு சில பொய்க் கதைகள் புகுந்து கொண்டிருப்பினும் அருவருக்கத்தக்கதாக ஒன்றுகூட இல்லாதிருப்பது நமக்கு மகிழ்ச்சியே. இவரைப் பற்றிய வரலாறு மூவரால் எழுதப் பெற்றுள்ளது. பிற்காலத்துப் பெரியார் ஒருவர் முதன் முதலில் ''பட்டினத்துப் பிள்ளையார் புராணம்'' என்ற ஒரு நூல் எழுதியுள்ளார். இதன் பின்னர் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தொழுவூர் வேலாயுத முதலியார் என்ற புலவர் 'திருவெண்காட்டடிகள் சரித்திரம்' என்ற ஓர் உரைநடை நூல் எழுதி வெளியிட்டுள்ளார். இந்த இரண்டு நூல்களே பட்டினத்தடிகளின் வரலாற்றுக்கு ஆதாரங்கள். இவற்றின் பின்னர் தண்டபாணி சுவாமிகள் தாம் செய்த புலவர் புராணத்தில் பல புதிய கதைகளையும் சேர்த்துப் பட்டினத்தார் சரித்திரமாகப் பாடியுள்ளார்.

இக்கதைகளை அறியப் புகுமுன் ஒரு செய்தி மனத்தில் கொள்ள வேண்டும். பட்டினத்தார் சரித்திரம் என்று வழங்குவதெல்லாம் முற்காலத்துப் பட்டினத்தாரைச்

சேருமா பிற்காலத்துப் பட்டினத்தாரைச் சேருமா அல்லது இருவர் பேரிலும் வழங்கும் கதைகளா - என்ப தொன்றும் துணிந்து கூற முடியாமல் உள்ளது. நம் நாட்டில் வரலாறு படைக்கும் ஆசிரியர்களுக்கு காலம் பற்றிய உணர்வு சிறிதும் இருப்பதில்லை. ஆகவே, நாம் இனிக் கூறப் போகும் வரலாறுகள் தொடர்பான ஒரே வரலாறாய் இருப்பினும் இவ்விருவருக்குமுள்ள கதைகள் சிறிது சிறிதாகச் சேர்ந்து நாளடைவில் வேறு கதைகளும் கலந்து ஒரே 'பஞ்சாமிர்தமாய்' ஓர் உருவம் பெற்றுள்ளன என்று உணர்தல் இன்றியமையாதது.

(1) **பட்டினத்தார் புராணம்:** இதனைப் பாடியவர் பெயரோ காலமோ அறியக்கூடவில்லை. இது பூம்புகார்ச் சருக்கம், ஆட்கொண்ட சருக்கம், துறவறச் சருக்கம் என்ற மூன்று சருக்கங்களை உடையது. திருவெண்காடர் பூம்புகார் நகரில் வணிகர் மரபில் தோன்றியவர். பட்டினத்துப் பிள்ளையார் என்பது அவர் குடிப் பெயர். திருவெண்காட்டில் வாழ்ந்தார்; பக்தி நிரம்பியவர். எண்ணற்ற மரக்கலங்கள் அவருக்குச் செல்வத்தைக் கொணர்ந்து குவித்தன. அந்நாளில் **சிவசருமர்** என்ற சிவவேதியர் மணம் முடிக்கப் பொருளுன்றி வருந்தி இருந்தார். இறைவன் ஓர் இளம் பிள்ளையாக அவர் வசம் வந்து தம்மை விலைக்கு விற்றுப் பொன் பெற்று மணம் செய்து கொள்ளுமாறு பணித்தார். அப் பிள்ளையைத் திருவெண்காடர் ஆயிரம் பொன் கொடுத்து விலைக்குப் பெற்றுச் சென்றார். இப்பிள்ளையைச் சொந்தப் பிள்ளையாகவே கருதி **மருதவாணர்** என்ற பெயரிட்டு வளர்த்து வந்தார். அப்பிள்ளை இறைவன் திருஉரு ஆதலால் திருவெண்காடர் இல்லத்தில் பல அற்புதங்களை நிகழ்த்தியது. அவற்றைக் கண்ட திருவெண்காடர் அப்பிள்ளையை இறைவன் வடிவமே என்று கருதி மிக்க பணிவுடன் நடந்து கொண்டு வந்தார். அவர் திருவெண்காடருக்கு உலக வாழ்க்கையின் பற்றை ஒழிப்பதற்காகச் செய்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. ஆகவே, ஒரு நாள் மருதவாணர் காதற்ற ஊசியை நூலோடு சேர்த்து ஒரு பட்டுத் துணியில் பொதிந்து அதை ஒரு அழகான பெட்டியில் வைத்து முத்திரையிட்டு திருவெண்காடரிடம் கொடுக்கும்படி தம் அன்னையாகிய இவர் மனைவியிடம் தந்து மறைந்தார்.

மருதவாணரைக் காணாத திருவெண்காடர் அவர் தந்த பெட்டியைப் பெற்று அதனைத் திறந்து பார்க்க, அதிலுள்ள காதற்ற ஊசியும் நூலும் கண்ணில் பட, அந்தக் கணமே அவரிடத்தில் பரஞானம் விளங்கப் பெறுகின்றது. வீடு, மனைவி முதலிய அனைத்தையும் துறந்தார். இவரிடம் அமைச்சராயிருந்த சேந்தனார் எவ்வளவோ சொல்லியும் பயன்படவில்லை; அவை விழலுக்கு இறைத்த நீர்போலாயிற்று. இங்ஙனம் துறந்த கோவணாண்டியான பட்டினத்தார் சுடுகாட்டில் சாம்பர் குவியலின்மீது அமர்ந்திருக்க, அந்நாட்டரசன் இவரைக் கண்டு பணிந்து, "இத்துறவடைந்து நீர் பெற்றது என்று வினவ, இவர் "நீ நிற்க யாம் இருக்க" என்று எளிதாக மறுமொழி பகன்றார். இந்நிலையில் சேந்தனார் வந்து வணங்கி தமக்கு என்ன கட்டளை என்று வினவ, அடிகள் 'உம் மனம்போல் செய்க' என்று மறு மொழி கூறினார்.

பின்னர் இவர் பல இடங்களில் பிச்சையேற்று உண்டு வரும் நாளில் இவர் செயல் தங்களுக்கு அவமானம் தருவதாகக் கருதிய உறவினர்கள், நஞ்சூட்டிய நெய்யப்பம் ஒன்றை இவர் தமக்கை மூலம் உண்ணக் கொடுத்தனர். உண்மையை உணர்ந்த அடிகள் "தன் வினை தன்னைச் சுடும்; ஓட்டப்பம் வீட்டைச் சுடும்" என்று சொல்லி அதனைக் கூரையில் செருகவே, வீடும் ஊரும் தீப்பற்றி எரிந்து சாம்பலாயின.

சில நாட்கள் உருண்டோடின. ஒருநாள் இவர் அன்னையார் காலமானபோது இவர் அவண் போந்து அவர்தம் திருமேனியை மயானத்தில் கிடத்தித் தம்பாடலாலேயே உடல் தகனம் ஆகும்படி செய்தார். பின்னர் அங்குப் பலருக்கு உபதேசம் செய்து, சில காலம் அங்கு இருந்துவிட்டுத் திருவிடைமருதூர் அடைந்தார். அங்கு சிவபெருமானே தம் நீர் விடாய்க்கு நீர் கொணர்ந்து வந்து தரப்பெற்றார். அப்பெருமான் திருவடி தம் மார்

பில் தீண்டவும் பெற்றார். பின்னர் மதுரையை அடைந்து எம்பெருமானை வணங்கி மீண்டும் திருவெண்காடு திரும்பினார்.[1]

பின்னர் இவர் திருத்தில்லையை அடைந்து சிற்றம்பலவன்மீது பல பாடல்கள் பாடி வணங்கி, திணைநகர், திருப்பாதிரிப் புலியூர், அதிகை, வெண்ணெய் நல்லூர், அண்ணாமலை அடைந்து அங்குள்ள எம்பெருமான்களைப் பணிந்து வணங்கி காஞ்சியை அடைகின்றார். அங்குப் பல நாட்கள் தங்கி அங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமான்மீது பல பாடல்கள் பாடி வழிபட்டு இருக்கும் நாளில் ஒரு நாள் நள்ளிரவில் ஓர் இல்லத்தின் வாயிலை அடைந்து பிச்சை கேட்கவே, அவ்வீட்டுக்கு உரியவன் இவரைக் கள்வன் என்று கருதி நையப் புடைத்தான். இதனைக் கண்ட அயல்வீட்டவன் இவரைக் கண்டு அடிகளாயிற்றே என்று உணர்ந்து இவரைப் பணிந்து மன்னிப்பு கேட்குமாறு அறிவுரை கூற, அவனும் அவ்வாறே அடிகளாரின் உபதேசமும் பெற்றான். பின்னர் இவர் ஆலங்காடு, காளத்தி சென்று அவ்விடங்களிலுள்ள எம்பெருமான்களைச் சேவித்து ஒற்றியூர் அடைகின்றார், அங்குள்ள எம்பெருமானை வழிபட்டுக் கொண்டிருந்த காலத்தில் ஒரு நாள் கடற்கரை மணற்குவியலில் விளையாடிய சிறுவர்களோடு தாமும் விளையாடியபோது ஒரு மணற் கூண்டில் புதைந்து சிவலிங்க வடிவமாக முளைத்தெழுந்தார். அவ்வூரினரும் காவிரிப் பூம்பட்டினம் வரையிலுள்ள பிற ஊரினரும் இச்செய்தி கேட்டு வியப்படைந்து இவர்தம் தெய்வத் திருமேனிக்கு ஆலயம் நிறுவி பூசை முதலியன குறைவற நடைபெற்று வரச் செய்தனர்.

1. இவ்விடத்தில் அடிகள் வாழ்க்கையில் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார் வரலாறு தொடர்கின்றது. இந்த வரலாறு பெரும் புகழ் பெற்றது. நாம் இங்கு கருதும் பட்டினத்தார் வாழ்க்கையில் இஃது இடம் பெறாது.

(2) **திருவெண்காட்டிகள் சரித்திரம்:** இது கூறுவது: இவர் தந்தை **சிவநேசர்;** தாய் **ஞானகலையம்மை.** இளமையில் தந்தையார் சிவபதம் அடையவே, அன்னையார் அருமருந்தன்ன மகனை நன்கு பேணி வந்தார். ஒருநாள் இளம் பிள்ளையாகிய திருவெண்காடர் சிவபூசை செய்ய எண்ணியபோது திருவிடைமருதூரில் இருந்த சிவவேதியர் வந்து இவருக்குத் தீட்சை செய்வித்து பூசை செய்ய ஆன்மார்த்த இலிங்கத்தையும் அளித்தார். குருவுக்குத் தட்சிணை கொடுக்கப் பொருளின்றி இவர் மனம் கவன்றபோது இறைவன் அருளால் அளவற்ற செல்வம் பெற்றுக் குருதட்சிணை கொடுத்தார். பின் **சிவகலையம்மை** என்ற திருநாமமுடைய நங்கையொருத்தியை மணந்தார்.

ஒருநாள் சிவபெருமான் திருவிடைமருதூரில் சிவபக்திச் செல்வராய் வறுமையுற்றிருந்த **சிவசருமர், சுசீலை** என்ற இருவரிடமும் ஒரு தெய்வக் குழந்தையாய்த் தோன்றி, தம்மைக் கொண்டு போய் திருவெண்காடரிடம் பொருளுக்கு விற்று வறுமைப் பிணியைப் போக்கிக் கொள்ளுமாறு கட்டளையிட்டார். அவ்வாறே தம்மிடம் வந்த குழந்தையைத் திருவெண்காடர் பெற்று **மருதவாணர்** என்ற பெயரிட்டு வளர்த்து வந்தார். குழந்தைப் பருவத்தில் மருதவாணரிடம் தெய்வத் தன்மை திகழ்ந்தது. தீவாந்தரவாணிகம் எல்லாம் செய்து கப்பலில் வறட்டிகள் நிரப்பி அவற்றின்மூலம் மாணிக்கம் வெளிப்படச் செய்து திருவெண்காடருக்குப் பெரும் செல்வம் கிடைக்குமாறு செய்தார். திருவெண்காடருடைய மனப் பக்குவம் முதலியவற்றை நோக்கி, ஒரு பெட்டியில் 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே' என்றெழுதிய ஓலை நறுக்கும் காதற்ற ஊசியும் வைத்துத் திருவெண்காடரிடம் தருமாறு கொடுத்து அனுப்பி மறைந்து விட்டார். பிள்ளையைக் காணாது தேடிய திருவெண்காடர், அப்பெட்டியைப் பெற்றுத் திறந்து

பார்த்தவுடனேயே உண்மை ஞானம் கைவரப் பெற்று அக்கணமே பாரனைத்தும் பொய் என்று துறந்தார். மெய்ஞ்ஞான உணர்ச்சி மிகுந்த பாடல்கள் அவரிடமிருந்து மழை வெள்ளம் போலப் பிரவாகம் எடுத்து வரத் தொடங்கின.

வாதுஉற்ற திண்புயர் அண்ணா
மலையார் மலர்ப் பதத்தைப்
போதுற்ற போதும் புகலுநெஞ்
சே!இந்தப் பூதலத்தில்
தீதுஉற்ற செல்வம்என் தேடிப்
புதைத்த திரவியம்என்
காதுஅற்ற ஊசியும் வாராது
காணும் கடைவழிக்கே

என்பது போன்ற பாடல்கள் பாடினார். இவர்தம் ஆணையின்படி செல்வத்தைத் தருமம் செய்த சேந்தனை அரசன் சிறை செய்து பின்னர் இவர்தம் பெருமையை உணர்ந்தான். சின்னாட்களில் இவர்தம் அன்னையார் சிவப்பேறு அடைந்தபோது இவர்,

முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள்சுமந்தே
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்.

என்பது முதலான பாடல்கள் பாடித் தாயாரின் திருமேனியை ஞானாக்கினியால் எரியூட்டினார்.

பின்னர் திருவிடை மருதூரில் தங்கி அங்கிருந்து பல தலங்களுக்கும் சென்று இறைவர்களைச் சேவித்தார். அக்காலத்தில் இவர் பாடிய பாடல்களும் நிகழ்த்திய அற்புதங்களும் மிகப் பல. இவரிடம் அருள்பெற்ற ஓர் இளைஞன் மணமான பின் தெய்வ கதியாய் இறந்தது அறிந்து இவர் பாடிய பாடல் ஒன்று மிகவும் உருக்கமானது:

வடிவந் தானும் வாலிபம்;
மகளும் தாயும் மாமியும்
படிகொண் டாரும் ஊரிலே
பழிகொண் டாடல் நீதியோ?
குடிவந் தானும் ஏழையோ?
குயவந் தானும் கூழையோ
நடுநின் றானும் வீணனோ
நகரஞ் சூறை யானதே. [2]

என்பது அப்பாடல்.

இவர் உஞ்சேனை மாகாளம் என்ற ஊரை அடைந்தபோது, அங்கு நிகழ்ந்த செய்திகளை இந்நூலின் பத்திரகிரியார் வரலாற்றில் காணலாம்.

அங்கிருந்து மீண்டும் திருவிடைமருதூர் திரும்பி, பல நாள் அங்குத் தங்கிப் பின்னர் திருவெண்காடு அடைந்து பின்னும் பல தலங்கள் சுற்றிக் காஞ்சி அடைந்து காமாட்சி அம்மை அருளிய உணவை உண்டு பின்னர் திருவொற்றியூரை அடைந்தார். அங்கு உள்ளம் உருகத் தக்க பல பாடல்களைப் பாடினார்; பரவச நிலையில் திளைத்தார். பின்னர்த் தெளிந்தார். அங்குத் தங்கி இருந்தபொழுது கடற்கரை சென்று பசு மேய்த்த சிறுவர்களோடு களித்து விளையாடிக் காலம் போக்கினார். ஒருநாள் அவர்கள் தம்மை மணலில் புதைத்து விளையாடிய பொழுது தம் உருக்கரந்து சிவலிங்க வடிவமாக முளைத்து நின்றார்.

(3) தண்டபாணி சுவாமிகளின் புலவர் புராணம்: இங்கு மேலும் சில செய்திகள் காணப்பெறுகின்றன. திருவெண்காடர் பாணர் குலத்தவரால் மந்திரோபதேசம் செய்யப் பெற்றார். பின்னர் புதல்வன் இல்லாதிருந்து திருவிடைமருதூர் வேதியரிடம் புதல்வனை வாங்கிக்

2 இந்தப் பாடல் 'பாடல் திரட்டில்' காணப் பெறவில்லை.

கொண்டார். அப்பிள்ளை அபரிமிதமான இலாபம் சம் பாதித்துத் தந்ததும், ஒருமுறை பொருளையெல்லாம் போக்கிவிட்டமையால் அவரைச் சிறையிலடைத்தார். பிள்ளையோ திருவெண்காடர் மனைவியான சிவகலை அம்மையாரிடம் மட்டிலும் தமது தெய்வக் கோலத் தைக் காட்டி மறைந்தார். பிள்ளையை இழந்த தாயும் சின்னாளில் சிவகதி அடைந்தாள். ஆனால், திருவெண் காடருக்குச் செல்வ மயக்கம் நீங்கவில்லை. ஒருமுறை அவர் கப்பலேறி பொருள் தேடச் சென்றிருந்தபோது குருவாகிய பாணர் தம் மனைவியிடம் காதற்ற ஊசிக ளைக் காட்டி "போங்கால் இவைகூட வாரா" என் றொரு சீட்டெழுதி வைத்துத் திருவெண்காடரிடம் தரும் படி தம் மனைவியிடம் கொடுத்துச் சிவபதம் அடைந் தார். வந்த திருவெண்காடர் ஊசிகளையும் சீட்டையும் கண்டு உடனே மெய்ஞ்ஞானம் வரப் பெற்றார்.

பின்னர் சிவத்தலப் பயணத்தை மேற்கொண்டு வரும்போது சிவபெருமான் ஆசாரியன் உருவோடு தோன்றி இவர் கையில் ஒரு பேய்க் கரும்பைத் தந்து "இஃது எந்தத் திருத்தலத்தில் இனிக்குமோ அதுவே உனக்கு இறப்பும் பிறப்புமில்லாச் சிவகதி அளிக்கும்த லம்" என்று சொல்லி மறைந்தார். கரும்பு சிறிதும் வாடாமல் உலராமல் இருந்தது. எல்லாத் தலங்களிலும், கசந்த இந்தக் கரும்பு ஒற்றியூரில் இனித்தது கண்டு அதுவே தாம் முக்தி அடையும் தலம் என்று உய்த்து ணர்ந்து, அங்குக் கடற்கரையில் சிவலிங்கத் திருமேனி யானார்.

ஒரு வரலாற்றில் உண்மைக் கருத்துகள் ஊடுருவி அமைதலைவிட பொய்க் கதைகள் விரைவாகவும் ஊடு ருவிச் சென்று அமைதல் உலகியல்பாக இருத்தலைக் காணலாம். ஒரு பொய் வதந்தி பரவுவதை நோக்கினால் அதனை மக்கள் எவ்வாறு சுவைத்து வேகமாகப் பரப்பு வதைக் காணலாம். அரசியல்வாதிகளிடம் இப்பண்பு

விரைவாகச் செயற்படுவதை அறிஞர்கள் நன்கு அறிவர். இத்தகைய உண்மை பட்டினத்தார் வாழ்க்கையிலும் புகுந்து விளையாடுவதைக் கண்டு மகிழலாம். வெண்காடர் உருவப் படங்களில் அவர் கையில் ஒரு கரும்பு காணப்படும்.

> **கண்டம் கரியதாம் கண்மூன் றுடையதாம்**
> **அண்டத்தைப் போல அழகியதாம் - தொண்டர்**
> **உடலுருகத் தித்திக்கும் ஓங்குபுகழ் ஒற்றிக்**
> **கடலருகே நிற்கும் கரும்பு.**

என்ற பாடலில் அடிகள் ஒற்றியூர்ப் பெருமானையே கரும்பாக உருவகித்து மகிழ்ந்து பாடியதை அறியாமல் பிற்காலத்தில் இப் பேய்க் கரும்புக் கதை கட்டிவிடப் பெற்ற கதை என்பது அறிஞர்கட்குத் தெளிவாகத் தெரியத்தான் செய்யும்.

பட்டினத்தார் பாடியனவாக அவர் புராணம் கூறும் முதற்குறிப்புடைய பல பாடல்கள் இன்று கிடைக்கவில்லை. '**தங்களைக் கேட்டுப் பிறந்திலம்**', '**அருள்கூர்**', '**வையமுய்ய**', '**பன்னாக வாடகப் பொற்பாதம்**' என்பன அப்பாடல்களாகும். அன்றியும் '**மெய் நாட்டோர்**' என்ற முதற்குறிப்புடைய பாடலை முதலாகவுடைய 'மாலை' ஒன்று அவர் செய்ததாகப் புராணம் கூறும். இதுவும் இன்றும் கிடைக்கவில்லை.

பட்டினத்தடிகள் வாழ்க்கையோடு தொடர்புடைய மற்றொரு பெரியார் பத்திரகிரியார். இவர் காலம் ஏறக்குறைய கி.பி.1400 ஆகலாம். இதனை அவர் வாழ்க்கையின் போது காண்போம்.

# இயல் - 3

## பத்திரகிரியார்

'**ப**த்திரகிரியார்' என்ற பெரியார் வரலாறு பட்டினத்தடிகளின் வரலாற்றோடு பிணைந்துள்ளது. தமிழ் நாடு நன்கறிந்த பட்டினத்தடிகள் காதற்ற ஊசியைக் கண்டு அக்கணமே பாரனைத்தும் பொய் எனக் கண்டு, உணர்ந்து, தம் வாழ்க்கையைத் துறந்து, உடுத்த கோவணத்தோடு நாடெங்கும் சுற்றி கொங்கு நாடு கடந்து, துளுவ நாடு அடைந்தார். அங்குள்ள **உஞ்சேனை மாகாணம்** என்ற ஊரின் புறத்தேயுள்ள கணபதி கோயிலில் தங்கியிருந்தார். அச்சமயம் அவ்வூரை ஆண்ட அரசன் **பத்திரிகிரி.** அவனுடைய அரண்மனையில் சில கள்வர் புகுந்து அணிகலன்களைக் கவர்ந்து ஓடினர். ஓடிய வழியில் ஒரு கணபதிக் கோயில் இருந்தது. தாங்கள் திருடப் போகும் முன் அவர்கள் இப்பிள்ளையாரை வணங்கித் தங்களுக்குப் பொருள் கிடைத்தால் இவருக்கும் ஒரு பங்கு தருவதாக வழிபாடு செய்து சென்றிருந்தமையால் அதன்படி இப்பொழுது இங்குப் போந்து ஒரு மாணிக்க மாலையைப் பிள்ளையார் கழுத்தில் எறிந்து விட்டுப் போயினர். அவர்கள் எறிந்த மாலை பிள்ளையார் கழுத்தில் விழவில்லை. அந்த இருளில் பிள்ளையார் உருவத்தின் பின்னே நிட்டையோடு இருந்த பட்டினத்தடிகளின் கழுத்தில் விழுந்தது. தம்மை மறந்த நிலையில் தியானத்திலிருந்த அடிகட்கு இதனை அறியும் உணர்வு இல்லை.

கள்வர்களைத் தேடி வந்த அரண்மனைக் காவலர்கள் இக்கோயிலில் கள்வர்கள் ஒளிந்திருக்கக் கூடும் என்று ஐயுற்று கோயிலில் நுழைந்து பார்த்தபோது கழுத்தில் மாணிக்க மாலையோடு இருந்த பட்டினத்தடிகளைக் கண்ணுற்றனர். இவர்தம் மௌனநிலையைக்

கண்டு உண்மையை ஓராது 'இவனே கள்வன்; பொய் யாக நடிக்கின்றான்' என்று முடிவு செய்து பிற கள்வர்க ளைக் காட்டுமாறு துன்புறுத்தினர். காவலன் ஒருவன் கடுக ஓடிச் சென்று அரசனை அடைந்து மாணிக்க மாலையைக் காட்டி "இக்கள்வனைத் தக்கபடி ஒறுத் தால், களவு போன பிறப் பொருள்களும் அகப்படும்" என்று கூறினான். அரசன் அவனியைத் துறந்து ஆண்டி யாக வேண்டிய காலம் நெருங்கிக் கொண்டிருந்தமை யால், காவலன் கூற்றை நம்பினான். அக்காலச் சட்டப் படி களவுக்குக் கழுவேற்றுதல்தான் தண்டனை என்றி ருந்தபடியால், இக்கள்வனுக்கு அவ்விதமே தண்டனை வழங்குமாறு கட்டளையிட்டான் காவலன்.

காவலர்கள் அரசன் ஏவற்படி அவ்வாறே செய்ய முற்பட்டனர். தம்மைக் கழுவிலேற்றியதும் பட்டினத்த டிகள் நிட்டை கலைந்து உணர்வு பெற்றார். நிலை மையை உணர்ந்தார்.

என்செயல் ஆவது யாதும்ஒன்றும்
இல்லை இனித்தெய்வமே
உன்செய லேஎன்று உணரப்பெற்
றேன்இந்த ஊன்எடுத்த
பின்செய்த தீவினை யாதுஒன்றும்
இல்லை, பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோ,இங்ங
னேவந்து மூண்டதுவே. [1]

என்ற பாடல் அவர் திருவுள்ளத்தினின்றும் பிறந்தது. "படு உடலே படு" என்று சொல்ல, அக்கணமே கழுமரம் தீப்பற்றி எரிந்தது. செய்தியைச் செவியுற்ற அரசன் தான் தவறு செய்து விட்டதை உணர்ந்து கடுக ஓடி வந்து தீக்கொழுந்தின் அருகிருந்த தவச்சுடராகிய அடிகளைக் கண்டான். கண்டவுடன் அடிகளின்

1. திருத்தலங்கள் மீது பாடியவை: (9) பொது - 22

திருக்கண் நோக்கால் அரசன் பக்குவம் அடைந்து அவர் தம் திருவடிகளில் வீழ்ந்து, ''அடிகள் பெருமானே, அடியேன் அறியாமையால் இழைத்த பிழையைப் பொறுத்தருளி அடியேனையும் ஆட்கொள்ள வேண்டும்'' என்று இறைஞ்சினான்.

அவனுடைய பக்குவமன நிலையைக் கண்ணுற்ற பட்டினத்தடிகள் அக்கோமகனைத் திருவிடைமருதூர் ஏகுமாறு பணித்தார்; திருவிடைமருதூர்ப் பெருமானாகிய மருதவாணர் தமக்குப் பிள்ளையாக சில காலம் வந்திருந்தமையால் பட்டினத்தடிகளுக்கு அத்தலத்தின் மீது ஈடுபாடு மிகுதி. அக்கட்டளையின்படியே பத்திரகிரியாரும் தம் அரசுரிமையை அக்கணமே உதறித் தள்ளி துறவுக் கோலம் பூண்டு பல நாள் பயணம் செய்து திருவிடைமருதூரை அடைந்தார். அடிகளும் அதேசமயம் தமது பயணத்தை முடித்துக் கொண்டு அங்கு வந்து கீழ்க்கோபுர வாயிலில் தங்கினார். பத்திரகிரியாரும் பிச்சை ஏற்று வந்து குரு நிவேதனம் செய்து சேடத்தைத் தாமே உட்கொண்டு குருநாதரின் திருக்குறிப்பின்படி சிவயோக நிலையில் மேலைக் கோடி வாயிலில் அமர்ந்தார்.

பத்திரகிரியாரின் பக்குவ காலம் நெருங்கி வந்தது. ஒருநாள் அவர் தம் குருநாதரின் பரிகலச் சேடம் உண்ணுகையில் விதிவசத்தால் ஒரு பெண் நாய்க்குட்டி பசியோடு அவரிடம் வாலைக் குழைத்துக் கொண்டு நின்றது. அதன் நிலையைக் கண்டு இரங்கி தாம் உண்ட பிரசாதத்தில் ஒரு பகுதியை அதற்கு அளித்தார். இதன் பின் அந்த நாய்க்குட்டி அவரை விட்டுப் பிரியாது நாடோறும் அவரிடம் பிரசாதம் உண்டு கொண்டு கூடவே இருந்து வந்தது.

இந்த நாய்க்குட்டி முற்பிறப்பில் ஒரு துர்த்தை. ஒரு சமயம் தானும் தன் சோர நாயகனும் உண்ட உணவுச்

சேடத்தைக் குருதேவர் ஆணை வழி ஒழுகிய ஒரு சிவஞானி கையில் பிச்சையாக்க, அதனை அவர் பெற்றுக் குருநாதர் பிரீதியாக்கிப் பின் பசி தீர்ந்து சென்றார். இப்பாவச் செயலால் அவள் அப்பிறப்பில் கொடுந் துன்பங்களை அடைந்தாள். மறுபிறப்பில் நாயாய்ப் பிறந்து எப்படியும் ஞானியின் பசி தணித்த புண்ணியத்தால் பத்திரகிரியாருடைய உணவுச் சேடத்தை உண்டு வாழ்ந்திருந்தாள்.

இந்நிலையில், இந்த நாய்க்கும் பத்திரகிரியாருக்கும் இரு வினை ஒப்பு நேர்ந்திருந்தமையால் சிவபெருமான் இவர்களுக்கு முக்தியளிக்கத் திருவுளங் கொண்டார். ஒரு சித்த வேடத்துடன் பட்டினத்தடிகள் திருமுன் சென்று, "என்பசி தீர்க்க வேண்டும்" என்று வேண்டினார். பட்டினத்தடிகள் பத்திரகிரியாரின் நிலையை ஞானத்தால் உணர்ந்து, "ஐயன்மீர், அடியேன் இந்தக் கோவணத்தையே பாரமாகக் கருதுபவன். மேற்குக் கோபுர வாயிலில் ஒரு சமுசாரி உள்ளான். அவன் தேவரீருக்கு அன்னம் இடுவான். அவண் ஏகுவீர்" என்று ஆற்றுப்படுத்தினார். அங்ஙனமே அச் சித்தரும் பத்திரகிரியாரிடம் சென்று பட்டினத்தடிகள் பகன்றதைக் கூறி அன்னம் அளிக்குமாறு வேண்டினார்.

சித்தர் கூறியவற்றைக் கேட்ட பத்திரகிரியார் மிகுந்த அச்சம் எய்தினார். நிகழ்ந்தவற்றைக் குறிப்பினால் உணர்ந்தார். "இந்தப் பிச்சை ஓடும், இந்த நாய்க்குட்டியும் அல்லவா அடியேனைச் 'சமுசாரி' என்று குருநாதர் கூறும்படி செய்தன?' என்று கூறிக் கோபத்தோடு ஓட்டை நாய்மீது வீசி எறிந்தார். ஓடும் உடைந்து சில்லிகளாயிற்று; நாயும் மாண்டது. பத்திரகிரியார் நிகழ்ந்தது உணர்ந்து, முத்தி ஒன்றே விரும்பியவராகி, 'திருப்புலம்பல்' என்ற பாட்டைப் பாடி அங்கேயே சிவபோகம் எய்தி இருந்தார்.

அந்த நாய்க்குட்டி காசி ராசன் மகளாகப் பிறந்து வளர்ந்து மங்கைப் பருவம் அடைந்தது. அரசன் அவளுக்கு மணம் செய்விக்க முற்பட்டபோது அவள், “தந்தையே, என்னை இப்போது மணத்தில் ஈடுபடுத்த வேண்டா; என் குருநாதர் திருவிடைமருதூர் மேலைக் கோபுர வாயிலில் இருக்கிறார். அவரிடம் என்னை இட்டுச் செல்வீராக” என்று வேண்டினாள். அரசனும் அதிசயித்து அவ்வாறே இட்டுச் சென்று பத்திரகிரியார் முன்பு விட்டான். சிவபோகத்திலிருந்த பத்திரகிரியார் கண் விழித்துப் பார்த்து இப்பெண்ணை நோக்கலும், இப்பெண் “குருநாதரே, அடி நாய் மீண்டும் தேவரீரின் திருவடியை நாடி வந்தது” என்று இயம்பினாள். நிகழ்ந்தவற்றை அருள் நோக்கோடு உணர்ந்தார் பத்திரகிரியார். அப்பெண்ணை அழைத்துக் கொண்டு கீழைக் கோபுர வாயிலில் இருந்த பட்டினத்தடிகள் திருமுன் சென்று, “அடிகள் பெருமானே, நும்முடைய பிரசாத சேடம் உண்ட நாய்க்கும் இப்பிறவி நோய் வரலாமா?” என்று விண்ணப்பம் செய்தார். இவற்றைக் கேட்ட பட்டினத்தடிகள் இறைவன் திருவருளையே எண்ணியிருக்க, அவ்விடத்தே ஒரு பெரும் சோதி தோன்றியது. அச்சோதியில் பத்திரகிரியாரும் அப்பெண்ணும் கலந்து மறைய சோதியும் மறைந்தது.

இது சம்பிரதாயமாக மக்களிடையே வழிவழியாக வழங்கி வரும் பத்திரகிரியாரின் வரலாறு. இதில் அடங்கியுள்ள அற்புதங்கள் ஒருபுறம் இருந்தாலும் பத்திரகிரி என்ற ஓர் அரசர் இருந்து பட்டினத்தடிகள் திருநோக்கால் உலகனைத்தையும் ஒரே கணத்தில் துறந்து[2] பின் திருப்புலம்பல் பாடல்கள் பாடி உரிய காலத்தில் முக்தி அடைந்தார் என்பது மட்டிலும் உண்மை.

2. “துறவாவது, பறறறத துறததல கனமததை நீஙகலாவதெப்படி? பட்டினத்தார், பத்திரகிரியார், வாமதேவர், சடபரதா முதலாயினோர் பற்றற நிற்றல் போல” என்பது அறியபபடும் (வள்ளலாா சரிததிரம்)

'ஒட்டுடன் பற்றுஇன்றி உலகைத் துறந்தசெல்வப்
பட்டினத்தார் பத்திரகிரி பண்புணர்வ தெந்நாளோ?[3]

என்று இவரைத் தாயுமான அடிகளும் பாராட்டுவதை நாம் அறிவோம்.

**திருப்புலம்பல்:** 235 கண்ணிகளைக் கொண்ட 'திருப் புலம்பல்' என்ற ஒரு சிறு நூல் பாடியுள்ளார் பத்திரகிரி யார். ஒவ்வொரு கண்ணியும் 'எக்காலம்?' என்று முடி வது. இந்நூல் **'திருப்புலம்பல்'** என்றும் **'மெய்ஞ்ஞானப் புலம்பல்'** என்றும் பெயர் பெற்று வழங்கி வருகின்றது. பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன் ஆகிய கருத்து பாருக்குள் பஞ்சவர்ணங்கள், ஆன்மா கருவிக ளோடு அவத்தைகளில் புகுதல், ஐந்தெழுத்து, குண்டலி னியோகம், பிறவி வகைகள், பாற்பசு என்ற திருமந்திரக் கருத்து, அட்டாங்க யோகம், புழு குளவி உருக்கொள் வது, ஊமன் கண்ட கனா, திருச்சிலம்பின் ஓசை ஆகிய கருத்துகள் இப்பனுவலில் காணப் பெறுகின்றன. யாவும் சித்தாந்த சாத்திரத் தொடர்கள், கருத்துகள். ஆகவே, இப்பனுவல் சித்தாந்த சாத்திரங்களுக்குப் பிற் பட்டது எனக் கருதுவது பொருந்துவதாகின்றது.

மேலும், சிறப்பான மற்றோர் ஒற்றுமை இப்பனுவ லில் காணப் பெறுவது ஈண்டுக் கருதத்தக்கது. இதன் கண்ணியொன்று,

எவரெவர்கள் எப்படிக்கண்டு எந்தப்படி நினைத்தார்
அவரவர்க்குத் தான்அப்படி ஆவதுவும் எக்காலம்
(178)

என்பது. இதன் கருத்தும் சொற்களும் தத்துவப் பிரகா சத்தின்,

தேவனே எவரெவர் எப்படிச் சிந்தித்தார்
சிந்தித்த இடத்தந்த வடிவாகை திடமே. (178)

3. தா.பா: எந்நாட்கணணி அடியார் வணக்கம் - 5

என்ற பாடலில் ஞானத்தில் கிரியை என்ற பகுதியில், பூசையை முடித்தவிடத்து வேண்டுகோளாகக் கூறும் இடத்துக் காணப்படுகின்றன. இதனால் பத்திரகிரியார் தம் பாடல் கருத்துகளையும் சொற்களையும் தத்துவப் பிரகாசத்திலிருந்து எடுத்துக் கொண்டுள்ளார் என்பதைத் தெளிவாக உணர முடிகின்றது. இன்னும் இப்பெரியவர் மெய்கண்ட ஞான பரம்பரையில் வந்த ஆசாரியர் ஒருவ ரிடம் உபதேசம் பெற்றிருந்தார் எனக் கருதுவதும் பொருந்தும். தத்துவப் பிரகாசம் செய்த தத்துவப் பிரகா சர் காலம் கி.பி. 1350-75 எனத் தெரிவதால், இவர் காலம் சற்றுப் பின்னதாக இருத்தல் பொருந்தக் கூடி யதே. 14-ஆம் நூற்றாண்டு இறுதிதான் இவர் காலம் என்று முன்னர் கருதியது பலவகையிலும் ஏற்புடைய தாக அமைகின்றது.

பாமர மக்கள் இந்நூலை நன்கு கற்றுப் பாடிப் பயன் பெற்றுள்ளனர். இக்காரணம்பற்றி இதனுள் நூலுக்குப் பொருந்தாத பல இடைச் செருகல்களாகப் பிற்காலங்களில் சேர்க்கப் பெற்று விட்டனவாகத் தோன்றுகின்றது. அக்கால இயல்பையொட்டி 'மாத ரைப் பழித்தல்' என்ற கருத்துப் படக் காணப்படும் பாடல்கள் இத்தகையனவாக இருக்கலாம். இவை யாவும் இடைச் செருகல்களேயாகும்.

பல பாடல் கவிதைச் சுவை ததும்பித் திகழ்கின்றன. சில பாடல்களை ஈண்டுத் தருவேன்.

ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்? (1)

பேய்போல் திரிந்து, பிணம்போல் கிடந்துபெண்ணைத்
தாய்போல் நினைத்துத் தவமுடிப் தெக்காலம்? (8)

மன்னுயிரைக் கொன்று வதைத்துண் டுழலாமல்
தன்னுயிர்போல் எண்ணித் தவமுடிப்ப தெக்காலம்? (14)

அவவேடம் பூண்டிங்கு அலைந்து திரியாமல்,
சிவவேடம் பூண்டு சிறந்திருப்ப தெக்காலம்?

ஆகம் மிகவுருக அன்புருக, என்புருக
போக அநுபூதி பொருந்துவது எக்காலம்?

பத்திரகிரியார் சித்தருள் ஒருவர் என்பதற்கு சித்தர் ஞானக்கோவையன்றி வேறு ஆதாரம் தெரியவில்லை. தேவகணங்கள் பதினெட்டு என்ற வரலாறு பதினெண் சித்தர் வரலாறு எழக் காரணமாகயிற்றோ என்று கருத லாம். சித்தர் ஞானக் கோவை பெரும்புலவர் மே.வீ. வேணுகோபால் பிள்ளையவர்களால் பாடல்கள் செப்பம் செய்யப் பெற்றுப் பதிப்பிக்கப் பெற்றது (1947).

# இயல் - 4

## முதற் பட்டினத்தார் - படைப்புகள்

முதற் பட்டினத்தார் நம்பியாண்டார் நம்பியால் குறிப்பிடப் பெற்றவர். நம்பிகளின் காலம் பத்தாம் நூற்றாண்டின் இறுதி. இவர் பாடியனவாகவுள்ளவை ஐந்து பிரபந்தங்கள். அவை:

1. கோயில் நான்மணிமாலை
2. திருக்கழுமல மும்மணிக் கோவை
3. திருவிடைமருதூர் மும்மணிக் கோவை
4. திருஏகம்பமுடையார் திருவந்தாதி
5. திருஒற்றியூர் ஒருபா ஒருபஃது

என்பனவாகும். இந்நூல்கள் சொல்லழகும் பொருட்சுவையும் நிரம்பி பக்திச் சுவை நனி சொட்டும் பாங்கில் சைவ சாத்திர விளக்கங்களைக் கொண்டு அடியார்களும் புலவர்களும் போற்றுகின்ற இலக்கியங்களாகத் திகழ்கின்றன. இவை பதினோராந் திருமுறையில் நம்பிகளால் தொகுக்கப் பெற்றுள்ளன.

இப்பிரபந்தங்களில் இப்பட்டினத்தார் வரகுண பாண்டியனைக் குறிப்பிடுகின்றார். இப்பாண்டியன் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு ஆகும். ஆதலால் இப்பட்டினத்தார் 9ஆம் நூற்றாண்டுக்குப் பின்னும் நம்பியாண்டாரின் காலமாகிய 10ஆம் நூற்றாண்டின் இறுதிக்கு முன்னும், அதாவது 10ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவராகக் கொள்ள வேண்டியவராகின்றார்.

இனி, இப்பிரபந்தங்களை ஒவ்வொன்றாக ஆழ்ந்து நோக்குவோம்; பாடல்களிலும் ஆழங்கால் பட்டு அநுபவிப்போம். பக்திச் சுவையிலும் மூழ்க முயல்வோம்.

(1) **கோயில் நான்மணிமாலை:** வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், இணைக்குறள் ஆசிரியப்பா என்ற நால்வகைப் பாக்களும் ஒன்றன்பின் ஒன்றாக அந்தாதித் தொடையில் அமையுமாறு தொகுக்கப் பெற்றுள்ளது. வெவ்வேறு நிறமுடைய நால்வகை மணிகளால் தொகுக்கப் பெற்ற மாலை போன்று அமைந்திருப்பதால் இது '**நான்மணி மாலை**' என்று பெயர் பெற்றது. இப்பெயரில் செந்தமிழ்ப் பனுவலுக்குரிய மூல இலக்கியமாக நமக்குக் கிடைத்துள்ள பிரபந்தம் இக்கோயில் நான்மணிமாலையேயாகும். '**கோயில்**' என்பது தில்லையம்பதி. சைவர்கள் சிதம்பரத்தை இவ்வாறு வழங்குதல் மரபு.[1]

> தம்மை மறந்து நின்னை நினைப்பவர்
> செம்மை மனத்தினும் தில்லைமன்றினும் நடம்
> அம்பல வாண (4)

என்ற அடிகளால் அடிகள் தில்லையம்பலவனைப் போற்றுவர். தம் உள்ளத்திலும் அப்பெருமான் எழுந்தருளியிருப்பதாக அடிகளின் நினைப்பு.

தொண்டர்கட்கு ஏவல் செய்வதற்காகவே பிச்சை ஏற்று உணவு கொண்டு தில்லையம்பலத்தில் உறைவது எல்லோருக்கும் களிப்பை - எக்களிப்பை - நல்குவதாகும் என்பதை,

> குடைகொண்டுஇவ் வையம் எலாம்குளிர்
> வித்துஎரி பொற்றிகிரிப்
> படைகொண்டு இகல்தெறும் பார்த்துஇவர்
> ஆவதில் பைம்பொன்கொன்றைத்
> தொடைகொண்ட வார்சடை அம்பலத்
> தான்தொண்டர்க்கு ஏவல்செய்து
> நடைகொண்ட பிச்சைகொண்டு உண்டுஇங்கு
> வாழ்தல் களிப்புடைப்புடைத்தே (2)

1. வைணவர்கட்கு '**கோயில்**' எனபது திருஅரஙகம்.

என்று கட்டளைக் கலித்துறையில் வெளியிட்டு மகிழ்கின்றார் அடிகள் பெருமான்.

தில்லைக் கூத்தன் திருநடனம் புரியுங்கால் அப்பெருமான் நிலத்தே ஊன்றிய திருவடி கீழுலகம் ஏழினையும் கடந்து சென்றது. அவனது திருமுடி எல்லா உலகங்களையும் கடந்து சென்று அண்டத்திற்கு அப்பால் விளங்கியது. இறைவன் வீசியாடும் தோள்கள் எட்டுத் திசைகளின் புறத்தன. இவ்வழகிய தோற்றத்தை மான சீகமாக அநுபவித்த அடிகள்,

அடியொன்று பாதம் ஏழிற்கும்
அப்புறம் பட்டதிப்பால்
முடியொன்றிவ் வண்டங்கள் எல்லாம்
கடந்தது முற்றும் வெள்ளைப்
பொடியொன்று தோள்எட்டுத் திக்கின்
புறத்தன பூங்கரும்பின்
செடியொன்று தில்லைச்சிற் றம்பலத்
தான்றன் திருநடமே (6)

என்ற பாடலில் பதிவு செய்து மகிழ்கின்றார். உலகமே உருவாகிய இறைவன் ஆடுங்கால் அவன் கூத்தினை பொறுத்துக் கொள்ளும் நோன்மை இவ்வுலகிற்கு இல்லை என்ற இப்பாடலின் கருத்தில் நம் உள்ளம் தோய்ந்து மகிழ்கின்றது. இவ்விடத்தில்,

அடிபேரிற் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரின் மாமுகடு பேரும் - கடகம்
மறிந்தாடு கைபேரின் வான்திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்றாது அரங்கு.[2]

என்ற காரைக்கால் அம்மையாரின் கவிதையையொட்டி இக்கவிதை அமைந்திருக்க வேண்டும் என்பதை நினைந்து மகிழ்கின்றோம்.

2 அறபுதத் திருவந்தாதி - 77

இறைவனை நினைந்து வழிபடாது தமது வயிறு வளர்த்தற் பொருட்டுப் பிற உயிர்கட்குத் தீங்கு செய்து வாழ்வோர் உலக நிலையாமையைச் சிறிதும் உணராத வர்களாவர். இதனை விளக்கும் போக்கில்,

நஞ்சுமிழ் பருவாய் வெஞ்சின் மாசுணம்
தன்முதல் முருக்க நென்முதல் சூழ்ந்த
நீர்ச்சிறு பாம்புதன் வாங்ககெதிர் வந்த
தேரையை வவ்வி யாங்கி யாம்முன்
கருவிடை வந்த ஒருநாள் தொடங்கி
மறவர் மறலி முறைபிறழ் பேழ்வாய்
அயில்தலை அன்ன வயிற்றிடைக் கிடந்தாங்கு
அருள்நனி இன்றி ஒருவயிறு ஓம்பற்குப்
பல்லுயிர் செகுத்து வல்லிதின் அருந்தி
அயர்த்தனம் இருந்தும் போலும் பெயர்த்துநின்று
எண்தோள் வீசிக் கண்டோர் உருகத்
தொல்எயில் உடுத்த தில்லை மூதூர்
ஆடும் அம்பலக் கூத்தனைப்
பாடுதல் பரவுதல் பணிதலே இலமே (8)

நஞ்சு உமிழ் பெருநாகம் ஒன்றின் வாயில் சிக்கிய நிலையில் உள்ளது ஒரு நீர்ப்பாம்பு. இந்நீர்ப் பாம்பு தன் வாய்க்கெதிரில் வந்த தவளையைக் கவ்வுகின்றது. இந்நிலையை ஒத்துள்ளது நம் நிலை. நாம் அன்னையின் கருவினின்று வெளிப்பட்ட நாள் தொட்டு கூற்றுவனது வாயில் அகப்பட்டுக் கிடக்கின்றோம். இந்நிலையில் நாம் பிற உயிர்களைக் கொன்று தின்று வயிறு வளர்த்து வருகின்றோம். நிலையாமையை மறந்து தில்லை மூதூரில் ஒரு காலை ஊன்றி மற்றொரு காலைத் தூக்கி நின்று எட்டுத் தோள்களையும் வீசி நின்று காண்போர் மனம் கசிந்துருகத் திருநடனம் புரியும் ஆடலரசனை வாயாற பாடுதலும், மனத்தாற் பரவுதலும், மெய்யாற் பணிதலுமாகிய இத்திருப்பணிகளுள் ஒன்றையும் செய்திலோம் என்று உலக மக்களின்

நிலையில் வாழ்வினை எண்ணி அடிகள் உளம் உருகும் ஒப்பரிய திறத்தை இப்பாடலில் கண்டு நாமும் உள்ளம் உருகிக் களிக்கின்றோம்.

எம்பெருமானை நோக்கி அடிகள் தம் அகத்துள் புகுந்து தீமைகளையெல்லாம் அறுத்து நீக்கியருளுமாறு வேண்டுதலை,

நானே பிறந்து பயன்படைத்
தேன்அயன் நாரணன்எம்
கோனே எனத்தில்லை அம்பலத்
தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகிஎன்
தீமையெல் லாம்அறுத்துத்
தானே புகுந்துஅடி யேன்மனத்
தேவந்து சந்திக்கவே (10)

என்ற பாடலில் கண்டு மகிழலாம்.

உடம்பைக் கப்பலாக உருவகம் செய்து அது கவிழ்ந்து அழிவதற்கு முன் எம்பெருமான் திருவருளாகிய பெரிய வடக்கயிற்றைப் பூட்டி இழுத்து அவன் திருவடியாகிய நீண்ட கரையிலே சேரச் செய்து உய்விக்குமாறு வேண்டும் பாடல் இது.

அறிவில் ஒழுக்கமும் பிறிதுபடு பொய்யும்
கடும்பிணித் தொகையும் இடும்பை ஈட்டமும்
இனையன பலசரக் கேற்றி வினையெனும்
தொன்மீ காமன் உய்ப்ப அந்நிலைக்
கருவெனும் நெடுநகர் ஒடுதுறை நீத்தத்துப்
புலனெனும் கோண்மீன் அலமந்து தொடரப்
பிறப்பெனும் பெருங்கடல் உறப்புகுந்து அலைக்கும்
துயர்த்திரை உவட்டில் பெயர்ப்பிடம் அயர்த்துக்
குடும்பம் என்னும் நெடுங்கல் வீழ்த்து
நிறையெனும் கூம்பு முறிந்து குறையா
உணர்வெனும் நெடும்பாய் கீறிப் புணரும

மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலம்
கலங்குபு கவிழா முன்னம் அலங்கல்
மதியுடன் அணிந்த பொதியவிழ் சடிலத்துப்
பையர வணிந்த தெய்வ நாயக!
தொல்லெயில் உடுத்த தில்லை காவல!
வம்பலர் தும்பை அம்பல வாண! நின்
அருள்எனும் நலந்தார் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே! (16)

உடல் ஒரு கப்பல். அதில் அறிவற்ற செய்கை, பொய்மை, கொடிய பிணிகள், துன்பத் தொகுதி ஆகிய சரக்குகளை ஏற்றிக் கொண்டு தீவினை என்னும் மீகாமன் கருப்பை என்னும் பெரிய பட்டினத்தின் துறை முகத்தை நோக்கிச் செலுத்தி வருகின்றான். அக்கப்பலை ஐம்புலன்களாகிய சுறாமீன்கள் தொடர்ந்து தாக்குகின் றன. அக்கப்பல் பல பிறப்பென்னும் பெருங்கடலில் புகும்போது துன்பமாகிய அலைப் பெருக்கினால் நிலை பெயர்ந்து அலைந்து குடும்பம் என்னும் வலிய பாறை யில் மோதுண்டு நிறை என்ற பாய்மரம் முறிய அறிவு என்னும் பாய் கிழிகின்றது. தீமையுற்ற உடலாகிய மரக்கலம் கவிழ்ந்து சிதைவுற்று அழிகின்றது. இந்நிலை எய்து முன்னே தில்லையம்பலவன் தன் திருவருளாகிய பெரிய வடக்கயிற்றைப் பூட்டி இழுத்து தன் திருவடியா கிய நீண்ட கரையில் சேரும்படி செய்வித்துத் தங்களை உய்வித்து அருளல் வேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றார் அடிகள். இக்காட்சியை அற்புதமாகச் சித்திரிக்கின்றது இத்திருப்பாடல்.

'ஆளெனப் புதிதின் வந்த'' என்று தொடங்கும் இன்னொரு பாடலில் (24) உலகத் தோற்றம் - ஒடுக்கம் பற்றி விளக்கும் அடிகளாரின் திறம் உணர்ந்து அநுப வித்து மகிழத்தக்கது இக்கருத்து கடலை அடிப்படை யாக வைத்துக் கொண்டு விளக்குகின்றார். நுரையும் அலையும் சுழற்சியும் எல்லையற்ற நீர் திவலைகளும்

ஒலிக்கும் கடலிடத்தே பெருத்தும் சிறுத்தும் எண்ணில வாய்த் தோன்றி மீளவும் அக்கடலின் கண்ணே அடங்கு மாறு போன்று இயங்குவன நிற்பனவாகிய (சராசரமா கிய) உலகம் அடங்கலும் இறைவனிடத்தே தோன்றி மீளவும் அவன்கண் ஒடுங்குவன எனவும், தான் ஒன்றி னும் தோன்றி ஒடுங்காத தனி முதற் பொருளாகத் திகழ்வோன் இறைவன் எனவும் விளக்கித் திருவுள்ளங் கொண்ட அடிகள்,

நுரையும் திரையும் நொப்புறு கொட்பும
வரையில் சீகர வாரியும் குரைகடல்
பெருத்தும் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
எண்ணில வாகி இருங்கடல் அடங்கும்
தன்மை போலச் சராசரம் அனைத்தும்
நின்னிடைத் தோன்றி நின்னிடை அடங்கும்நீ
ஒன்றினும் தோன்றாய் ஒன்றினும் அடங்காய்

என்று தில்லைச் சிற்றம்பலத்தில (24: அடி 26-32) நடனமாடும் உம்பர் நாயகனாகிய சிவபெருமானைப் போற்றிப் பரவுகின்றார். உலகனைத்தும் இறைவன் பால் தோன்றி ஒடுங்குவன என்றும் கருத்தமைந்த இத்தொடரை அடிப்படையாகக் கொண்டு இந்த அகிலத் திற்கு இறைவனே முதற் காரணம் என்று சாதிப்பவர்க ளும் உளர். இது சைவ சித்தாந்தக் கருத்திற்கு முரண்பட் டது. இவர்கள் கருதியபடி இந்த அகிலம் இறைவனா கிய முதற் காரணத்திலிருந்து தோன்றியதென்று உண் மையாயிருக்குமானால் முதற் காரணத்தின் குணங்க ளோடு ஒத்த குணங்களே அதனில் தோன்றிய காரியத்தி லும் உளவாதல் வேண்டும் என்ற நியமம் பற்றி இறை வனிடத்தில் தோன்றிய இந்த அகிலம் அறிவுடைய சித்துப் பொருளாதல் வேண்டும். ஆயின் உலகம் அறி வற்ற பொருள் என்பது யாவர்க்கும் உடன்பாடு எனி னும், சடப்பொருளாகிய அவ்வுலகம் சித்துப் பொருளா கிய இறைவனை முதற் காரணமாகக் கொண்டு தோன்றி

யது எனக் கூறுதல் பொருந்தாது.[3] அகிலம் மாயையா கிய உள்பொருளிலிருந்து தோன்றி விரிந்து மீளவும் அதன்கண் ஒடுங்கும் என்பதே திருமூலர் முதலிய திருமுறையாசிரியர்களின் துணிபாகும். கிழங்காகிய மூலத்திலிருந்து முளைத்த தாமரையைக் கிழங்கிற்கு ஆதாரமாகிய சேற்றில் முளைத்தது என்ற பொருளில் 'பங்கஜம்' என்று வழங்குதலை நாம் அறிவோம். அது போன்று மாயையாகிய உள் பொருளிலிருந்து உலகம் தோன்றி மீளவும் அதன்கண் அஃது ஒடுங்குவதாகிய உலகத் தொகுதியை மாயைக்கு ஆதாரமாகிய முதல்வ னிடத்துத் தோன்றி ஒடுங்குவதாகக் கூறுவது வழக்கி யல் மரபாகும். இம்மரபின்படி நீரில் தோன்றி ஒடுங்கும் நுரை அலை முதலியவற்றை நீர்க்கு இடமாகிய கடலில் தோன்றி ஒடுங்குதல் போல் என அடிகள் உவமையாக எடுத்தாளுதலால் சராசரமாகிய உலகத் தொகுதிக்கு இறைவன் ஆதாரமாவதன்றி முதற் காரணமாகான் என் பதே அடிகளின் கருத்தென்பது இனிது புலனாகும்.

"நின்னிடைத் தோன்றி நின்டை ஒடுங்கும்" என்றது மாயைக்குத் தாரகமாதல் பற்றி என்று உணர்க. அக் கருத்து உணர்ந்து கோடற்கென்றே நீரில் தோன்றி யொடுங்கும் நுரை முதலியவற்றை நீர்க்கிடமாகிய கட லில் தோன்றியொடுங்குதல் போல என்று உவமை கூறினாராகலின், ஆண்டு ஆசங்கைக்கு இடமின்மை யுணர்க"[4] எனச் சிவஞான சுவாமிகள் இத்தொடரின் பொருளைத் தெளிவுபடுத்தினமை ஈண்டுக் கருதத் தக்க தாகும்.

கொண்டல்வண் ணத்தவன் நான்முகன்
இந்திரன் கோமகுடத்து
அண்டர்மிண் டித்தொழும் அம்பலக்
கூத்தனுக்கு அன்புசெய்யா

3. வைண சமயம் இதனை ஒப்புக் கொள்ளாது. அஃது உலகம் என்பதில் அசித்துப பொருளகளும் அடங்கும என்ற கொள்கையைக் கொண்டது.

4 சிவஞானபோதம் பேருரை 3ஆம் சூத்திரம் இரண்டாம் அதிகாரம்.

**மிண்டர்மிண் டித்திரி வார்எனக்**
**கென்இனி நானவன்றன்**
**தொண்டர்தொண் டர்க்குத் தொழும்பாய்த்**
**திரியத் தொடங்கினனே (38)**

இறைவனுக்கு அன்பு செய்யாதவர்கள் துன்புறுவார்கள். அவனுடைய தொண்டர்க்குத் தொண்டனாகவுள்ள தனக்கு யாதொரு அச்சமும் இல்லை என்று இப்பாடலில் தெளிவிக்கின்றார்.

இங்ஙனமே கோயில் நான்மணி மாலையிலுள்ள பாடல்கள் யாவும் உயர்ந்த நுண் பொருளை அறிவுறுத்தி நிற்றல் அறிந்து மகிழ்தற் பாலதாகும். இந்த நான்மணிமாலையிலுள்ள சந்தவிருத்தங்கள் (11,15) **அருணகிரிநாதர்** பாடியருளிய திருப்புகழ் யாப்பிற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. தாளத்தொடு பொருந்த அமைந்த இச்சந்த விருத்தங்களின் யாப்பமைதியினைப் பின்பற்றி அடிதோறும் இறுதிக்கண் வழங்கும் தனிச் சொற்களை தொங்கல் என வழங்கும் தனிச் சொற்களைச் சேர்த்து நோக்குங்கால் இத்தகைய திருப்புகழ்ச் சந்தங்கள் உருவாதல் காணலாம்.[5] செந்தமிழ்ப் பாடல்களின் தாள அமைதிக்குச் சிறந்து விளங்கும் இவ்வகைப் பாடல்கள் செந்தமிழ்க் கடவுளாகிய முருகப் பெருமானது பொருள் சேர்புகழைச் சீர்பெறல் விரித்துரைத்தற்கு ஏற்றனவாக அமைந்தமையால் இவ்வகைப் பாடல் களையே அருணகிரிநாதர் முருகன் புகழ் பாடுதற்குரிய சந்தப் பாடல்களாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வாராயினர். இத்திருப்புகழ் யாப்பு முதன் முதல் இக்கோயில் நான்மணி மாலையில் கருக்கொண்டு தோன்றிப் பின்னர் அருணகிரிநாதரது வாக்கின் திறத்தால் திருப்புகழ்ப் பாடல்களாக உருப்பெற்று வளர்ந்தது எனக் கூறுதல் பொருந்தும் எனக் கருதலாம்.

5. யாழ் நூல் 388-390ஆம் பக்கங்களைக் காண்க.

(2) **திருக்கழுமல மும்மணிக் கோவை: கழுமலம்** என்பது **சீகாழிக்குரிய பன்னிரண்டு** பெயர்களில்[6] ஒன்று. சீகாழிப் பதியை அகவல், வெண்பா, கலித்துறை ஆகிய மூவகைப் பாக்களால் போற்றிப் பரவிய முப்பது பாக்களைக் கொண்ட பனுவலாகும் இது. ஆகவே, இது **மும்மணிக் கோவை** எனப் பெயர் பெற்றது. **'திருவளர் பள்ளப் பெருவரை'** எனத் தொடங்கும் முதற்பாடலை முதலாகக் கொண்டு திகழும் இத்தெய்வப் பனுவலில் இப்போது பன்னிரண்டு பாடல்களே கிடைத்துள்ளன. பன்னிரண்டாம் பாடலின் முதற் சீரோடு மண்டலித்து முடியாமையாலும் மும்மணிக் கோவையிலும் முப்பது பாடல்களால் அமைதல் வேண்டும் என்பது பாட்டியல் மரபாதலாலும் இந்நூலின்கண் 12 முதல் 30 வரையுள்ள பதினெட்டுப் பாடல்களும் ஏடுகளின் சிதைவால் மறைந்து போயின எனக் கருத வேண்டியுள்ளது.

திரு. **ஆ.சிங்காரவேலு முதலியார்** எழுதிய உரையுடன் வெளிவந்த பட்டினத்துப் பிள்ளையார் பிரபந்த உரைநூலில் 13 முதல் 30 வரையுள்ள 18 பாடல்களும் உரையுடன் வெளியிடப் பெற்றுள்ளன. ஆயினும் இப்பாடல்கள் **ஆறுமுக நாவலர்** அவர்களாலும் பின்வந்த பெரியார்களாலும் வெளியிடப் பெற்ற பதினோராந் திருமுறையில் இடம் பெறவில்லை. இவற்றின் சொல் நடையையும் பொருள் அமைதியையும் மேம்போக்காக நோக்குங்கால் இவை வெண் காட்டடிகளின் வாக்காகவே தோன்றும். இப்பாடல்களில் பயின்று வரும் வடசொற்களும், பிற்காலச் சொல் வழக்குகளும் இவர்தம் ஏனைய பாடல்களில் இல்லை. ஆகவே, இப்பாடல்கள் பிற்காலப் புலவர் ஒருவர் இப்பதினெட்டுப் பாடல்களையும் பாடிச் சேர்த்துப் பனுவலை நிறைவு செய்த திறம் வியந்து பாராட்டத்தக்கதாகும்.

6. பன்னிரண்டு பெயர்களாவன: கழுமலம், காழி, கொச்சை வயம, சணபைநகர், சிரபுரம், தோணிபுரம், பிரமபுரம், புகலி, புறவம், பூந்தராய, வெங்குரு, வேணுபுரம் என்பனவாகும்.

இப்பனுவலின் **திருவளர் பவளப் பெருவரை** (*1*) எனத் தொடங்கும் முதற்பாடலின்,

> **தாதையொடு வந்த வேதியச் சிறுவன்**
> **தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த**
> **அன்னா யோவென் றழைப்ப முன்னின்று**
> **ஞான போனகத் தருளட்டிக் குழைந்த**
> **ஆளும் திரளை அவன்வயின் அருள**
> **அந்தணன் முனிந்து தந்தா ரியாரென**
> **அவனைக் காட்டுவென் அப்ப வானார்**
> **தோடு டைய செவியன் என்றும்**
> **பீடு டைய பெம்மான் என்றும்**
> **கையிற் சுட்டிக் காட்ட**
> **ஐயநீ வெளிப்பட் டருளினை ஆங்கே (அடி 23-33)**

என்ற அடிகளில் **சம்பந்தப் பெருமான்** பிள்ளைப் பருவத்தில் தந்தையாருடன் குளத்துக்குச் செல்லல், தந்தையார் நீரில் மூழ்கி மந்திரம் செபிக்கையில் தந்தையைக் காணாது பசியால் வருந்துதல், 'அம்மையே, அப்பா' என்ற அழுகுரலைக் கேட்ட தோணியப்பர் உமையம்மையுடன் எழுந்தருளி ஞானப்பால் ஊட்டுதல், தந்தையார் 'யார் கொடுத்தது?' என்று வெகுண்டுரைத்தது, பிள்ளைப் பெருமான் 'எம்மை இது செய்த பிரான் இவனே' என்று 'தோடுடைய செவியனைச் சுட்டிக் காட்டுதல்' என்ற செய்திகள் அடங்கியிருத்தல் காணலாம்.

**'கருமுதல் தொடங்கி'** என்று தொடங்கும் இன்னொரு பாடலில் (*4*) தாம் இறைவனை நினைத்தற்குத் தடையாயுள்ள மனமாசுகளைக் களைந்து இறைவன் வீற்றிருப்பதற்குத் தக்கதாகத் தம் நெஞ்சத்தினைத் தூய்மைப் படுத்திய திறத்தை விரித்துரைக்கின்றார்.

''தாழ்ந்த குணங்களிலே பிணிப்புற்றுக் கிடந்த என் மனமாகிய பாழறையிலே கருவுற்ற நாள்முதலாக

இன்றுவரைக் கழிந்த காலங்களிலெல்லாம் காமம் வெகுளி பொய் என்னும் குற்றங்களால் விளைந்த தீமையாகிய இழிந்த குப்பைகள் மூடிக் கிடந்தவற்றை அரிதின் நீக்கி, எதிர்த்துத் தாக்கும் வன்மை மிக்க ஐம்பு லன்களாகிய கடாக்கள் கட்டப்பட்டு நின்றனவற்றைக் கட்டவிழ்த்துத் துரத்தி, அவற்றால் புழுதியான அவ்வி டத்தை அன்பெனும் நீரால் மெழுகித் தூய்மை செய்து, அருளாகிய விளக்கை ஒளி பெற ஏற்றி வைத்து, துன்ப மாகிய இருளைப் போக்கி, வாய்மையாகிய மேற்கட் டியை மேலே விரித்து, என் சிந்தையாகிய அறையை எந்தையாகிய நீ இனிது அமர்வதற்கு ஏற்ற பள்ளியறை யாகச் செய்து அதன் நடுவே அகத்தாமரையாகிய பூந் தவிசினை இட்டு வைத்துள்ளேன். எம்பெருமானாகிய நீ நின் செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற உமையம் மையாருடன் அடியேனது உள்ளமாகிய இவ்விடத்தில் எழுந்தருளுதல் வேண்டும்'' என அடிகள் புகலி நாதனி டம் விண்ணப்பிக்கின்றார். இவ்வேண்டுகோள் உலக மக்கள் மனம் திருந்தி இறைவனை வழிபட்டு உய்யும் முறையினை நன்கு அறிவுறுத்துவதாகும். சீகாழியாகிய திருத்தலம் ஓர் ஊழிக் காலத்திலே தேவர் முதலியோர்க் குப் பற்றுக் கோடாகி ஊழிப் பெருவெள்ளத்தில் தோணி யாய் மிதந்த வரலாறு இப்பாடலில் *14* முதல் *21* வரையுள்ள அடிகளில் விரித்துரைக்கப் பெற்றமை கண்டு மகிழத்தக்கது.

'அருள் பழுத் தளித்த' என்ற முதற் குறிப்புடைய அகவலில் (7) அடிகள் இறைவன் திருமுன் சில செய்தி களை வைத்து விண்ணப்பிக்கும் போக்கு கல்நெஞ்சத் தையும் கரைக்கும் பான்மையது.

''மாதொரு பாகனாகிய பெருமானே, நினது திரு வுள்ளக் குறிப்பால் இவ்வகிலம் தோன்றிய நாள் தொட்டு வேறு வேறு இயல் பினவாகிய பல்வகைப் பிறப்புகளிலும் உயர்திணை மக்களாகவும் அஃறிணை

உயிர்களாகவும் தோன்றிய யாவரும் யாவையுமாகிய உயிர்த் தொகுதியில் அடியேனுக்குத் தனித்தனியே தந்தையாகியும் தாயாகியும் வந்து உறவு கொள்ளாதவர் ஒருவரும் இலர். அடியேனும் அவ்வுயிர்களுக்குத் தந்தையாகவும் தாயாகவும் பிறந்து உறவு கொள்ளாததும் இல்லை. உலகில் யான் பிறவாத இடமும் இல்லை; இறவாத இடமும் இல்லை. அடியேனது உடலைத் தின்னாத உயிர்களும் இல்லை. அவற்றின் உடல்களை அடியேன் தின்னத் தவறியதும் இல்லை. இங்ஙனம் காலமெல்லாம் கடந்தன. இவ்வாறு நெடுங்காலமாகப் பிறப்பிறப்புச் சுழலில் தடுமாறும் பழக்கம் பெற்ற அடியேன் இனி இதற்குச் சோர்ந்து இளைக்கும் இயல் புடையேன் அல்லேன். அருள் சோதியாய்த் திகழும் நினது திருநாமமாகிய திரு **ஐந்தெழுத்தினை** உணர்ந்தோதும் அருள் நூல்களைப் பயின்றவனும் அல்லேன். இந்நூல்களைப் பயின்ற ஆசிரியர்களை அடைந்து கேட்டு அறிந்தவனும் அல்லேன். நாயேன் இங்ஙனம் நின்னை வழிபடுதற்குரிய தகுதியற்றவனாயினும் அடியேனுக்கு ஓய்வான காலத்தில் அடியேன் நின்னை நினைத்து இட்டது பச்சிலையாயினும் அதனை நறுமலராகவும், அடியேன் நின்னை நினைந்து சொல்வது பிழை மலிந்த சொல்லாயினும் நின்னை வழிபடுதற்குரிய மந்திரமாகவும் கொண்டு எளியேனைப் பிறவிப் பெருங்கடலில் ஆழாத வண்ணம் நின் திருவடியாகிய நெடுங்கரையில் சேர்த்துக் காத்தல் அருளாளனாகிய நினக்குரிய கடமையாகும்'' எனக் கழுமலவாணனை நோக்கி அடிகள் வேண்டிக் கொள்வதாக அமைந்தது இத்தெய்வப் பாடல்.

இறைவனது திருவருளாகிய கண்ணின் உதவியைப் பெறுவதற்கு முன் அடிகள் இல்லன உளவாய் உள்ளன காணாது அறியாமையாகிய இருளில் பட்டு அல்லல் பட்டார். திருவருளாகிய ஞான நாட்டம் பெற்ற

பின்னர் அசத்தாகிய உலகத் தொகுதி மறைந்தது. இறைவனாகிய மெய்ப் பொருள் எங்குமாய் விளங்கித் தோன்றியது - இந்தக் கருத்து **'வசையில் காட்சி'** எனத் தொடங்கும் பத்தாம் பாடலில் தெளிவாக விளக்கப் பெறுகின்றது.

போதும் பெறாவிடில் பச்சிலை
    உண்டு புனல் உண்டெங்கும்
ஏதும் பெறாவிடில் நெஞ்சுண்டன்
    றேஇணை யாகச்செப்பும்
சூதும் பெறாமுலை பங்கர்தென்
    தோணி புரேசர் வண்டின்
தாதும் பெறாத அடித்தா
    மரைசென்று சார்வதற்கே (12)

எனவரும் திருப்பாடல்,

யாவர்க்கு மாம்இறை
    வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு
    வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும்
    போதொரு கைபிடி
யாவர்க்கு மாம்பிறர்க்
    கின்னுரை தானே [6]

என்ற திருமந்திரப் பொருளை அடியொற்றி இறைவனடி சேர்வதற்கென யாவரும் மேற்கொள்ளுதற்குரிய எளிய வழிபாட்டு முறையைத் தெளிவாக விளக்குதலைக் கண்டு மகிழலாம்.

(3) **திருவிடை மருதூர் மும்மணிக் கோவை:** சிவபெருமான் கோயில் கொண்டுள்ள திருவிடை மருதூர் என்னும் திருப்பதியை அகவல், வெண்பா, கட்டளைக்

6 திருமந்திரம் - முதல் தநதிரம் - 15 தானச் சிறப்பு - 2 (252)

கலித்துறை என முறைப்படித் தொகுத்த முப்பது பாடல் களால் போற்றிப் பரவிய பனுவல் இது. ஆதலால் **'மும்மணிக் கோவை'** என்ற பெயர் பெற்றது.

**'தெய்வத் தாமரை செவ்வியின் மலர்ந்து'** *(1)* எனத் தொடங்கும் இப்பிரபந்தத்தின் முதல் பாடல் மாதொரு பாகனின் அழகிய திருக்கோலத்தின் இயல்பினைச் சொல் நயம் பொருள் நயம் மிளிர அழகுற விரித்துரைப் பது.

வலம்புரி நெடுமால் ஏனமாகி நிலம்புக்கு
ஆற்றலின் அகழத் தோற்றாது நிமிர்ந்து
பத்தி அடியவர் பச்சிலை இடினும்
முத்தி கொடுத்து முன்னின் றருளித்
திகழ்ந்துள தொருபால் திருவடி யகஞ்சேந்து
மறுவில் கற்பகத் துறுதளிர் வாங்கி
நெய்யில் தோய்த்த செவ்வித் தாகி
நூபுரங் கிடப்பினும் நொந்து தேவர்
மடவரல் மகளிர் வணங்குபு வீழ்த்த
சின்னப் பன்மலர் தீண்டிடச் சிவந்து
பஞ்சியும் அனிச்சமும் எஞ்ச எஞ்சாத
திருவொடும் பொலியும் ஒருபால் திருவடி (அடி 5-17)

இவ்வடிகளில் எம்பெருமான் திருவடி விவரிக்கப் பெறு கின்றது.

மருதிடங் கொண்ட ஒருதனிக் கடவுள்நின்
திருவடி பரவுதும் யாமே நெடுநாள்
இறந்தும் பிறந்தும் இளைத்தனம் மறந்தும்
சிறைக்கருப் பாசயஞ் சேரா
மறித்தும் புகாஅ வாழ்வுபெறற் பொருட்டே அடி(70-74)

என்ற அடிகளில் **திருவெண்காட்டடிகள்** எம்பெருமான் திருவடியைப் பரவுவது பகரப் பெறுகின்றது; அதன் நோக்கமும் சாற்றப் பெறுகின்றது.

பிறிதொரு பாடலில் (3) அடியார்கள் பிறிதொன்றில் ஆசையின்றிப் பருகி மகிழ்தற்குரிய பெருந்தேனாக இறைவன் இடைமருதில் வீற்றிருந்து அருள்புரியும் சிறப்பினையும் அத்திருப்பதியை அடைந்து இறைவனை வழிபட்டதனால் தாம் பெற்ற பெருநலங்களையும் அடிகள் விரித்துரைப்பதை,

வருந்தேன் இறந்தும் பிறந்தும்
மயங்கும் புலன்வழிப்போய்ப்
பொருந்தேன் நரகில் புகுகின்றி
லேன்புகழ் மாமருதில்
பெருந்தேன் முகந்துகொண்டு உண்டு
பிறிதொன்றில் ஆசையின்றி
இருந்தேன் இனிச்சென் றிரவேன்
ஒருவரை யாதொன்றுமே (3)

என்ற பாடலில் கண்டு மகிழலாம்.

அந்த இடைமருதில்
ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம்
பூவல்லி கொய்யாமோ [7]

என்ற திருவாசகத் தொடர்ப் பொருளை உளங்கொண்ட அடிகள் இப்பாடலில் 'புகழ் மருதிற் பெருந்தேன்' என்ற இடைமருதீசனைப் போற்றிய திறம் நினைந்து மகிழ்கின்றோம்.

அடுத்து வரும் 'ஒன்றினோடொன்று' எனத் தொடங்கும் 'நான்காம் பாடல்' இறைவனை நினைந்து போற்றுவதற்கும் 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' [8] என்ற மணிவாசகப் பெருமான் கருதிய வண்ணம் அவன் அருள் வேண்டும் என்ற உண்மை அறிவுறுத்து

7. திருவா. திருப்பூவல்லி - 2

8. மேலது - சிவபுராணம் - அடி - 18

வதாக அமைகின்றது. இப்பாடலில் அடிகள் "மருதி றனை இடமாகக் கொண்ட எந்தையே, அடியேன் பிறவிப் பெருஞ்சுழியில் சிக்கித் தடுமாறும்போது அடி யேன் உற்ற துன்பத்தினையும், அடியேனை ஈன்ற போது அடியேன் அன்னை உற்ற துன்பத்தினையும் உள்ளவாறு அறிவார் நின்னைத் தவிர வேறுயாருளர்? பெருகிய துன்பந் தருவதாகிய இப்பிறவிச் சுழலில் பட்டு அடியேன் இனிப் பிறக்கும் வலியுடையேன் அல்லேன். நின்னைப் பற்றி வழிபடும் ஒரு நெறியைத் தவிரப் பிறவிப் பிணி களைவதற்குப் பிறதொரு வழியும் இல்லை. மீண்டு வாரா வழி அருளும் நின் திருவருள் நெறியில் ஒழுகுவதற்கு விருப்பு வெறுப்பற்ற ஒருமை மனம் வேண்டும். ஐம்புல வேடர்களின் ஆணைவழி கட்டுப்பட்டு நின்று தானல்லாதவற்றைத் தானெனக் கருதும் மயக்க நிலையுடையது அடியேனின் மனம். இம்மனத்தைக் கொண்டு நின்னை நினைந்து போற்று தல் எங்ஙனம் இயலும்? கல்லைத் தெப்பமாகக் கொண்டு கடலைக் கடக்க எண்ணிய பேதை அடியே னைத் தவிர வேறு யாருளர்? பிறப்பென்னும் பெருங் கடலை அடியேன் கடத்தலும் வேண்டும். அங்ஙனம் கடத்தற்கு உறுதுணையாக நின்னை நினைத்தலும் வேண்டும். ஒரு நெறியில் நின்று நின்னை நினைந்து போற்றும் வண்ணம் அடியேன் மனத்தை நீ திருத்தியரு ளுதலும் வேண்டும்" என்று விண்ணப்பிக்கின்றார்.

**"வாழ்ந்தனம் என்று"** தொடங்கும் பாடலில்(7) அடி கள் தாம் மேவன செய்தொழுகும் கயவர் வாழ்வும் இறைவனது அருள்வழி ஒழுகும் மெய்த் தொண்டர் வாழ்வும் இன்னவென விளக்கப் பெறுகின்றன.

செல்வத்துடன் வாழ்ந்திருக்கின்றோம் எனச் செருக் குற்று இரவலர்க்கு உதவாது தன்னுயிரைப் பாதுகாத்தல் ஒன்றையே குறிக்கொண்டு தன்னால் ஏனைய உயிர்கள் படும் துன்பத்தினைச் சிறிதும் பொருட்படுத்தாது

இம்மை மறுமைப் பயன்கள் இல்லை என்று துணிந்து தாம் விரும்பியவாறு செய்தொழுகி மின்னலைப் போல் தோன்றியழியும் இயல்பினவாகிய உலகியல் செல்வங் களை நிலைபேறுடையனவாக விரும்பித் தம்மையும் ஒப்பற்ற தலைவர்களாக மதித்து வாழ்தல் கீழ் மக்கள் வாழ்வாகும்.

இறைவனுடைய திருவடியைப் பற்றி நின்று உலகி யலில் நேரும் இடையூறுகளைக் கண்டு அஞ்சுதலை விடுத்து மக்கள் மனைவி சுற்றம் செல்வம் என்பவற் றைப் பொருள் எனக் கருதாது இறைவனது திருவரு ளையே பொருளாக எண்ணி இந்திர பதத்தால் அடை யும் பெருஞ்செல்வமும் எட்டு சித்திகளும் தாமே வந்த காலத்தும் அவற்றை மறுத்து ஒதுங்கிக் கிழிந்த கந்தை யும் ஒட்டிட்டுத் தைத்த கோவணமும் அறுந்த கீழுடை யுமாகக் கிடைத்தவற்றை உடுத்துச் சிதைவுற்ற ஓடொன்றை உண்கலனாகக் கையில் ஏந்தித் தம்மை நோக்கி வந்து பிச்சை இடுவார் உளராயின் அவர்கள் தந்தவற்றை நின்ற நிலையிலேயே உண்டு தரையையே பாயாகக் கொண்டு நீங்காத சாந்தம் என்னும் மனை யைக் கிட்டி எவ்வுயிர்களையும் தம் மக்களெனக் கருதி யாவரிடத்தும் ஒப்ப அன்பு செய்தல் அருட்செல்வர்க ளாகிய கடவுள் தொண்டர்களின் உயர்ந்த வாழ்வாகும்.

இவ் விருவகை வாழ்க்கையினையும் ஆராய்ந்து நோக்குங்கால், விலங்குகளது காலின் குளம்படியாகிய சிறிய பள்ளத்தில் தங்கிய நீரும் ஊழிக் காலத்தில் அளப்பரியதாய்ப் பொங்கிய பெருங்கடல் நீரும் நீர் என்ற பொதுமையான தம்முள் ஒக்குமாயினும் அள வால் சிறிதும் ஒவ்வாதனவாம். ஆதலின் சிவனடியார்க ளுக்குத் தொண்டு பட்டு அவர்கள் குணத்துடன் நெடுங் காலம் பழகி அவர்கள் காலாலிட்ட பணியைத் தலை யாலே செய்து அத்தொண்டினால் உளதாம் பேற்றினை அடைந்து இன்புறுதல் ஒன்றைத் தவிரப் பெறத்தக்க

பேறு பிறிதொன்றும் இல்லை. இங்ஙனம் அடிகள் இடைமருதீசனைப் பணிந்து போற்றுவதாக அமைந்தது இப்பாடற் பகுதி. இதில் அடிகளது செம்மை மனத்தின் சிறப்பு இனிது புலப்படுதல் காணலாம்.

**''உழைப்பின் வாரா உறுதிகள்''** (10) எனத் தொடங்கும் பாடலில் தொண்டரது உழவின் திறத்தை உருவக அணி அமைய விரித்துக் கூறியுள்ளமை அருமையினும் அருமை. இத்தகைய உழவினை மேற்கொள்ளாது மனம் என்னும் புனத்தை வறும்பாழாக்கித் தமக்கும் பிறர்க்கும் பயனின்றிக் கழியும் ஏனையோரதும் இழிவையும் புலப்படுத்துவது மற்றொரு சிறப்பு.

''மெய்யடியார்கள் மனம் என்னும் புனத்தில் முளைத்துள்ள வஞ்சனையாகிய மரத்தை வேருடன் அகழ்ந்து நீக்குவார்கள். பின்னர் அன்பெனும் பாத்தி கோலி மெய்மையாகிய எருவிட்டுப் பத்தி என்னும் விதையை விதைப்பார்கள். அடுத்து ஆர்வமாகிய நீரைப் பாய்ச்சி, ஐம்பொறிகள் என்னும் பட்டி மாடுகள் உள்ளே நுழையாதபடி சாந்தமாகிய வேலியை அமைத்துக் காப்பார்கள். இந்நிலையில் ஞானம் என்னும் முளை முளைத்து அருளாகிய பசுந்தளிர்கள் தளிர்த்து விளங்கும். அப்பொழுது காமம் வெகுளியாகிய களைகளைக் களைந்தெறிந்து சேமமாகக் காத்து வரும் நிலையில் அப்பயிர் செம்மையாக வளர்ந்து மெய் மயிர் முகிழ்த்துக் கண்ணீர் அரும்பிக் கடிமலர் மலர்ந்து திருவைந்தெழுந்து எனும் காய் தோன்றும். அடுத்த நிலையில் நீலகண்டமும் முக்கண்ணும் எட்டுத் தோள்களும் ஐந்து திருமுகமும் பவளம் போலும் செந்நிறமுடையதாய் வெள்ளை நீறு பூசி அறுசுவையதனினும் மிக்க சுவையுடையதாய்க் காணினும் கேட்பினும் கருதினும் இனிமை தருவதாய் நிலவெல்லையைக் கடந்து உயர்ந்த **'மருத மாணிக்கம்'** என்னும் இனிய கனி மெல்ல மெல்ல முற்றிப் பழுத்து எளிதில் கைவரப் பெறும். தொண்ட

உழவராகிய மெய்யடியார்கள் அக்கனியை இனிதின் அருந்திச் செம்மாந்திருப்பார்கள்.

இஃது இங்ஙனமாகவும் சிலர் தம்மனமாகிய புனத்தைப் பண்படுத்தாது வறும் பாழாக்கிக் காமம் காமக் காடு மூடி ஐம்புல வேடர்கள் ஆறலைத்துத் திரியவும் சிற்றின்பமாகிய கானல் நீர் ஓடவும் கல்லா உணர்வாகிய மான் இனம் வருந்தி உழலவும் ஆசை எனும் விதை விழுந்து 'யான்' எனப் பெயர் கூறப் பெற்ற நச்சுமரமாக முளைத்து நீண்டு வளர்ந்து பொய்மையாகிய கிளைகளை எம்மருங்கும் விட்டுப் பாவமாகிய தழைகளைத் தழைத்து, பூவென்று சொல்லும்படி கொடுமை என்ற அரும்புகளை ஈன்று தீமை மலர்ந்து துன்பமாகிய பலகாய்களைக் கொத்தாகத் தாங்கிப் பின்பு அவை மரணம் எனும் கனியாகப் பழுத்து உதிர நரகிடை வீழ்ந்து தமக்கும் பிறர்க்கும் பயனின்றிக் கணப்பொழுதில் இறந்தொழிகின்றார்கள். அற்புதமான இவ்விளக்கத்தை நம் உள்ளத்தில் அமைத்துப் பயன்பெற வேண்டியது நம்மனோர் கடன்.

இங்ஙனம் இதன்கண் கொண்ட உழவரது அரிய முயற்சியாக அடிகள் வெளியிட்டருளிய செய்திகள்.

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்பராகில்
சிவகதி விளையும் அன்றே [9]

என்ற நாவுக்கரசரின் திருப்பாடலுக்குச் சிறந்த விளக்கவுரைப் பகுதியாக அமைந்துள்ளமை ஒப்புநோக்கி

9. அப்பர் தேவாரம 4 72:2

உணரத் தகுவதாகும். நாவுக்கரசர் பெருமான் தொண்டு செய்வதில் சிறந்த உழவராகத் திகழ்ந்தவர்; உழவாரப் படையைத் தாங்கிக் கொண்டு திருக்கோயில்களில் திருப் பணி செய்து திகழ்ந்ததையும் நினைவு கூர்தல் வேண் டும்.

'மேவிய புன்மயிர்' (*13*) எனத் தொடங்கும் திருப்பா டலில் *உயிர் எவ்வியல்பினது என ஆராயப் புகுந்து* தத்துவ சோதனை செய்து தம்மியல்பினை உணராது வருந்திய அடிகள், இறைவனது திருவருள் நாட்டம் பெற்றவுடன் உயிராகிய தம்மையும் இறைவனையும் உணரப் பெற்ற திறத்தை விரித்துரைக்கின்றார்.

*"நாடி, எலும்பு, நரம்பு முதலிய உடல் உறுப்புக ளுள் உயிராகிய யான் யார்?"* என்று என்னைத் தேடிப் பார்த்தும் என்னைத் தெளிய அறிந்து கொண்டேன் அல்லேன். இவ்வாறு தம்மைப் பற்றி ஆராய்ந்தறிகின்ற ஆராய்ச்சி அறிவின் கண்ணே இதனைத் தெரிவிப்பதா கிய அறிவு வேறு உண்டென்று ஆராய்ந்து நோக்கி அவ்வாறு நாடுங்கால் விளங்கித் தோன்றும் இறைவனது திருவடி ஞானத்தால் அம்முதல்வனையும் உணர்ந்து அவனது பேரறிவினுள்ளே தாம் அடங்கி நின்று அங்ங னம் அறியும் பொருளாகிய தம்மையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் உணரும் பயிற்சி பெறாதார் உயிராகிய தம்மை அறியவல்லுநர் அல்லர் என்பதனை,

> நாடியோ என்போ நரம்புக் கோழையோ
> தேடி எனையறியேன் தேர்ந்தவகை - நாடிஅரன்
> தன்னாலே தன்னையும் கண்டு தமைக்காணார்
> என்னாம் எனஅறிவார் இன்று.

எனவரும் வெண்பாவில் ஆசிரியர் மெய்கண்ட தேவநாய னார் தெளிவாக விளக்கியுள்ளார். இவ்வெண்பா திருவி டைமருதூர் மும்மணிக் கோவையில் வரும் 'மேவிய

புன்மயிர்த் தொகையோ' (13) என்ற முதற் குறிப்புடைய திருப்பாடற் பொருளை அடியொற்றி அமைந்ததென் பது இவ்விரு செய்யுட்களையும் ஒப்புநோக்கி உணர் வார்க்கு இனிது விளங்கும் "நின்னைக் காணா மாந்தர், தன்னையும் காணாத் தன்மையோரே" என ஓதியவாற் றான் ஏனைப் பசு பாசங்களும் சிவஞானத்தாலன்றி அறியப்படாவென்பது போதரும்" என்றும், "ஆன்மா பிற உயிர்களைத் தனித்த முதலாய்ப் பிரித்தறியுமாறு இல்லையாயினும் சிவத்தைத் தரிசிக்கும்வழித் தான் அதுவாய் நின்று தன்னை அறியுமாறு போலப் பிற உயிர்களையும் அச்சிவத்தின் வண்ணமாய்க் கண்டறி தல் அமைவுடைத் தென்பது,

> என்னையும் கண்டேன் பிறரையும் கண்டேன்
> நின்னிலை யனைத்தையும் கண்டேன் என்னே
> நின்னைக் காணா மாந்தர்
> தன்னையும் காணாத் தன்மை யோரே [10]

என்பதனாற் புலனாம்" என்றும் சிவஞான முனிவர் இப்பாடற் பொருளை இனிது விளக்கியுள்ளார். சிவரூ பத்தால் ஆன்ம தரிசனமும் சிவதரிசனத்தால் ஆன்ம சுத்தியும் ஆமாறு கூறிற்று இப்பாடல் எனக் கொள்ளு தல் பொருந்தும்.

சிவபெருமானை நினையாமலும் திருவைந்தெழுத் தினை ஓதாமலும் பச்சிலையும் நீருங்கொண்டு வழிபாடு செய்யாமலும் வேறு யாராகவோ நினைக்கும் புறச் சமயத்தாருள்ளத்திலும் இடை மருதீசன் பொன்னார் திருவடியே நண்ணி அருள் வழங்கும் ஆறு சமயத்தார் செய்யும் வழிபாடுகளெல்லாம் இடைமருதீசன் ஒருவ னையே வந்து சார்வன என்னும் உறுதியுடையவர் திருவெண் காட்டடிகள் என்பது,

10. திருவிடைமருதூர் மும்மணிக் கோவை - 13

ஓராதே அஞ்செழுத்தும் உன்னாதே பச்சிலையும்
நேராதே நீரும் நிரப்பாதே - யாராயோ
எண்ணுவார் உள்ளத்து இடைமருதர் பொற்பாதம்
நண்ணுவாம் என்னுமது நாம். (14)

அன்றென்றும் ஆம்என்றும் ஆறு சமயங்கள்
ஒன்றொன்றோடு ஒவ்வாது உரைத்தாலும் - என்றும்
ஒருதனையே நோக்குவார் உள்ளத்து இருக்கும்
மருதனையே நோக்கி வரும். (17)

எனவரும் மும்மணிக்கோவை செய்யுட்களால் இனிது புலனாம். இப்பாடல்கள்,

எங்கேனும் யாதாகிப்
பிறந்திடினும் தன்னடியார்க்கு
இங்கேயென்று அருள்புரியும்
எம்பெருமான்[11]

என ஆளுடைய பிள்ளையாரும்,

'விரிவிலா அறிவினார்கள்
வேறொரு சமயம்செய்து
எரிவினால் சொன்னாரேனும்
எம்பிராற்கு ஏற்றதாகும்[12]

'ஆறுசமயத்து அவரவரைத்
தேற்றும் தகையன்'[13]

ஆமொருவர் உள்குவார்
உள்ளத்து உள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற
அருளும் தோன்றும்[14]

11. சம்பந்தர் தேவாரம் 2.40:6

12. நாவுக்கரசர் தேவாரம் 4.60 9

13. மேலது
14. மேலது - 6.18:11

என ஆளுடைய அரசரும் அருளிய பொருளுரைகளை இனிது புலப்படுத்தி அடிகளது சமயப் பொதுமையை நன்கு அறிவுறுத்துவனவாதல் கண்டு மகிழ்தற்பாலது.

'அன்றினர் புரங்கள்' (16) எனத் தொடங்கும் பாடல் இறைவன் எவ்வுயிர்க்கும் தன்னருளை உரிமைப் படுத்தி வைத்துள்ள திறத்தையும் அப்பெருமானை நினைந்து உய்தி பெறாத தீவினையாளர்களது அறியா மையையும் கூறி இரங்குவதாக அமைந்தது.

உயிர்களது நலம் கருதி உடல் கருவி, நுகர்பொருள் என்பவற்றை வழங்கியருளிய இறைவன் தன் அருளின் பப் பெருவாழ்வை எவ்வுயிர்க்கும் உரியதாக அமைத்து வைத்துள்ளானாதலின், அவன்பால் ஒரு குற்றமும் இல்லை. அப்பெருமானை நினைந்து போற்றி அவனரு ளால் இடர்ப்பகைகளைக் களைந்து கூற்றுவனது ஆற் றலை அழித்து இறப்பையும் பிறப்பையும் இகழ்ந்து வானோரது பசுவாகிய காமதேனுவின் கன்றைப் போன்று கவலையற்றுத் திரியும் பேரின்பப் பெருவாழ் வினைப் பெறும் வசதி, எல்லா மக்களுக்கும் பொதுவாக இறைவனால் அளிக்கப் பெற்றுள்ளது. அவ்வசதியைப் பயன்படுத்திக் கொள்ளாத தீவினையாளர் கண்ணதே குற்றம். அஃது எவ்வாறெனில், அறு சுவையுடன் கூடிய நல்ல உணவு சமைக்கப் பெற்றிருக்கவும் அத னைப் புசியாது ஒருவன் பசியால் வருந்துதல் அவ்வுண வின் குற்றமன்று. நல்ல மணப்பொருள் விரவிய இன் சுவைத் தண்ணீர் இருக்கவும் நீர் வேட்கை யுடையான் ஒருவன் அந்நீரைப் பருகாது வருந்துதல் நீரின் குற்ற மன்று. நன்னிழலைத் தரும் பூஞ்சோலை வழியிடையே இருக்க அவ்வழியே செல்வான் ஒருவன் அதன்கண் தங்கி இளைப்பாறாது உடல் வியர்க்கக் கடுவெயிலில் நடந்து வருதல் நிழலின் குற்றமன்று. இங்ஙனம் அடி கள் இறைவனது பெருங்கருணைத் திறத்தையும் அத னைப் பயன்படுத்திக் கொள்ளாத தீவினையாளர்களின்

அறியாமையையும் எடுத்துக் காட்டி விளக்குவது அற்புதம்.

'புண்ணியபுராதன' (19) என்று தொடங்கும் பாடலில் திருவைந்தெழுத்தின் பெருமையும் அருமையும் எடுத்துக்காட்டி விளக்கப் பெறுகின்றன. எம்பெருமான் திருநாமமாகிய திருவைந்தெழுத்தினை ஞானங்களால் முதிர்ந்த துறவிகள் ஓதினாலும் அன்றி மனைவி மக்களோடு இல்லற நெறியில் நின்று வாழும் ஏனையோர் ஓதினாலும் அவ்விரு திறத்தாரும் இறைவனால் நினைந்து ஆட்கொள்ளப் பெறுவர் என்பது உறுதி என்பது அடிகளின் கருத்தாகும். உடல் வலியிற் சிறந்தான் ஒருவனால் உயர வீசியெறியப்பட்டு விரைந்து சென்ற கல்லும், வலியில்லாத ஒருவனால் வீசப்பட்டுத் தாமதித்து மேலே சென்ற கல்லும் நிலத்தின் இயல்பான ஈர்ப்பாற்றலால் ஒருங்கு விழக் காண்கின்றோம். அது போல இறைவனது திருநாமமும் தன்னை ஓதுவாரது ஞானத்தின் வன்மை மென்மை காரணமாக மாறுபடாது தனக்கு ஆதாரமாகிய இறைவன் அருளால் ஈர்க்கப் பெற்று ஓதுவார் அனைவர்க்கும் ஒப்ப நலம் செய்யும் சிறப்புடையது என்பதனை,

> வல்லான் ஒருவன் கைமுயன்று எறியினும்
> மாட்டா ஒருவன் வாளா எறியினும்
> நிலத்தின் விழாஅக் கல்லே போல்
> நலத்தின் வழார்நின் நாமம் நவின்றோரே (அடி 78-8)

எனவரும் தொடர்களால் அடிகள் அற்புதமாக விளக்குவது நம்மை வியந்து போற்றச் செய்கின்றது.

இறைவனை வழிபட்டு வரம் பல பெற்ற வானவர் முனிவர் அடியார்கள் இன்னின்னார் எனக் குறித்துப் போற்றுவது "கொண்டலின் இருண்ட" (28) என்ற இம்மும்மணிக் கோவையின் பாடலாகும். இதன்கண்,

வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்
திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத் தவமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும் (அடி 30-33)

எனச் சைவ சமய குரவர் நால்வரையும் பெருஞ்செல்வத்தைத் துறந்த செம்மனச் செல்வராகிய சிவவாக்கிய தேவரையும் குறித்துப் போற்றும் அடிகள் சிவபக்தச் செல்வராகிய வரகுணதேவர் செய்த பேரன்பின் செயல்களையும் விரித்துரைத்துப் போற்றியுள்ளார்.

(4) **திருவேகம்பமுடையார் திருவந்தாதி:** காஞ்சி மாநகரில் திருஏகம்பம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் போற்றிப் பரவுவதாகவுள்ள இப்பனுவல் அந்தாதித் தொடையில் அமைந்த கட்டளைக் கலித்துறை யாப்பால் இயன்ற நூறு திருப்பாடல்களைத் தன்னகத்தே கொண்டு திகழ்வது. இப்பனுவல் திருவருள் துணை கொண்டு பாடப் பெற்றது என்பதும், இவ்வந்தாதி 100 பாடல்களால் இயன்றமை பற்றி இதற்குப் பதிற்றுப் பத்து என அடிகள் பெயரிட்டனர் என்பதும்,

காட்டிவைத் தார்தம்மை யாங்கடிப்
பூப்பெய்யக் காதல்வெள்ளம்
ஈட்டிவைத் தார்தொழும் ஏகம்பர்
ஏதும்இலாத தம்மைப்
பூட்டிவைத் தார்தமக் கன்பது
பெற்றுப் பதிற்றுப்பத்துப்
பாட்டிவைத் தார்பர வித்தொழு
தாம்அவர் பாதங்களே (99)

என வரும் பாடலால் நனி விளங்கும்.

'கச்சி ஏகம்பநாதனே, மெய்ஞ்ஞானத்தால் நின்னை வழிபட்டொழுகும் மெய்த்தொண்டர்கள் செல்லும்

ஞானநெறி இதுவென உணர்ந்திலேன். சரியை கிரியை யாகிய கைத் தொண்டு செய்து நின்கழல் போற்றும் அடியார்கள் தொண்டினை உவந்து மேற்கொண்டேன் அல்லேன். உடல் வளர்க்கும் உணவினையே விரும் பிப் பொய்யேயுன்னைப் போற்றிப் புறமே திரியும் இத்தொண்டனேனாகிய எளியேனது பணியையும் ஏற் றுக் கொள்வாயோ?'' என அடிகள் கச்சி நகர் ஏகாம்பரப் பெருமான் திருமுன்னின்று குறையிரந்து வேண்டுவதாக அமைந்தது,

மெய்த்தொண்டர் செல்லும் நெறிஅறி
யேன்மிக நற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலும் நற்றொண்
டுவந்திலன் உண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புற
மேஉன்னைப் போற்றுகின்ற
இத்தொண்ட னேன்பணி கொள்ளுதி
யோகச்சி ஏகம்பனே (1)

என வரும் இத்திருவந்தாதியின் முதற் பாடலாகும்.

தரித்தேன் மனத்துள் திகழ்தரு
நாமம் தடம்பொழில்வாய்
வரித்தேன் முரல்கச்சி ஏகம்ப
னேஎன்றன் வல்வினையை
அரித்தேன் உனைப்பணி யாதவர்
ஏழைமை கண்டவரைச்
சிரித்தேன் உனக்கடி யார்அடி
பூணத் தெளிந்தனனே (3)

தெளிதரு கின்றது சென்றென்
மனம்நின் திருவடிவம்
அளிதரு நின்அருட்கு ஐயம்
இனியில்லை அந்திச்செக்கர்

ஒளிதரு மேனிஎம் ஏகம்ப
னேஎன்று உகந்தவர்தாள்
தளிதரு தூளிஎன் றன்தலை
மேல்வைத்த தன்மைபெற்றே (4)

வணக்கம் தலைநின் திருவடிக்
கேசெய்யும் மையல் கொண்டோர்
இணக்குஅன்றி மற்றோர இணக்குஅறி
வோம்அல்லோம் வல்அரவின்
குணக்குன்ற வில்லி குளிர்கச்சி
ஏகம்பம் பாடின்அல்லால்
கணக்குஅன்று மற்றொரு தேவரைப்
பாடும் கவிநலமே (7)

இவற்றில் சிவபெருமானுக்குத் தொண்டு பட்டதன் பயன் அவன் அடியார்க்குப் பணி செய்து ஒழுகுதலாகும்; அவர்களது திருவடித் தூளியைத் தலைமேற்கொள்வார் உள்ளம் தெளிவு பெறுதலால் அவர்கள் சிவனருள் பெறுதல் ஒருதலை; சிவபெருமான் திருவடியை வணங்குதற்கே தம் தலையைப் பயன்படுத்தப் பெருவேட்கையுடைய மெய்யடியார்களோடு இணங்கிப் பழகுதலன்றி ஏனையவரோடு தாம் நெருங்கிப் பழகுவது இல்லை; பிற தெய்வங்களை இறைவனாக எண்ணிப் புலமை மிக்கேள் பாடும் பாடலின் பொருள் முடிவில் ஏகம் பவாணனாகிய முழு முதல் பொருளைச் சென்று சார்கின்றது'' என்ற கருத்துகள் அடங்கியுள்ளதைக் காணலாம். இவற்றால், அடியார்க்குத் தொண்டு புரிந்து வாழ்தலில் அடிகள் கொண்டிருக்கும் மனவுறுதி தெளிவாகின்றது.

பகை வேந்தரைப் பொருது வெல்லும் ஆற்றல் மிக்க நால்வகைச் சேனைகளையுடைய பெருவேந்தராயினும் எவ்வுயிர்க்கும் இறைவராகிய ஏகம்பவாணரது திருவருள் வண்ணமாகத் திகழும் திருநீற்றினைத் தம்

நெற்றியில் அணிந்து அப்பெருமானை வழிபாடு செய்யாராயின் அம்மன்னரது அரசியலாட்சியும் அவர்தம் வீரம், நீதி, கொடை முதலியவற்றுக்கு அடையாளமாக முழங்கும் முரசும் இவ்வுலகில் நிலை பெறா என்பதனை,

அன்றும் பகைஅடர்க் கும்பரி
மாவும் மதஅருவிக்
குன்றும் பதாதியும் தேரும்
குலவிக் குடைநிழற்கீழ்
நன்றும் பொலியினுங் கம்பர்நன்
னீறு நுதற்கிலரேல்
என்றும் அரசும் முரசும்
பொலியா இருநிலத்தே (30)

என்ற திருப்பாடலால் நமக்குக் காட்டுவர். அடிகள் காலத்தில் தமிழக மன்னர்கள் எந்நெறியையும் கடைப் பிடித்தொழுகாததால் அடைந்த தோல்வியையும் சிவநெறியைக் கடைப்பிடித்தொழுகியவர் அடைந்த வெற்றியையும் குறிப்பிடுவதை அறிந்து மகிழ்கின்றோம்.

நிலத்தேவர் எனப் போற்றப்பெறும் தலைமையைப் பிறப்பினால் அடைந்து மறைகளை மறவாது ஓதி வேள்விகளை முறைப்படி செய்து வந்தாலும், திருவேகம்பப் பெருமானைப் பண்டைக் குலத்தை மறந்த தொண்டர்களோடும் கூடித் தொழும் திருவருள் நலம் வாய்க்கப் பெறாதவர்கள் காடுகளில் வேட்டையாடித் திரியும் வேடுவர்களோடு வைத்து எண்ணப்படும் தாழ்வுடையவராவர். தமது இக்கருத்தினை,

நிலத்துஇமை யோரில் தலையாய்ப்
பிறந்து மறையொடங்கம்
வலத்துஇமைப் போதும் பிரியார்
எரிவளர்த் தாலும்வெற்பன்
குலத்துஉமை யோர்பங்கர் கச்சியுள்
ஏகம்பம் கூடித்தொழும்

நலத்துஅமை யாதவர் வேட்டுவர்
தம்மின் நடுப்படையே (31)

என்ற திருப்பாடலில் அமைத்துக் காட்டுவர்.

சீலமின்றி அறிவின்றிக் கொலை களவு முதலிய தீமை புரிந்தொழுகும் கீழ்ச்சாதி மக்களாயினும் ஏகம்ப வாணனாகிய இறைவனுடைய திருவடிக்கு அன்புடைய தொண்டராயின் அவர்களே யாவர்க்கும் மேலாகிய உத்தமராகப் போற்றத்தக்கவர்களாவர். இக்கருத்தினை அடிகள்,

படையால் உயிர்கொன்று தின்று
பசுக்களைப் போலச்செல்லும்
நடையால் அறிவின்றி நட்பிடைப்
பொய்த்துக் குலங்களினும்
கடையாய்ப் பிறக்கினும் கச்சியுள்
ஏகம்பத் தெங்களைஆள்
உடையான் கழற்குஅன்ப ரேல்அவர்
யாவர்க்கும் உத்தமரே (32)

என்ற பாடலில் பெய்து காட்டுவர். இறைவன் அடிக்குத் தொண்டு பூண்டு ஒழுகுபவர் முன்னர் எத்தகைய குற்றமுடையவராயினும் அவர்கள் இறைவனுக்கு ஆட்பட்ட பின்னர் அக்குற்றங்களையெல்லாம் எரிமுன்னர்ப் பஞ்சு போலத் தீய்ந்து நீறாக, எல்லா நற்பண்புகளும் பெற்று மேம்படுவராதலின் 'ஆளுடையான் அடிக்கு அன்பரேல் அவர் யாவர்க்கும் உத்தமரே' என்றார். இத்திருப்பாடல்,

அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவுளாரே (6.95:10)

என்ற நாவுக்கரசர் பெருமான் அருளிய பொன்னுரை

யைத் தன்னகத்துக் கொண்டு திகழ்வதை அறிந்து மகிழ்கின்றோம்.

இத்திருவந்தாதியில் 38 முதல் 44 முடியவுள்ள திருப்பாடல்களில் மாதொரு பாகராகிய அர்த்தநாரீச்சுரர் திருக்கோலத்தியல்பு விரித்துரைக்கப் பெற்றுள்ளது. இறைவன் கோயில் கொண்டுள்ள திருத்தலங்களாக இந்த அந்தாதியில் 69 தலங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் இமயம், கொல்லி, பொதியம், விந்தம், மந்தரம், மகேந்திரம், கருங்குன்றம், வெண்குன்றம், செங்குன்றம், நெடுங்குன்றம், நற்குன்றம், திருவிற் பெரும்பேறு, புலிவலம், வில்வலம், திருக்காரிகரை, திருப்போந்தை, முக்கோணம் என்பவை வைப்புத் தலங்கள் எனக் கொள்ளத்தக்கவை.

**அகத்துறைப் பாடல்கள்:** திருவேகம்பப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு குடும்ப வாழ்க்கையில் தலைவன் - தலைவி என்பவர்களது அன்பின் திறத்தினைப் புலப்படுத்துவனவாக அமைந்த பல அகத்துறைப் பாடல்கள் இத்திருவந்தாதியில் இடம் பெற்றுள்ளன. இத்திருப்பாடல்கள் திருவாதவூரடிகளின் திருச்சிற்றம்பலக் கோவையை நினைவுபடுத்துவனவாக அமைந்துள்ளன எனக் கருதலாம்.

ஒரு பாடல். உடன் போக்கிய தலைவனொடு சென்ற தலைவியைத் தேடிச் சென்ற செவிலித்தாய் தன் மகளும் அவள் காதலனும் போலவே வழியில் எதிர்ப்பட்ட காதலர்களாகிய அயலார் இருவரைக் கண்டு நும்மையொத்த அன்பிலராகிய இருவர் இவ்வழியே போகக் கண்டீரோ?' என வினவுகின்றாள். அது கேட்ட தலைமகன் 'இறைவன் ஊர்ந்தருளும் ஆனேற்றினையொத்த ஆற்றல்மிக்க தலைமகனைக் கண்டேன். நும்மால் வினவப் பெற்ற இருவருள் மற்றொருவரை என்னுடன் வரும் மானோக்கியாகிய இம்மங்கையைக்

கேட்டுத் தெரிந்து கொள்மின்' என்று மறுமொழி பகர் கின்றான். இந்த அழகிய காட்சியை,

துணையொத்த கோவையும் போலெழில்
பேதையும் தோன்றலும்உன்
இணையொத்த கொங்கையொ டேஒத்த
காதலொ டேகினரே
அணையத்தர் ஏறுஒத்த காளையைக்
கண்டனம் மற்றவரேல்
பிணையொத்த நோக்குடைய பெண்ணிவள்
தன்னோடும் பேசுமினே (73)

என்று வரும் பாடல் நன்கு புனைந்துரைத்தலைக் கண்டு மகிழலாம். இத்திருப்பாடல்,

மீண்டார் எனஉவந் தேன்கண்டு
நும்மைஇம் மேதகவே
பூண்டார் இருவர்முன் போயினரே
புலியூ ரென்னநின்று
ஆண்டாள் அருவரை யாளியன்
னானைக் கண்டேன்அயலே
தூண்டா விளக்கணையாய் என்னையோ
அன்னை சொல்லியதே (244)

என்று வரும் திருச்சிற்றம்பலக் கோவைப் பாடலை அடியொற்றி அமைந்து அன்பினைந்திணையொழுக லாற்றுக்குரிய தலைவனது உள்ளத்து நிறையை நன்கு புலப்படுத்துவதைக் கண்டு மகிழலாம்.

உடன்போக்கில் சென்ற தலைவன் தன்னுடன் வரும் தலைவிக்குக் காஞ்சி நகரின் எழில் நலங்களைக் காட்டிக் கூறுவனவாக உள்ளவை 75 முதல் 85 வரை யுள்ள பாடல்களாகும். காஞ்சி நகரத்தின் எழில் நலம் அந்நகரிலுள்ள திருக்காமக் கோட்டம், கச்சி அறச் சாலை, ஊரகம், பாடகம் முதலிய திருக்கோயில்கள் ஆகியவற்றை அடிகள் தாம் நேரில் கண்டவண்ணம்

இத்திருப்பாடல்களில் சொல்லோவியம் செய்து காட்டிய திறம் உணர்ந்து மகிழத்தக்கதாகும். எடுத்துக் காட்டுகளாக ஒருசில பாடல்கள்:

கார்மிக்க கண்டத்து எழில்திரு
வேகம்பர் கச்சியின்வாய்
ஏர்மிக்க சேற்றுஎழில் நெல்நடு
வோர்ஒலி பொன்மலைபோல்
போர்மிக்க செந்நெல் குவிப்போர்
ஒலிகருப் பாலையொலி
நீர்மிக்க மாக்கட லின்ஒலி
யேயொக்கும் நேரிழையே (76)

இங்கு நெற்பயிர் நடுவோர் ஒலி, செந்நெல் குவிப்போர் ஒலி, கரும்பாலை ஒலி ஆகியவை பல்வேறு ஒலிகள் நீர்மிக்க பெரிய கடல் ஒலியை ஒக்கும் என்கின்றார் அடிகள்.

சிறைவண்டு பாடும் கமலக்
கிடங்குஇவை செம்பழுக்காய்
நிறைகொண்ட பாளைக் கமுகின்
பொழில்இவை தீங்கனியின்
பொறைகொண்ட வாழைப் பொதும்புஉவை
புன்சடை ஏகம்பனார்
நிறைகொண்ட பூங்கச்சி நாடெங்கும்
இவ்வண்ணம் நன்னுதலே (78)

இங்கு தாமரைப் பொழில் பாளைக் கமுகின் பொழில் வாழைத் தீங்கனியின் பொழில் என்று பல்வேறு பொழில்கள் காட்டப் பெறுகின்றன.

இங்ஙனம் பல காட்சிகள்.

உடன்போக்கில் தலைவியை உடன் கொண்டு ஏகும் தலைவன் காஞ்சி நகரடைந்து அங்கு உமையம்மையார் வெண்மணலால் சிவலிங்கம் அமைத்து இறை

வனை வழிபட்ட காலத்துப் பெருவெள்ளம் பெருக்கெடுத்து வரக்கண்டு அஞ்சித் தான் வழிபடும் சிவலிங்கத் திருமேனிக்கு ஊறு நேராவண்ணம் தழுவிக் கொள்ள, அந்நிலையில் உமாதேவியாரது தனத்தழும்பும் வளைத் தழும்பும் தன் மேனியில் விளங்கச் சிவபெருமான் குழைந்து காட்டிய பேரன்பின் திறத்தைத் தன்னுடன் வரும் தலைவிக்கு எடுத்துரைத்து 'இத்தகைய திருவேகம்பத் திருக்கோயிலை இறைஞ்சப் பெற்றமையால் இவ்வுலகில் மக்கட் பிறப்பினால் அடைதற்குரிய பெரும் பயனை நாம் பெற்றுள்ளோம்' என மகிழ்ந்துரைப்பதாக,

தளரா மிகுவெள்ளம் கண்டுமை
ஓடித் தமைத்தழுவக்
கிளையார் வளைக்கை வடுப்படும்
ஈங்கோர் கிறிபடுத்தார்
வளமாப் பொழில்திரு ஏகம்பம்
மற்றிது வந்திறைஞ்சி
உளரா வதுபடைத் தோம்மட
வாய்இவ் வுலகத்துளே (85)

என்ற பாடல் அமைந்துள்ளது. அன்பின் திறத்தால் பிரிவின்றி உடன் சென்ற காதலர்கள், பிரியா நங்கையாகிய பெருமாட்டியார் வழிபட அன்பேயுருவாகிய பெருமான் அவர்க்கு அருள்செய்த திருக்கோயிலாகிய திருவேகம்பத்தைக் கண்டு வழிபட்டு மகிழ்ந்த திறம் இத்திருப்பாடலில் இனிது புலனாதல் கண்டு மகிழலாம்.

(5) திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது: திருவொற்றியூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமானது பொருள் சேர் புகழை விரித்துரைக்கும் இப்பனுவல் அந்தாதித் தொடையாலமைந்த பத்து ஆசிரியப் பாக்களால் அமைந்தது. பத்துப் பாடல்களும் ஒற்றியூர் இறைவனை முன்னிலைப்படுத்திப் போற்றுபவை.

இவை உணர்தற்கரிய சைவ சித்தாந்த உண்மைகளைத் தெளிவாக விளக்குவனவாகவும் உள்ளன.

உலகமே உருவமாகத் திகழும் இறைவனது பெருந் திரு உருவின் இயல்பினை இப்பனுவலின் 'இருநில மடந்தை' எனத் தொடங்கும் முதற்பாடலில் அடிகள் இனிது புலப்படுத்தியுள்ளார். சிவபெருமான் சமயங் கடந்த தனி முதற் பொருளாக விளக்கும் மாட்சியினை இரண்டாவது பாடலில் காணலாம்.

இடத்துறை மாதரோடு ஈருடம் பென்றும்
நடத்தினை நள்ளிருள் நவிற்றினை என்றும்
புலியதள் என்பொடு புனைந்தோய் என்றும்
பலிதிரி வாழ்க்கை பயின்றோய் என்றும்
அருவமும் உருவமும் ஆனாய் என்றும்
திருவமர் மாலொடு திசைமுகன் என்றும்
உளனே என்றும் இலனே என்றும்
தளரான் என்றும் தளர்வோன் என்றும்
ஆதி என்றும் அசோகினன் என்றும்
பொதியிற் பொலிந்த புராணன் என்றும்
இன்னவை முதலாத் தாமறி அளவையின்
மன்னிய நூலின் பன்மையுள் மயங்கிப்
பிணங்கு மாந்தர் பெற்றிமை நோக்கி
அணங்கிய அவ்வவர்க் கவ்வவைஆகி அடையப்
பற்றிய பளிங்கு போலும்
ஒற்றி மாநகர் உடையோய் உருவே (2)

என்ற பாடலில் அம்மாட்சி விரித்துரைக்கப் பெற்றிருத்தலைக் காணலாம்.

''திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள பெருமானே, தையல்பாகனாகிய நின்னைத் திருமால் என்றும் நான்முகன் என்றும் அருகன் என்றும் புத்தன் என்றும் பல்வேறு பெயர்களால் சமயவாதிகள் பலர் மாறுபடக் கூறினாலும் யாவர்க்கும் மேலாம் இறைவனாகிய நீ,

அவ்வச் சமயத்தவர்களுக்கு அவரவர் நினைந்த திரு மேனி கொண்டு தோன்றி அருள் பாலிக்கின்றாய். பளிங்கு அதன்கண் சார்ந்த பொருளின் தன்மையைப் புலப்படுத்தி அவற்றின் தன்மை தனக்கெய்தலின்றித் தனித்து விளங்குமாறு போன்று மேம்பட்டு விளங்குதல் நின் திருவுருவின் இயல்பென உணர்ந்தோம்'' என்பது இப்பாடலின் பொருளாகும். இப்பாடலில்,

மெய்த்தாறு சுவையும் ஏழிசையும்
    என்குணங்களும் விரும்புநால்வே
தத்தாலும் அறியவொண்ணா நடைதெளியப்
    பளிங்கேபோல் அரிவைபாகம்
ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன்'' (1.131:1)

என வரும் ஞானசம்பந்தப் பெருமானின் முதுகுன்றம் பற்றிய திருப்பாடலின் பொருள் விரித்துரைக்கப் பெற்றி ருத்தலைக் கண்டு மகிழலாம்.

எல்லாப் பொருள்களிலும் நீக்கமறக் கலந்து விளங் கும் இறைவனுக்கு உலகமே உருவமாதலின், அப்பே ருருவினை விட்டு விலகி நிற்கும் பொருள்கள் உலகில் இல்லை. ஆதலால் உலகப் பொருள்கள் யாவும் இறை வன் திருவுருவத்தின் அவயவங்களாகவே கொள்ளத்தக் கன. திரிபுரம் எரித்தது, தக்கன் தலையரிந்தது, இந்திர னைத் தோள் நெரித்து, பிரமன் தலைகளில் ஒன்றைக் கிள்ளியது, மன்மதனை எரித்தது, இராவணனை விர லால் அடர்ந்தது, கூற்றுவனை உதைத்தது முதலாக இறைவன் செய்த வீரச் செயல்கள் எனப் போற்றப் பெற்று வரும் இச்செயல்களெல்லாம் இறைவன் உல கத்தை இயக்குங்கால் அவன் அருளினை எதிரேற்றுக் கொள்ளாதார் செய்த வினைவயத்தால் நிகழ்ந்த நிகழ்ச்சி கள் எனக் கொள்வதல்லது, இறைவன் தனக்குப் புக ழுண்டாக விரும்பிச் செய்த வீரச் செயல்கள் என

மெய்யுணர்வுடையோர் கொள்ளார்கள். இவ்வுண்மை யினை,

உருவாம் உலகுக் கொருவ னாகிய
பெரியோய் வடிவிற் பிறிதிங் கின்மையின்
எப்பொரு ளாயினும் இங்குள தாமெனின்
அப்பொருள் உனக்கே அவயவ மாதலின்
முன்னிய மூவெயில் முழங்கெரி யூட்டித்
தொன்னீர் வையகந் துயர்கெடச் சூழ்ந்ததும்
வேள்வி மூர்த்திதன் தலையினை விடுத்ததும்
நீள்விசும் பாளிதன் தோளினை நெரித்ததும்
ஓங்கிய மறையோற் கொருமுகம் ஒழித்ததும்
பூங்கணை வேளைப் பொடிபட விழித்ததும்
திறல்கெட அரக்கனைத் திருவிரல் உறுத்ததும்
குறைபடக் கூற்றினைக் குறிப்பினில் அடர்த்ததும்
என்றிவை முதலா ஆள்வினை எல்லாம்
உலவாத் தொல்புகழ் ஒற்றி யூர!
பகர்வோர் நினக்கு வேறின்மை கண்டவர்
நிகழ்ச்சியின் நிகழின் அல்லது
புகழ்ச்சியிற் படுப்பரோ பொருளுணர்ந் தோரே (3)

என்ற பாடலில் அடிகள் தெளிவாக விளக்கியருளிய திறம் அறிந்து வியந்து மகிழத்தக்கதாகும்.

இறைவனாகிய மெய்ப்பொருளை உணர முற்பட்டு உயர்ந்த நான்முகன் முதலாக அறியாமையாகிய இருளொடு ஒற்றித்து நின்று யாக்கையுட்பட்டு வாழும் எல்லா உயிர்களும், உருவம், உணர்வு, பெருமை, ஆற்றல், செல்வம், வன்மை, செய்யும் தொழில் வகை ஆகியவற்றால் வேறுபட்டனவாகி வினைத் தொடர்பினின்றும் நீங்காது ஒன்றையொன்று ஒவ்வாதனவாய்க் கூடி நிற்பது இவ்வுலகத் தொகுதி. இதன்கண் வாழும் உயிர்களின் ஒழுகலாறுகள், நிலைபெற்ற பெருங்கடலுள் உயர்ந்து தோன்றும் அலைகளைப் போன்று

இறைவனாகிய முழுமுதற் பொருளை ஆதாரமாகக் கொண்டு தோன்றி, அப்பொருளினது வியாபகத்தினி டையே வளர்ந்து விரிந்தும் ஒடுங்கியும் இடம் பெயர்ந் தும் கலந்தும் ஒன்றினும் தோய்வின்றி விளங்கும் அம் முதல்வனது இயல்பினை விளக்கி நிற்பன. இங்ஙனம் இறைவனது வியாபகத்துள்ளே இவ்வுலகம் தோன்றி நின்று ஒடுங்கிச் செயற்படும் இயல்பினை இறைவனது திருவருள் ஞானம் பெற்ற பெரியோர்கள் அறிவதல்லது திருவருள் பெறாத ஏனையோர் அறிதல் இயலாது. இவ்வுண்மையினை ஒரு பாடலில் விளக்கியுள்ளார்.

பொருளுணர்ந் தோங்கிய பூமகள் முதலா
இருள்துணை யாக்கையில் இயங்கு மன்னுயிர்
உருவினும் உணர்வினும் உயர்வினும் பணியினும்
திருவினும் திறலினும் செய்தொழில் வகையினும்
வெவ்வே றாகி வினையொடும் பிரியாது
ஒவ்வாப் பன்மையுள் மற்றவர் ஒழுக்கம்
மன்னிய வேலையுள் வான்திரை போல
நின்னிடை எழுந்து நின்னிடை ஆகியும்
பெருகியும் சுருங்கியும் பெயர்ந்தும் தோன்றியும்
விரவியும் வேறாய் நின்றனை விளக்கும்
ஓவாத் தொல்புகழ் ஒற்றி யூர!
மூவா மேனி முதல்வ! நின்அருள்
பெற்றவர் அறியின் அல்லது
மற்றவர் அறிவரோ நின்னிடை மயக்கே (4)

என வரும் இந்தப் பாடலில் அடிகள் தெளிவாக விளக்கி யுள்ளதைக் கண்டு மகிழலாம். மாற்றம் மனம் கடந்து விளங்கும் இறைவனது இயல்பினை உள்ளவாறு உணர வல்லார்க்குப் பிறவிப் பிணி அறுதல் உறுதி என்பதனை "மயக்கமில் சொன்னீர்" எனத் தொடங்கும் ஐந்தாம் பாடலில் ஐயமற அறிவுறுத்தியுள்ளதைக் கண்டு மகிழலாம்.

சிவபிரானது திருக்கோலத்தில் அமைந்துள்ள பொருள் நுட்பம் ஒரு பாடலில் விளக்கம் அடைகின்றது.

தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி
ஆமதி யான்என அமைத்த வாறே
அறனுரு வாகிய ஆனேறு ஏறுதல்
இறைவ னியான்என இயற்று மாறே
அதவள் அவனென நின்றமை யார்க்கும்
பொதுநிலை யான்என உணர்த்திய பொருளே
முக்கணன் என்பது முத்தீ வேள்வியில்
தொக்க தென்னிடை என்பதோர் சுருக்கே
வேத மான்மறி ஏந்துதல் மற்றதன்
நாதன் நான்என நவிற்று மாறே
மூவிலை ஒருதாட் சூலம் ஏந்துதல்
மூவரும் யான்என மொழிந்த வாறே
எண்வகை மூர்த்தி என்பதிவ் உலகினில்
உண்மை யான்என உணர்த்தி வாறே (6)

எனவரும் பாடலில் அடிகள் தெளிவாக உணர்த்தியுள் ளதை அறிந்து மகிழலாம்.

'இறைவனாகிய நின் இயல்பு சொல்லின் எல் லைக்கு அப்பாற்பட்டு விளங்குவது. ஆதலின் அதனை அறிந்து உரைப்பார் ஒருவரும் இலர்' என ஏழாம் பாடல் உணர்த்துகின்றது. 'உடலாகிய கடலில் பட்டுத் தடுமா றும் அடியேனை நினது திருவடிப் புணையைத் தந்து உய்வித்தருள்க' என்று எட்டாம் பாடல் தெளிவிக்கின் றது. 'குழந்தை அழும் அழுகை ஒலியைக் கேளாத தூரத்தே தாய் சென்றாளாயினும் பிள்ளையின் பசி நேரத்தை எண்ணி அவள் தானே விரைந்து வந்து பசி வருத்தத்தைத் தீர்த்தல் போன்று, பல பிறவிகளிலும் உழன்று மயங்கிச் செய்வது அறியாது திகைக்கும் எளியேற்கு இறைவனாகிய நீயே எளிவந்து எனது

பாசப் பிணிப்பினை நீக்கி அருள் புரிவாயாக' என ஒன்பதாம் பாடல் உணர்த்துகின்றது. அடிகள் இறைவனை வேண்டும் முறை படிப்போர் உள்ளத்தை உருக்குவதாகும். இறைவனது மெய்ப்புகழைப் போற்றிப் பரவுவதாக அமைந்தது இப்பனுவலின் **பத்தாம்** பாடலாகும். இது திருவாசகத்திலுள்ள **'போற்றித் திருஅகவலை'** யொத்து அமைந்துள்ளது. திருவாசகம் முதலிய முன்னைத் திருமுறைகளில் திருவெண்காட்டிகள் கொண்டுள்ள பேரார்வம் அவர் பாடியுள்ள செழும் பாடல்களால் நன்கு புலனாகும். 'காலற்ற சீரிய கழலோய் போற்றி' என்று தொடங்கி 'குமரா போற்றி கூத்தா போற்றி, பொருளே போற்றி போற்றி' என்று முடித்து உன்னை,

> நாத்தழும் பிருக்க நவிற்றின் அல்லது
> ஏத்துதற் குரியோர் யார்இரு நிலத்தே' (10)

என்று நிறைவு செய்வது கண்டு இதனை உணர்ந்து மகிழலாம்.

# இயல் - 5

# இரண்டாம் பட்டினத்தார் - படைப்புகள்

இரண்டாம் பட்டினத்தார் பாடியனவாகக் கருதப் பெறும் பாடல்கள் '**பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல் திரட்டு**' என்பதில் அடக்கம். இதில் பலவகைப் பாடல் கள் உள்ளன. இதில் உள்ள பல பாடல்கள் பல தலங்களைப் பற்றியவை. இவை கட்டளைக் கலித் துறை, விருத்தம், வெண்பா முதலிய பலவகை யாப்பு களில் அமைந்தவை. பொது என்ற தலைப்பில் உள்ள பாடல்களுள், தாயாருக்குத் தகனம் செய்தபோது பாடிய பாடல்களும் உள்ளன. இப்பாடல்கள் அனைத் திலும் இவர் உலக வாழ்க்கையின் நிலையாமை, அடிய வர் சிறப்பு, பக்தியின் சாதனை, அருளின் அநுபவம், போலிக் கிரியைகளின் பழிப்பு, உண்மை அன்பின் உயர்வு ஆகியவற்றை மிகச் சிறப்பாகப் பாடியுள்ளார். இப்பாடல்களின் திருமுறைகளின் பிழிவு என்று சொல் வது மிகையன்று. சிறந்த கருத்துகள், எளிய கற்பனை, சொற்பொருள் அடுக்கு, நன்கு உணரத்தக்க உவமை உருவகம் முதலியவற்றால் இப்பாடல்கள் கற்போர் மனத்திலும் கல்லாதார் நாவிலும் எளிதில் நின்று, நடன மாடித் திகழ்கின்றன. சாத்திரங்களின் நுண்பொருளும், பதி பசு பாச உண்மைகளும், முடிவான நிலையும் மிகவும் எளிமையாக அமைந்துள்ளன.

ஒவ்வொரு பாடலும் ஒரு மாணிக்கம் எனக் கருதத் தக்கவாறு அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலும் சிறப்பு என்றாலும் தில்லைபற்றிய பாடல்கள் மிகச் சிறப்பு. உள்ளத்தில் இறைவன் உறைகின்ற முறைமை, உணர்ந்த பெருமிதம் பாடல்கள்தோறும் காணப் பெறும். காதற்ற ஊசியை மூன்று பாடல்களில் குறிப் பிட்டு அரிய உண்மையை எளிமையாக உணர்த்து

கின்றார். இனி இப்பாடல்களில் விரிவாக ஆழங்கால் பட்டு அநுபவிப்போம். பக்திக் கடலிலும் திளைப் போம்.

## 1. கோயில் அகவல்:

**அகவல்கள்:** ஈண்டு மூன்று அகவல்கள் உள்ளன. கோயில் திருத்தில்லை அல்லது சிதம்பரம். நான்காவது 'கச்சித் திருஅகவல்'; இது காஞ்சியைப் பற்றியதாகும்.

**முதல் அகவல்:** இது 47 அடிகளைக் கொண்டது. பிறவியைப் பழித்து 'செம்பொன் அம்பலவனை நினை மின் மனனே' என்று உபதேசிப்பது.

பிறந்தன இறக்கும்; இறந்தன பிறக்கும்;
தோன்றின மறையும்; மறைந்தன தோன்றும்;
பெருத்தன சிறுக்கும்; சிறுத்தன பெருக்கும்;
புணர்ந்தன பிரியும்; பிரிந்தன புணரும்;
அருந்தின மலமாம்; புனைந்தன அழுக்காம்;
உவப்பன வெறுப்பாம்; வெறுப்பன உவப்பாம்
(அடி 6-12)

இவை பிறப்பின் இழிவினை எடுத்து ஓதுவன.

பிறந்தன பிறந்தன பிறவிகள் தோறும்
கொன்றனை அனைத்தும்; அனைத்தும்நினைக் கொன்றன;
தின்றனை அனைத்தும்; அனைத்தும்நினைத் தின்றன;
பெற்றனை அனைத்தும்; அனைத்தும்நினைப் பெற்றன;
ஓம்பினை அனைத்தையும்; அனைத்தும்நினை ஓம்பின;
செல்வத்து இருந்தனை; தரித்திரத்து அழுங்கினை
சுவர்க்கத்து இருந்தனை; நரகில் கிடந்தனை (அடி 14-19)

இவை வாழ்க்கை வட்டத்தில் நிலையாமையை நினை ஊட்டுவன.

புற்புதக் குரம்பை; துச்சில் ஒதுக்கிடம்;
என்னநின்று இயங்கும் இடுவினைக் கூட்டமை

கல்லினும் வலிதாக் கருதினை; இதனுள்
பீளையும் நீரும் புறப்படும் ஒருபொறி;
மீளும் குறும்பி வெளிப்படும் ஒருபொறி;
சளியும் நீரும் தவழும ஒருபொறி;
உமிழ்நீர்க் கோழை ஒழுகும் ஒருபொறி;
வளியும் மலமும் வழங்கும் ஒருபொறி;
சலமும் சீயும் சரியும் ஒருவழி;
உள்உறத் தொடங்கி வெளிப்புறம் நாறும்;
சட்டகம் முடிவில் சுட்ட எலும்பாகுக (அடி 23-33)

இவை உடலின் இழிவை எடுத்து இயம்பி விளக்குபவை.

இங்ஙனம் அமைந்துள்ள உடல்உறு வாழ்க்கையை வெறுத்தொதுக்குமாறு அறவுரை கூறுவர் அடிகள். அடுத்து,

கடிமலர்க் கொன்றை சடைமுடிக் கடவுளை
ஒழிவுஅருஞ் சிவபெரும் போக இன்பத்தை
நிழல்எனக் கடவா நீர்மையொடு பொருந்தி
எனதுஅற நினைவுஅற இருவினை மலம்அற
வரவொடு செலவுஅற மருள்அற இருள்அற
இரவொடு பகல்அற இகபரம் அறஒரு
முதல்வனைத் தில்லையுள் முளைத்துஎழும் சோதியை
அம்பலத்து அரசனை ஆனந்தக் கூத்தனை
நெருப்பில் அரக்கென நெக்குநெக்கு உருகித்
திருச்சிற் றம்பலத்து ஒளிரும் சிவனை
நினைமின் மனனே நினைமின் மனனே (அடி 34-45)

என்ற அடிகளில் செம்பொன் அம்பலவனைச் சிந்தையில் இருத்தி வழிபடுமாறு அறிவுரை புகல்வர்.

**இரண்டாம் அகவல்:** இது 38 அடிகளைக் கொண்டது. யாக்கையை பழித்து 'பெருமானே, இவ்யாக்கை நிலையற்றது. அடியேனுக்கு உன் ஆனந்தத் தாண்டவம் காட்டி ஆட்கொள்க' என்று வேண்டுவது.

ஐவர் கலகம்இட்டு அலைக்கும் கானகம்
சலமலப் பேழை இருவினைப் பெட்டகம்
வாதம்பித் தம்கோழை குடிபுகும் சீறூர் (அடி 7-9)

என்று உடலை அறிமுகம் செய்த அடிகள் அதன் இயல்பை,

ஊற்றைப் புன்தோல் உதிரக் கட்டளை
நாற்றப் பாண்டம் நான்முழத்து ஒன்பது
பீற்றல் துண்டம் பேய்ச்சுரைத் தோட்டம் (அடி 10-12)

என்றும்,

ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்
ஓயா நோய்க்குஇடம் ஓடும் மரக்கலம்
மாயா விகாரம் மரணப் பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தம்
காற்றில் பறக்கும் கானப் பட்டம் (அடி 14-18)

என்றும்,

சதுர்முகப் பாணன் தைக்கும் சட்டை
ஈமக்கனலில் இடுசில விருந்து
காமக் கனலில் கருகும் சருகு (அடி 20-21)

என்றும்,

பவக்கொழுந்து ஏறும் கவைக்கொழு கொம்பு
மணமாய் நடக்கும் வடிவின் முடிவில்
பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணமேல்
ஊரில் கிடக்க ஒட்டா உபாதி (அடி 24-27)

என்றும்,

அந்தரத்து இயங்கும் இந்திர சாபம்
அதிரும் மேகத்து உருவின் அருநிழல்
நீரில் குமிழி நீர்மேல் எழுத்து

கண்துயில் கனவில் கண்ட காட்சி
அதனிலும் பொல்லா மாயக் களங்கம் (அடி 30-34)

என்றும் கூறி இத்தகைய நிலையற்ற உடலின்மீது பற்று வையாமல், தில்லைக் கூத்தனை நோக்கி,

இமய வல்லி வாழிஎன்று ஏத்த
ஆனந்தத் தாண்டவம் காட்டி
ஆண்டுகொண்டு அருள்கைநின் அருளினுக்கு அழகே
(அடி 36-38)

என்று ஆட்கொள்ளுமாறு வேண்டுகின்றார்.

மூன்றாம் அகவல்: ‘இறைவனே, இவ்வளவு மாசு பொதிந்த உடலை விட்டு என் உயிர் பிரிந்து வருங் காலத்து நான் உனக்கு அடைக்கலம்’ எனக் கூறுவது. இது 52 அடிகளைக் கொண்டது. எடுத்த எடுப்பில்,

பாற்கடல் கடையப் படும்கடு வெண்ணெயைத்
திருமிடற்று அடக்கிய இறைவநின் அடைக்கலம்
(அடி 1-2)

என்று பாடல் தொடங்குகின்றது. எட்டு அடிகள் முடிய அடைக்கல ஓலம் நடைபெறுகின்றது.

இந்த உடல் பல்வேறு பழிகளைச் சுமந்து கொண்டுள்ள சுமைதாங்கி என்று காட்டுவர்.

மனவழி அலைந்திடும் கனவெனும் வாழ்க்கையும்
விழுப்பொருள் அறியா வழுக்குறு மனனும்
ஆணவ மலத்துஉதித்து அளைந்துஅதில் உளைந்திடும்
நிணவைப் புழுவென நெளிந்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்
தவறும் அழுக்காறும் இவறுபொச் சாப்பும்
கவடும் பொய்யும் சுவடும் பெருஞ்சினம்
இகலும் கொலையும் இழிப்புறு புன்மையும்

பகையும் அச்சமும் துணிவும் பனிப்பும்
முக்குண மடமையும் ஐம்பொறி முயக்கமும்
இடும்பையும் பிணியும் இடுக்கிய யாக்கை (அடி 9-19)

என்று உடல் காட்டப் பெறுகின்றது. இந்த உடலில் 'உயிர்' எனும் குருகு வாழ்கின்றது. அதுவும் உடலை விட்டுப் பறந்து விடுகின்றது. இத்தகைய உடலின் இழிநிலை மேலும் காட்டப் பெறுகின்றது.

உயிர்எனும் குருகுவிட்டு ஓடும் குரம்பையை
...... .......... ............ ..........
மலஉடல் குடத்தைப் புலவுஉடல் புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்
கொலைப்படைக் கலம்பல கிடக்கும் கூட்டைச்
மாப்புறு வினைப்பல சரக்குக் குப்பையைக்
கோள்சரக்கு ஒழுகும் பீறல் கோணியைக்
கோபத்தீ மூட்டும் கொல்லன் துருத்தியை
ஐம்புலப் பறவை அடையும்பஞ் சரத்தைப்
புலராக் கவலை விளைமரப் பொதும்பை
ஆசைக் கயிற்றில் ஆடுபம் பரத்தைக்
காசில் பணத்தில் சுழலும்காற் றாடியை
மக்கள் வினையின் மயங்கும் திகிரியைக் (அடி 20-34)

என்று அதன் இயல்பு விளக்கப் பெறுகின்றது. இத்தகைய இழிவான உடலின்மீது கருத்தைச் செலுத்தாது, உயிர் உடலை விட்டுப் பிரியும்போது,

அடிமலர்க் கமலத்துக்கு அபயம்நின் அடைக்கலம்
வெளியிடை உரும்இடி இடித்தென வெறித்தெழும்
கடுநடை வெள்விடைக் கடவுள்நின் அடைக்கலம்
இமையா நாட்டத்து இறையே அடைக்கலம்
அடியார்க்கு எளியாய் அடைக்கலம் அடைக்கலம்
மறையவர் தில்லை மன்றுநின்று ஆடிக்
கருணைமொண்டு அலையெறி கடலே அடைக்கலம்

தேவரும் முனிவரும் சென்றுசென்று ஏத்தப்
பாசிலைக் கொடியொடு பரிந்தருள் புரியும்
எம்பெரு மான்நின் இணையடிக்கு அபயம்
அம்பலத்து அரசே அடைக்கலம் உனக்கே (அடி 42-52)

என்று அருமருந்தாம் அம்பலத்தரசனிடம் சரண் புகுந்து உய்தி பெறுகின்றார்.

## 2. கச்சித் திருஅகவல்

இது 70 அடிகளைக் கொண்டது. கச்சிக் கடவுளை நோக்கி "மக்களே போக வாழ்வை விட்டொழியுங்கள். பச்சிலை இடினும் பக்தர்கட்கு இரங்கி மெச்சிச் சிவபத வீடு அருள்பவனின் இணையடி இறைஞ்சுமின்" என்று அறிவுறுத்துவதாக அமைந்தது இந்த அகவல் பாட்டு.

மானிட வாழ்க்கை சிற்றின்பத்தில் மயங்கிச் சீரழிவது. அதனைத் தவிர்த்து இறைவனின் இணையடியை இறைஞ்சுமாறு ஆற்றுப்படுத்தும் அடிகள்,

மலைமகள் கோமான் மலரடி இறைஞ்சிக்
குலவிய சிவபதம் குருகாது அவமே
மாதரை மகிழ்ந்து காதல்கொண் டாடும்
மானுடர்க்கு எல்லாம் யான்எடுத் துரைப்பேன் (அடி 3-6)

என்று தம் அறிவுரையைத் தொடங்குகின்றார். மாதர்கள் அழகில் மதியிழப்பதை,

முள்ளும் கல்லும் முயன்று நடக்கும்
உள்ளங் காலைப் பஞ்செனு உரைத்தும்
வெள்ளெழும் பாலே மேவிய கணைக்கால்
துள்ளும் வரால்எனச் சொல்லித் துதித்தும்
தசையும் எலும்பும் தக்கபுன் குறங்கை
இசையும் கதலித் தண்டென இயம்பியும்
நெடுமுடை தாங்கி நின்றிடும் இடையைத்

துடிபிடி என்று சொல்லித் துதித்தும்
மலமும் சலமும் வழும்பும் திரையும்
அலையும் வயிற்றை ஆல்இலை என்றும்
சிலந்தி போலக் கிளைத்துமுன் எழுந்து
திரண்டு விம்மிச் சீப்பாய்ந்து ஏறி
உகிறால் கீற உலர்ந்துஉள உருகி
நகுவார்க்கு இடமாய் நான்று வற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட்டு என்றும்
குலையும் காமக் குருடர்க்கு உரைப்பேன் (அடி 8-23)

என்றும்,

நீட்டவும் முடக்கவும் நெடும்பொருள் வாங்கவும்
ஊட்டவும் பிசையவும் உதவிஇங்கு இயற்றும்
அம்கையைப் பார்த்துக் காந்தள்என்று உரைத்தும்
வேர்வையும் அழுக்கும் மேவிய கழுத்தைப்
பாரினில் இனிய கமுகுஎனப் பகர்ந்தும்
வெப்பும் ஊத்தையும் மேவிய வாயைத்
துப்பு முருக்கின் தூய்மலர் என்றும்
அன்னமும் கறியும் அசைவிட்டு இறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்
நீரும் சளியும் நின்றுநின்று ஒழுகும்
கூரிய மூக்கைக் குமிழ்எனக் கூறியும்
தண்ணீர் பீளை தவிராது ஒழுகும்
கண்ணைப் பார்த்து கழுநீர் என்றும்
உள்ளும் குறும்பி ஒழுகும் காதை
வள்ளைத் தண்டின் வளம்என வாழ்த்தியும்
கையும் எண்ணெயும் கலவாது ஒழியின்
வெய்ய அதரும் பேனும் விளையத்
தக்க தலையோட் டின்முளைத்து எழுந்த
சிக்கின மயிரைத் திரள்முகில் என்றும் (அடி 24-42)

என்றும் பலவாறு புகழ்ந்து பேசி மயங்கும் மக்களை நோக்கி மேலும் தொடர்ந்து,

......... நீங்கள்
நச்சிச் செல்லும் நரக வாயில்
தோலும் இறைச்சியும் துதைந்துசீப் பாயும்
காமப் பாழி கருவிளை கழனி
தூமைக் கடவழி தொலைபெறு வாயில்
எண்சாண் உடம்பு இழியும் பெருவழி
மண்பால் காமம் கழிக்கும் மறைவிடம்
நச்சிக் காமுக நாய்தான் என்றும்
இச்சித் திருக்கும் இடைகழி வாயில் (அடி 43-51)

என்றும்,

புண்இது என்று புடைவையை மூடி
உள்நீர் பாயும் ஓசைச் செழும்புண்
மால்கொண்டு அறியா மாந்தர் புகும்வழி
நோய்கொண்டு ஒழியா நுண்ணியர் போம்வழி
தருகிய காமுகர் சாரும் படுகுழி
செருக்கிய காமுகச் சேரும் சிறுகுழி
பெண்ணும் ஆணும் பிறக்கும் பெருவழி
மலம்சொரிந்து இழியும் வாயில் அருகே
சலம்சொரிந்து இழியும் தண்ணீர் வாயில்
இத்தை நீங்கள் இனிதென வேண்டா (அடி 44-63)

என்று அறிவுறுத்தி,

இறைவன் திருவடி இணையை நாடுமாறு ஆற்றுப் படுத்தும் அடிகள்,

பச்சிலை இடினும் பத்தர்க்கு இரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் பவனை
முத்தி நாதனை மூவா முதல்வனை
அண்டர் அண்டமும் அனைத்துள புவனமும்
கண்ட அண்ணலைக் கச்சியின் கடவுளை
ஏக நாதனை இணையடி இறைஞ்சுமின்
போக மாதரைப் போற்றுதல் ஒழிந்தே (அடி 64-70)

என்று தம் அறிவுரையை நிறைவு செய்கின்றார். சிற்றின் பத்தைக் கடிந்து பேரின்பத்திற்கு வழிகாட்டும் அற்புதத் திருப்பாடல் இது.

## 3. திருஏகம்ப மாலை

இது **'கச்சி ஏகம்பனே'** என விளித்து ஏகம்பநாத னைத் துதிக்கும் 40 கட்டளைக் கலித்துறை யாப்பா லான திருப்பாடல்களைக் கொண்டது. பாடல்கள் யாவும் மிக்க எளிமையானவை; எனினும் சிறப்பான பொருள் பொதிந்தவை. சிலவற்றில் ஆழங்கால் படு வோம்.

நாயாய்ப் பிறந்திடின் நல்வேட்டை
ஆடி நயம்புரியும்
தாயார் வயிற்றில் நரராய்ப்
பிறந்துபின் சம்பன்னர்ஆய்க்
காயா மரமும் வறள்ஆம்
குளமும்கல் ஆவும்என்ன
ஈயா மனிதரை ஏன்படைத்
தாய்கச்சி ஏகமப்னே (21)

பிறந்துமண் மீதில் பிணியே
குடிகொண்டு பேரின்பத்தை
மறந்துசிற் றின்பத்தின் மேல்மய
லாகிப்புன் மாதருக்குள்
பறந்துஉழன் றேதடு மாறிப்பொன்
தேடிஅப் பாவையர்க்கீந்து
இறந்திட வோபணித் தாய்இறை
வாகச்சி ஏகம்பனே (30)

இவை இரண்டும் பிறப்பின் பாழ் நிலையைப் பேசி அடிகள் இரங்குவதைக் குறிப்பிடுகின்றன.

பொருளுடை யோரைச் செயலினும்
வீரரைப் போர்க்களத்தும்
தெருள்உடை யோரை முகத்தினும்
தேர்ந்து தெளிவதுபோல்

அருளுடை யோரைத் தவத்தில்
குணத்தில் அருளில்அன்பில்
இருள்அரு சொல்லினும் காணத்
தகும்கச்சி ஏகம்பனே (15)

கல்லார் சிவகதை நல்லோர்
தமக்குக் கனவிலும்மெய்
சொல்லார் பசித்தவர்க்கு அன்னம்கொ
டார்குரு சொன்னபடி
நில்லார் அறத்தை நினையார்நின்
நாமம் நினைவில்சற்றும்
இல்லார் இருந்துஎன் இறந்துஎன்
புகல்கச்சி ஏகம்பனே (25)

*மக்களாய்ப் பிறந்த பல்லோர் தம் செயலால் குணங் களால், இன்னும் பலவகையால் எவ்வாறு எடை போட லாம் என்பதை இந்த இரண்டு பாடல்கள் இயம்புவ தைக் காணலாம்.*

வாதுக்குச் சண்டைக்குப் போவார்
வருவார் வழக்குஉரைப்பார்
தீதுக்கு உதவியும் செய்திடு
வார்தினம் தேடிஒன்றும்
மாதுக்கு அளித்து மயங்கிடு
வார்வீதி மாளும்மட்டும்
ஏதுக்கு இவர்பிறந் தார்இறை
வாகச்சி ஏகம்பனே (18)

ஓயாமல் பொய்சொல்வர் நல்லோரை
நிந்திப்பர் உற்றுப்பெற்ற
தாயாரை வைவர் சதிஆயி
ரம்செய்வர் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குஉப காரஞ்செய்
யார்தமை அண்டினர்க்குஒன்று
ஈயார் இருந்துஎன்ன போய்என்ன
காண்கச்சி ஏகம்பனே (19)

சொக்குஇட்டு அரண்மனைப் புக்குஉள்
திருடிய துட்டர்வந்து
திக்குஉற்ற மன்னரைக் கேட்பது
போல்சிவ நிந்தைசெய்து
மிக்குக் குருலிங்க சங்கமம்
நிந்தித்து வீடுஇச்சிக்கும்
எக்குப் பெருந்தவர்க்கு என்சொல்லு
வேன்கச்சி ஏகம்பனே (35)

விருந்தாக வந்தவர் தங்களுக்கு
அன்னம் மிகக்கொடுக்கப்
பொருந்தார் வளம்பெற வாழ்வார்நின்
நாமத்தைப் போற்றிநித்தம்
அருந்தா முலைபங்கர் என்னாத
பாதகர் அம்புவியில்
இருந்தாவது ஏதுகண் டாய்இறை
வாகச்சி ஏகம்பனே (36)

கடுஞ்சொல்லின் வம்பரை ஈனரைக்
குண்டரைக் காமுகரைக்
கொடும்பாவ மேசெயும் நிர்மூடர்
தம்மைக் குவலயத்து
நெடும்பனை போல வளர்ந்து
நல்லோர்தம் நெறியறியா
இடும்பரை ஏன்வகுத் தாய்இறை
வாகச்சி ஏகம்பனே (39)

என இந்த ஐந்து பாடல்களிலும் பல்வேறுபட்ட இயல்புகள் கொண்ட மக்களைக் காட்டி அவர்கள் நிலைக்கு அடிகள் இரங்குவதையும் அவர்கள் படைப்புக்கு வருந்துவதையும் காண்கின்றோம்.

ஊற்றைச் சரீரத்தை ஆபாசக்
கொட்டிலை ஊன்பொதிந்த
பீற்றல் துருத்தியைச் சோறிடும்
தோற்பையைப் பேசரிய

காற்றில் பொதிந்த நிலையற்ற
பாண்டத்தைக் காதல்செய்தே
ஏற்றுத் திரிந்துவிட் டேன்இறை
வாகச்சி ஏகம்பனே (27)

நாறும் உடலை நரிப்பொதி
சோற்றினை நான்தினமும்
சோறும் கறியும் நிரப்பிய
பாண்டத்தைத் தோகையர்தம்
கூறும் மலமும் இரத்தமும்
சோரும் குழியில்விழாது
ஏறும் படிஅருள் வாய்இறை
வாகச்சி ஏகம்பனே (34)

என்ற உடலின் இழிநிலையை அடிகள் இரண்டு பாடல்களில் காட்டி அதில் தாம் விழாமல் உய்யுமாறு காக்க வேண்டுகின்றார்.

மேற்கண்டவாறு ஞானி ஒருவரின் பார்வை உடலின்மீது செல்லுகின்றது. இன்னொரு ஞானியின் பார்வை உடலின் மீது எங்ஙனம் செல்லுகின்றது என்பதைக் காண்போம்.

உடம்பார் அழியில்
உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ்
சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும்
உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன்
உயிர்வளர்த் தேனே

உடம்பினை முன்னம்
இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே
உறுபொருள் கண்டேன்

உடம்புளே உத்தமன்
கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந்
தோம்புகின் றேனே [1]

சாதாரண நிலையில் உள்ள மக்கள் இந்த இரு ஞானியரின் திருப்பாடல்களைப் படிக்கும் போது எப்படிக் குழப்பம் அடையாமல் இருக்க முடியும்? இந்தக் குழப்பத்தில் சிக்கித் தவிக்கும் மக்களில் சிலர் தீர்த்தமாடி உடலைத் தூய்மை செய்து துவாதச திருமண் காப்பு இட்டு தியானத்தில் ஈடுபடுகின்றனர் (வைணவர்கள்); இன்னும் சிலர் திருநீற்றுக் காப்பும் சந்தனக் காப்பும் இட்டு தியானத்தில் அழுந்துகின்றனர். கற்றிருந்தும் சிலர் ஞானம் வாய்க்கப் பெறாமல் அலகுகள் குத்திக் கொண்டு காவடி எடுத்துக் கும்மாளம் போடுகின்றனர்; சிலர் திருக்கோயிலைச் சுற்றி அங்கம் பிறழ்கின்றனர். இப்படி இந்து சமயநெறிகள் மக்களைத் திசை திருப்பித் திண்டாட வைக்கின்றன. கூரிய அறிவுடன் சிந்திப்பவர்கட்கு எந்தவிதக் குழப்பமும் நேரிடுவதில்லை. உடம்பினை இழிவுபடுத்தி அதனைத் துன்புறுத்துபவர்கள் இறைவன் படைப்பினைச் சிறிதும் அறியாதவர்கள் என்றே நாம் கருதுவோம். இத்துடன் இது நிற்க.

பட்டினத்தார் பாடல்கட்கு மீண்டும் திரும்புவோம்.

அன்ன விசாரம் அதுவே
விசாரம் அதுஒழிந்தால்
சொன்ன விசாரம் தொலையா
விசாரம்நல் தோகையரைப்
பன்ன விசாரம் பலகால்
விசாரம்இப் பாவிநெஞ்சுக்கு
என்ன விசாரம்வைத் தாய்இறை
வாகச்சி ஏகம்பனே (8)

1. திருமந்திரம் - மூன்றாம் தந்திரம் - 13 காயசித்தி உபாயம் - 1,2

என்ற இத்திருப்பாட்டில் பல்வேறு கவலைகள் பகரப் பெறுகின்றன. தொடர்ந்து,

நல்லார் இணக்கமும் நின்பூசை
நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலைஉள
தோஅக மும்பொருளும்
இல்லாளும் சுற்றமும் மைந்தரும்
வாழ்வும் எழில் உடம்பும்
எல்லாம் வெளிமயக் கேஇறை
வாகச்சி ஏகம்பனே (5)

என்ற பாட்டில் சிலவற்றைத் தவிர பிறவெல்லாம் 'வெளி மயக்கே' என்று கூறி நிலையாமை நாட்டத்தை சூசுப்பிக்கின்றார்.

அறந்தான் இயற்றும் அவனிலும்
கோடி அதிகம்இல்லம்
துறந்தான் அவனில் சதகோடி
உள்ளத் துறவுஉடையோன்
மறந்தான் அறக்கற்று அறிவோடு
இருந்துஇரு வாதனைஅற்று
இறந்தான் பெருமையை என்சொல்லு
வேன்கச்சி ஏகம்பனே (1)

ஊரும் சதமல்ல உற்றார்
சதம்அல்ல உற்றுப்பெற்ற
பேரும் சதமல்ல பெண்டிர்
சதம்அல்ல பிள்ளைகளும்
சீரும் சதம்அல்ல செல்வம்
சதம்அல்ல தேசத்திலே
யாரும் சதம்அல்ல நின்தாள்
சதம்கச்சி ஏகம்பனே (13)

என்ற பாடல்களைப் படித்து அநுபவிக்கும்போது,

நில்லா தவற்றை நிலையின என்றுஉணரும்
புல்லறி வாண்மை கடை (331)

என்ற வள்ளுவர் வாக்கும் நினைவிற்கு வருகின்றது. இந்த இரண்டு பாடல்களும் நிலையாமையை, நிலை நாட்டுபவை என்பதை உணர்கின்றோம்.

பிறக்கும் பொழுது கொடுவந்தது
இல்லை பிறந்துமண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவது
இல்லை இடைநடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்தது
என்று கொடுக்கஅறியாது
இறக்கும் குலாமருக்கு என்சொல்லு
வேன்கச்சி ஏகம்பனே (7)

என்ற பாடலில் செல்வ நிலையாமையைச் செப்புகின் றார் அடிகள். ''புல்லறிவாளர் பெரும்பான்மையும் பற் றுச் செய்வது சிற்றின்பத்துக்கு ஏதுவாகிய செல்வத்தின் கண்ணும், அதனையநுபவிக்கும் யாக்கையின் கண்ணு மாகலின்'' (குறள் 331 - பரிமேலழகர் உரை) என்ற உரைக் குறிப்பையும் நினைக்கின்றோம்.

கல்லாப் பிழையும் கருதாப்
பிழையும் கசிந்துஉருகி
நில்லாப் பிழையும் நினையாப்
பிழையும்நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப்
பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்
வாய்கச்சி ஏகம்பனே (9)

சொல்லால் வருங்குற்றம் சிந்தனை
யால்வரும் தோடம்செய்த
பொல்லாத தீவினைப் பார்வையில்
பாவங்கள் புண்ணியநூல்

அல்லாத கேள்வியைக் கேட்டிடும்
தீங்குகள் ஆயவும்மற்று
எல்லாப் பிழையும் பொறுத்தருள்
வாய்கச்சி ஏகம்பனே (28)

கொன்றேன் அநேக உயிரைஎல்
லாம்பின்பு கொன்றுகொன்று
தின்றேன் அதுவன்றியும் தீங்குசெய்
தேன்அது தீர்கஎன்றே
நின்றேன்நின் சந்நிதிக் கேஅத
னால்குற்றம் நீபொறுப்பாய்
என்றே உனைநம்பி னேன்இறை
வாகச்சி ஏகம்பனே (40)

என்ற இந்த இரண்டு பாடல்களிலும் தம் பிழைகளையும் குற்றங்களையும் பொறுத்தருளுமாறு வேண்டுகின்றார் அடிகள்.

ஆற்றில் கரைத்த புளிஆக்
கிடாமல்என் அன்பைஎல்லாம்
போற்றித் திருவுளம் பற்றும்ஐ
யாபுரம் மூன்றும்எரித்துக்
கூற்றைப் பணிகொளும் நாள்உடை
யாய்குன்ற வில்உடையாய்
ஏற்றுக் கொடிஉடை யாய்இறை
வாகச்சி ஏகம்பனே (22)

பூதங்கள் அற்றுப் பொறிஅற்றுச்
சார்ஐம் புலன்கள் அற்றுப்
பேதங் குணம்அற்றுப் பேராசை
தான்அற்றுப் பின்முன்அற்றுக்
காது கரணங் களும்அற்று
ஆனந்தக் காட்சியிலே
ஏதம் களைந்துஇருப் பேன்இறை
வாகச்சி ஏகம்பனே (31)

நல்லாய் எனக்கு மனுஒன்று
    தந்தருள் ஞானம்இல்லாப்
பொல்லா எனைக்கொன்று போடும்
    பொழுதுஇயல் பூசைசெபம்
சொல்லார் நல்கோயில் நியமம்
    பலவகைத் தோத்திரமும்
எல்லாம் முடிந்தபின் கொல்லுகண்
    டாய்கச்சி ஏகம்பனே (32)

என்ற இந்த மூன்று பாடல்களால் சில வேண்டுகோள்களை விடுப்பதை அறிய முடிகின்றது.

இறுதியாக அடிகள் பெண்களை இழிவுபடுத்திப் பாடுவதுதான் நம்மை வருத்தத்தில் ஆழ்த்துகின்றது.

கைப்பிடி நாயகன் தூங்கையி
    லேஅவன் கையைஎடுத்து
அப்புறம் தன்னில் அசையாமல்
    முன்வைத்து அயல்வளவில்
ஒப்புடன் சென்று துயில்நீத்துப்
    பின்வந்து உறங்குபவளை
எப்படி நான்நம்பு வேன்இறை
    வாகச்சி ஏகம்பனே (3)

காதுஎன்று மூக்குஎன்று கண்என்று
    காட்டிஎன் கண்எதிரே
மாதுஎன்று சொல்லி வரும்மாயை
    தன்னை மறலிவிட்ட
தூதுஎன்றுஎண் ணாமல் சுகம்என்று
    நாடும்இத் துர்ப்புத்தியை
ஏதுஎன்று எடுத்துரைப் பேன்இறை
    வாகச்சி ஏகம்பனே (12)

சீறும் வினையது பெண்உரு
    ஆகித் திரண்டுஉருண்டு
கூறும் முலையும் இறைச்சியும்
    ஆகிக் கொடுமையினால்

பீறும் மலமும் உதிரமும்
சாயும் பெருங்குழிவிட்டு
ஏறும் தரைகண்டி லேன்இறை
வாகச்சி ஏகம்பனே (14)

பெண்ணாகி வந்துஒரு மாயப்
பிசாசம் பிடித்திட்டுஎன்னைக்
கண்ணால் வெருட்டி முலையால்
மயக்கிக் கடிதடத்துப்
புண்ணாம் குழிஇடைத் தள்ளிஎன்
போதப் பொருள்பறிக்க
எண்ணாது உனைமறந் தேன்இறை
வாகச்சி ஏகம்பனே (23)

நாஆர வேண்டும் இதம்சொல்லு
வார்உனை நான்பிரிந்தால்
சாவேன்என் றேஇருந்து ஒக்கஉண்
பார்கள்கை தான்வறண்டால்
போய்வாரும் என்று நடுத்தலைக்
கேகுட்டும் பூவையருக்கு
ஈவார் தலைவிதி யோஇறை
வாகச்சி ஏகம்பனே (24)

முட்டற்ற மஞ்சளை எண்ணெயில்
கூட்டி முகம்மினுக்கி
மெட்டிட்டுப் பொட்டிட்டுப் பித்தளை
ஓலை விளக்கியிட்டுப்
பட்டப் பகலில் வெளிமயக்கே
செயும் பாவையர்மேல்
இட்டத்தை நீதவிர்ப் பாய்இறை
வாகச்சி ஏகம்பனே (29)

இப்படி ஆறு பாடல்கள் முகம் காட்டிப் பாவையரைப்

பழிக்கின்றன. இஃது இறைவன் படைப்பையே பழித் துரைக்கும் பாங்குபோல் தென்படுகின்றது. இனவிருத் தியின் பொருட்டு சிற்றின்ப உணர்வு உயிர்களின் இரு பாலாரிடமும் காட்டப் பெறுகின்றது. இதில் ஆணே பெண்ணை நாடும் இயல்புடையதாக அமைந்துள்ளது. கீழ்நிலை உயிர்களில் இவ்வுணர்வு உடலில் ஊறும் சில சாறுகளால் தூண்டப் பெறுகின்றன. மனித இனத்திடம் இவ்வுணர்வு மூளையால் கட்டுப்படுத்தப் பெறுகின் றது. இதில் அவன் 'திட்டங்களை' வகுத்துச் செயற்படு கின்றான். நிலைமை இப்படியிருக்க, பழி ஆணின்மீது போட வேண்டியிருக்க, பெண் இனத்தின்மீது பழி போடுவது அறிவுடைமயாகத் தோன்றவில்லை. பெண் ணிடம் வனப்பு இருப்பது ஆணை ஈர்க்க இறைவனால் வழங்கப் பெற்றது. இன விருத்திக்காக வழங்கப்பெற்ற இதனை 'காதல் விளையாட்டுக்காக'ப் பயன்படுத்து வது ஆணேயன்றி பெண் அல்ல. நிலைமை இப்படி இருக்க, அடிகள், அடிகள் போன்று வேறு சில ஞானி யர் பெண் இனத்தின்மீது குறை கூறுவது, பழி சுமத்து வது பொருத்தமாகத் தோன்றவில்லை. எந்தப் பெண் ணும் ஆண்களை நாடவில்லை; அடிகளும் அந்த இனத்தை நாடவில்லை. தாயுமான அடிகள் வாழ்க்கை யில் கணவனை இழந்து கைம்பெண்ணான பட்டத்தரசி அடிகளை நாடியதாக வரலாறு உண்டு. ஆனால், நம் அடிகளாரை எந்தப் பெண்ணும் நாடியதாக வரலாறு இல்லை. ஆதி முதல் பெண் இனத்தை படிப்பு முதலி யன இன்றி ஆணினம் அடக்கி வைத்திருந்தது. அந்த இனத்தில் ஆதி முதல் கவிஞர்கள் தோன்றவில்லை. அப்படித் தோன்றி அவர்கள் பாடத் தொடங்குவார்களா னால் ஆண் இனத்தின் அக்கிரமங்கள் காவியம் போல் வளர்ந்து ஆணினத்தின் வாயடக்கித் தலை குனிய வைத்திருக்கும்.

## 4. 'திருஏகம்ப விருத்தம்'

இத்தலைப்பில் கிடைக்கும் ஏகாம்பரநாதனைப் பற்றிய விருத்தம் அற்புதமாக அமைந்துள்ளது.

அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பின்னை எத்தனை எத்தனை பெண்டிரோ
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ
முன்னை எத்தனை எத்தனை சென்மமோ
மூடன் ஆய்அடி யேனும் அறிந்திலேன்
இன்னம் எத்தனை எத்தனை சென்மமோ
என்செய் வேன்கச்சி ஏகம்ப நாதனே

இதனைப் படித்து அநுபவித்து மகிழ்ந்தால் அந்த அநுபவமே அற்புதமாக இருக்கும். நாம் எடுக்கும் பல்வேறு பிறப்புகளில் இவை நேரிடுகின்றன. ஒரு பிறப்பில் உள்ளவை அடுத்த பிறப்பில் இல்லாது போகின்றன.

## 5. தலங்களைப் பற்றிய பாடல்கள்

இத்தலைப்பில் உள்ளவை யாவும் கட்டளைக் கலித்துறை, விருத்தம், வெண்பா முதலான பலவகை யாப்பில் அமைந்தவை. பொது என்ற தலைப்பில் பல பாடல்களும் தாயாருக்குத் தகனம் செய்தபோது பாடிய பாடல்களும் உள்ளன. இப்படிக் கிட்டத்தட்ட 150 பாடல்கள். இவற்றை யாப்பு வரிசையில் ஆழ்ந்து நோக்கி அநுபவிப்போம்.

### *1. கட்டளைக் கலித்துறை*

(1) **திருத்தில்லை:** இத்தலைப்பில் 20 பாடல்கள் உள்ளன. அவற்றுள் சில:

(அ) சோறுஇடும் நாடு துணிதரும்
குப்பைத்தொண்டு அன்பரைக்கண்டு
ஏறிடும் கைகள் இறங்கிடும்
தீவினை எப்பொழுதும்

நீறுஇடும் மேனியர் சிற்றம்
பலவர் நிறுத்தம்கண்டால்
ஊறிடும் கண்கள் உருகிடும்
நெஞ்சம்என் உள்ளமுமே (2)

அம்பலவன் திருநடனம் நேரிலே காணப் பெற்றோர்க்குக் கிடைக்கும் பலனை இப்பாடல் காட்டுகின்றது.

(ஆ) ஓடாமல் பாழுக்கு உழையாமல்
ஓரம் உரைப்பவர்பால்
கூடாமல் நல்லவர் கூட்டம்
விடாமல்வெம் கோபம்நெஞ்சில்
நாடாமல் நன்மை வழுவாமல்
இன்றைக்கு நாளைக்குஎன்று
தேடாமல் செல்வம் தருவாய்
சிதம்பர தேசிகனே (4)

பாராமல் ஏற்பவர்க்கு இல்லைஎன்
னாமல் பழுதுசொல்லி
வாராமல் பாவங்கள் வந்துஅணு
காமல் மனம்அயர்ந்து
பேராமல் சேவை பிரியாமல்
அன்பு பெறாதவரைச்
சேராமல் செல்வம் தருவாய்
சிதம்பர தேசிகனே. (5)

கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல்
குத்திரம் கோள்களவு
கல்லாமல் கைதவ ரோடுஇணங்
காமல் கனவினும்பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல்
தோகையர் மாயையிலே
செல்லாமல் செல்வம் தருவாய்
சிதம்பர தேசிகனே. (6)

எத்தகைய செல்வம் தமக்கு அருளவேண்டும் என்று சிதம்பர தேசிகனை அடிகள் வேண்டுவதை இம் மூன்று பாடல்களும் முறையிடுகின்றன.

(இ) முடிசார்ந்த மன்னரும் மற்றும்உள்
ளோரும் முடிவில்ஒரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணா
வதும்கண்டு பின்னும்இந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்
லால்பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாம்உய்ய வேண்டும்என்
றேஅறி வார்இலையே (7)

மன்னர் முதல் மக்கள் அனைவரும் முடிவில் ஒரு நாள் மறைவது கண்டும் அம்பலவன் அடிசார்ந்து உய்ய வேண்டும் என்பதை அறிவார் இல்லையே என்று அடிகள் இரங்குகின்றார்.

(ஈ) காலை உபாதி மலம்சலம்
ஆம்அன்றிக் கட்டுச்சியில்
சால உபாதி பசிதாகம்
ஆகுமுன் சஞ்சிதம்ஆம்
மாலை உபாதி துயில்காமம்
ஆம்இவை மாற்றிவிட்டே
ஆலம் உகந்துஅருள் அம்பல
வா!என்னை ஆண்டருளே (8)

'எந்தவித உளைச்சலும் இல்லாமல் நின்னடி சேர அருள வேண்டும்' என்று ஆலம் உகந்து ஏற்ற அம்பல வனை வேண்டுகின்றார் அடிகள் இப்பாடலில்.

(உ) ஊட்டுவிப் பானும் உறங்குவிப்
பானும்இங்கு ஒன்றோடுஒன்றை
மூட்டுவிப் பானும் முயங்குவிப்
பானும் முயன்றவினை

காட்டுவிப் பானும் இருவினைப்
பாசக் கயிற்றின்வழி
ஆட்டுவிப் பானும் ஒருவன்உண்
டேதில்லை அம்பலத்தே. (11)

உடுப்பானும் பால்அனம் உண்பானும்
உய்வித்து ஒருவர்தம்மைக்
கெடுப்பானும் ஏதுஎன்று கேள்விசெய்
வானும் கெதிஅடங்கக்
கொடுப்பானும் தேகிஎன்று ஏற்பானும்
ஏற்கக் கொடாமல்நின்று
தடுப்பானும் நீயலை யோதில்லை
ஆனந்தத் தாண்டவனே. (14)

வித்தாரம் பேசினும் சோங்குஏ
றினும்கம்பம் மீதிருந்து
தத்தாஎன்று ஓதிப் பவுரிகொண்டு
ஆடினும் தம்முன்தம்பி
ஒத்தாசை பேசினும் ஆவதுஉண்
டோதில்லை உள்நிறைந்த
கத்தாவின் சொற்படி அல்லாது
வேறுஇல்லை சன்மங்களே (15)

'செய்பவனும் செய்விப்பவனும் எல்லாம் அவன்; எல்லாச் செயல்களும் அவனுடையனவே' என்ற கருத்தை இந்த மூன்று பாடல்களும் பறை சாற்றுகின்றன. இக்கருத்தை அரண் செய்வது போல்,

தெய்வச் சிதம்பர தேவா!உன்
சித்தம் திரும்பிவிட்டால்
பொய்வைத்த சொப்பன மாம்மன்னர்
வாழ்வும் புவியும்எங்கே?
மெய்வைத்த செல்வம்எங் கே?மண்ட
லீகர்தம் மேடைஎங்கே?
கைவைத்த நாடக சாலைஎங்
கே?இது கண்மயக்கே (13)

என்ற பாடலின் கருத்தும் அமைகின்றது.

(ஊ) பிறவா திருக்க வரம்பெறல்
வேண்டும் பிறந்துவிட்டால்
இறவா திருக்க மருந்துஉண்டு
காண்இது எப்படியோ
அறம்ஆர் புகல்தில்லை அம்பல
வாணர் அடிக்கமலம்
மறவாது இருமன மேஅது
காண்நல் மருந்துஉனக்கே (16)

இவ் அறவுரை மன்பதைக் கெல்லாம் வழங்கப் பெறும் ஒரு மாமருந்து போல் அமைந்து திகழ்கின்றது.

(எ) தவியாது இருநெஞ்ச மேதில்லை
மேவிய சங்கரனைப்
புவிஆர்ந்து இருக்கின்ற ஞானா
கரனைப் புரந்தகனை
அவியா விளக்கைப்பொன் அம்பலத்து
ஆடியை ஐந்தெழுத்தால்
செவியாமல் நீசேவித் தால்பிற
வாமுத்தி சித்திக்குமே (17)

நாலின் மறைப்பொருள் அம்பல
வாணரை நம்பிஅவர்
பாலில் ஒருதரம் சேவிக்கஒணாது
இருப்பார் கருங்கல்
மேலில் எடுத்துஅவர் கைவிலங்
கைத்தப்பர் மீண்டும்ஒரு
காலில் நிறுத்துவர் கிட்டியும்
தாம்வந்து காட்டுவரே (18)

என்ற பாடல் இரண்டும் அம்பலவாணரைச் சேவிப்பவர் அடையும் பலனைச் செப்புகின்றன.

ஆற்றோடு தும்பை அணிந்துஆடும்
அம்பலவாணர் தம்மைப்
போற்றா தவர்க்குஅடை யாளம்உண்
டேஇந்தப் பூதலத்தில்

சோற்றுஆவி சுற்றுச் சுகம்அற்றுச்
சுற்றத் துணியும்அற்றே
ஏற்றானும் பிச்சை கிடையாமல்
ஏக்கற்று இருப்பார்களே (19)

என்ற இப்பாடல் அப்பெருமானைச் சேவியாதவர் அடையும் பலனை அம்பலப்படுத்துகின்றது.

(ஏ) அத்தனை, முப்பத்து முக்கோடி
தேவர்க்கு அதிபதியை,
நித்தனை, அம்மை சிவகாம
சுந்தரி நேசனை,எம்
கத்தனை, பொன்அம் பலத்துஆடும்
ஐயனை, காணக்கண்கள்
எத்தனை கோடி யுகமோ
தவம்செய்து இருக்கின்றனவே (20)

அம்பலத்து ஆடல்புரியும் கூத்தனைக் காண வேண்டுவதற்கு பல கோடியுகங்கள் தவம் செய்து கிடக்கின்றன என்கின்றார் அடிகள்.

(2) திருச்செங்காடு: ஒரே பாடல் கொண்டது.

நெருப்பான மேனியர் செல்காட்டில்
ஆத்தி நிழல்அருகே
இருப்பார் திருவுளம் எப்படி
யோஇன்னம் என்னைஅன்னை
கருப்பா சயக்குழிக் கேதள்ளு
மோகண்ணன் காணரிய
திருப்பாத மேதரு மோதெரி
யாது சிவன்செயலே

(3) திருவொற்றியூர்[2]: இத்திருத்தலத்தைப் பற்றி இரண்டு அற்புதமான பாடல்கள்.

2. படடினததார் சமாதி அடைந்த இடம். சென்னை வாழ் தன வணிக நகரத்தா பெருமக்கள தம் குடும்பத்தில் யாராவது சிவகதி அடைந்தால் அவர்கடகு எல்லா ஈமச் சடஙகுகளும் பிறவும் இத்தலத்தில் செய்து வருவது இனறும் வழககமாக இருந்து வருகின்றது.

ஐயும் தொடர்ந்து விழியும்
செருகி அறிவுஅழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற
போதுஒன்று வேண்டுவல்யான்
செய்யும் திருவொற்றி யூர்உடை
யீர்திரு நீறும்இட்டுக்
கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத்து
ஓதவும் கற்பியுமே (1)

சுடப்படு வார்அரி யார்புரம்
மூன்றம்மை சுட்டபிரான்
திடப்படு மாமதில் தென்ஒற்றி
யூரன் தெருப்பரப்பில்
நடப்பவர் பொற்பதம் நந்தலை
மேல்பட நன்குஉருண்டு
கிடப்பது காண்மன மேவிதி
ஏட்டைக் கிழிப்பதுவே (2)

இவை இரண்டும் கற்பகக் கனிகள்.

(4) திருவிடைமருதூர்: இத்தலம் பற்றி இரண்டு பாடல்கள்.

காடே திரிந்துஎன்ன காற்றே
புசித்துஎன்ன கந்தைசுற்றி
ஓடே எடுத்துஎன்ன உன்அன்பு
இலாதவர் ஓங்குவிண்ணோர்
நாடே இடைமரு தீசர்க்கு
மெய்அன்பர் நாரியர்பால்
வீடே இருப்பினும் மெய்ஞ்ஞான
வீட்டுஇன்பம் மேவுவரே (1)

என்பது இவற்றின் முதற்பாடல். எந்த நிலையிலும் இறை அன்பு உள்ளவர் இருக்கலாம்.

(5) திருக்கழுக்குன்றம்: ஒரே ஒரு பாடல் கொண்டது.

காடோ செடியோ கடற்புற
மோகன மேமிகுந்த
நாடோ நகரோ நகர்நடு
வோநல மேமிகுந்த
வீடோ புறந்திண்ணை யோதமி
யேன்உடல் வீழும்இடம்
நீள்தோய் கழுக்குன்றில் ஈசா
உயிர்த்துணை நின்பதமே.

ஒன்றாயினும் ஒப்பற்ற பாடல். எங்கு இருப்பினும் தம் சிந்தை இறைவன் திருப்பாதத்தையே சிந்தித்துக் கொண் டேயிருக்கும் என்பதைத் தெளிவிக்கின்றார் அடிகள்.

(6) திருக்காளத்தி: இத்தலம் பற்றி ஆறு பாடல்கள்.

(அ) பத்தும் புகுந்து பிறந்து
வளர்ந்துபட் டாடைசுற்றி
முத்தும் பவளமும் பூண்டுஓடி
ஆடி முடிந்தபின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தரு
கேஇனிச் சாகும்பிணங்கள்
கத்தும் கணக்குஎன்ன காண்கயி
லாபுரிக் காளத்தியே (1)

என்பது முதற் பாடல். உயிர் பிரிந்த உடலை 'செத்த பிணம்' என்றும் உயிர் உள்ள உடலை 'சாம் பிணம்' என்றும் வேறு பிரித்துக் காட்டுகின்றார் அடிகள். பத்து வயதுப் பாலகன் இறந்த போதும், திருமணம் ஆனவு டன் தம்பதிகளில் எவர் ஒருவர் பிரிந்தாலும், அறுபது

அகவை தாண்டி உலக வாழ்வைப் பதம் பார்த்தபின் படுக்கையில மலசலம் கழித்துக் கொண்டு இல்லத்தி லுள்ள அனைவரும் 'எப்பொழுது ஒழிவாரோ?' என்று ஏங்கித் தவிக்கும் நிலையிலுள்ள ஆணோ பெண்ணோ எவர் ஒருவர் மரித்த போதும் அழுகின்றார்கள். எல்லா அழுகைகளும் ஒன்றா? மூன்றாவது வகையில் இறந்து பட்டவர்க்காக அழுவது 'ஒப்புக்கு அழுகை' என்று சொல்லலாமல்லாவா? 'மாரடிச்ச கூலி மடி மேலே' என்று கூறும் ஒருவகை அழுகையும் உண்டு. இங்கு அழுபவர்கள் இறந்தவருடன் எவ்வகையிலும் தொடர் புடையவர் அல்லர். "கூலிக்கு மார் அடிப்பவர்கள்". இவர்கள் பிணம் மயானத்துக்குத் தூக்கும்போது முன் ஏற்பாட்டுடன் வருபவர்கள். அக்கம்பக்கத்திலுள்ளார் வியக்கும் வண்ணம் 'போலி அழுகை' அழுபவர்கள். பிணம் தூக்கப்படும்போது உச்சகடத்தில் அழுகை சென்று ஓயும். பிணம் போன பின்பு தரகர்கள் இவர் களை வரிசையாக அமரச் செய்து 'இரண்டு அச்சு வெல்லமும், உழக்குப் பொட்டுக்கடலையும்' ஒவ்வொ ருவருக்கும் வழங்குவார்கள்.[3] ஔவைப் பாட்டிகூட இவ்வழுகையைத் தவிர்க்க வேண்டும் என்று கூறும் போக்கில்,

'ஆண்டாண்டு தோறும்
அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ?'

என்று கூறிச் செல்வதையும் நாம் அறிவோம்.

3. நான் துறையூரில் (திருசசி மாவட்டம்) உயர்நில்லை பள்ளியில் தலைமையா சிரியனாகப் பணியாற்றியபோது (1941-50) - ஏதோ ஓர் ஆண்டில் ஒரு நாள என்னுடன் பணியாற்றிய இராமய்யா என்ற இளநிலை ஆசிரியர் எனக்கு இக்காட்சியை முன்னேற்பாடுடன் காட்டியதாக நினைவு.

(ஆ) பொன்னால்ப்ர யோசனம் பொன்படைத்
தாற்குஉண்டு பொன்படைத்தோன்
தன்னால்ப்ர யோசனம் பொன்னுக்கங்கு
ஏதுஉண்டுஅத் தன்மையைப்போல்
உன்னால்ப்ர யோசனம் வேணதுஎல்
லாம்உண் டுனைப்பணியும்
என்னால்ப்ர யோசனம் ஏதுஉண்டு
காளத்தி ஈச்சுரனே (2)

இப்பாடலைச் சிந்திக்கும்போது வைணவத்தின் ஒரு கொள்கை நினைவிற்கு வரும். 'ஈசுவர இலாபம் சேதநனுக்கா? சேதந இலாபம் ஈசுவரனுக்கா?' என்பதே அது. 'சேதந இலாபம் தான் ஈசுவரனுக்கு' என்பதாக முடிவு கட்டினர் வைணவ ஆசாரியர்கள். திருவாய்மொழியில் (9.6),

திருஅருள் செய்பவன்
போலஎன் னுள்புகுந்து
உருவமும் ஆருயிரும்
உடனே உண்டான் (5)

'வாரிக் கொண்டு உன்னை,
விழுங்குவன் காணில்' என்று
ஆர்வுற்ற என்னை
யொழியஎன் னில்முன்னம்
பாரித்து தான்என்னை
முற்றப் பருகினான் (10)

என்ற பாசுரங்களையும்,

'முன் பாசுரத்தில் உணவு உண்டதைச் சொல்லிற்று; உண்டவனுக்குத் தண்ணீர் வேண்டுமல்லவா? அதனைப் பருகினது இப்பாசுரத்தில் சொல்லுகிறது' என்ற உரைக் குறிப்பையும் நோக்கும்போது இக்கருத்து

உறுதிப்படுகின்றது. மேலும் 'நம்மாழ்வாரைப் போல நல்ல ஆன்மாக்களைப் பெறுவதற்காகவே 108 திவ்விய தேசங்களில் கோயில் கொண்டு வந்து போவாரையெல் லாம் சோதிக்கின்றான்' என்ற கருத்தும் இதனை அரண் செய்கின்றது. இதனால் அடிகளாரைப் போன்ற ஒரு வரை ஈசுவரன் பெறுவது அவனுக்கு இலாபம் என்ப தாக நாம் கொள்ளுகின்றோம்.

(இ) வாளால் மகவுஅரிந்து ஊட்டவல்
லேன்அல்லேன்; மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல்
லேன்அல்லேன்; தொண்டுசெய்து
நாள்ஆறில் கண்இடந்து அப்பவல்
லேன்அல்லேன்; நான்இனிச்சென்று
ஆளாவது எப்படி யோதிருக்
காளத்தி அப்பனுக்கே (3)

முப்போதும் அன்னம் புசிக்கவும்
தூங்கவும் மோகத்தினால்
செப்புஒது இளமுலை யாருடன்
சேரவும் சீவன்விடும்
அப்போது கண்கலக் கப்பட
வும்அமைத் தாய்ஐயனே
எப்போது காணவல் லேன்திருக்
காளத்தி ஈச்சுரனே (4)

இரைக்கே இரவும் பகலும்
திரிந்திங்கு இளைத்துமின்னார்
அரைக்குஎய் அவலக் குழியரு
கேஅசும்பு ஆர்ந்தொழுகும்
புரைக்கே உழலும் தமியேனை
ஆண்டருள் பொன்முகலிக்
கரைக்கேகல் ஆலின் நிழற்கீழ்
அமர்ந்தருள் காளத்தியே (5)

இந்த மூன்று பாடல்களும் அடிகளின் 'நைச்சியானு சந்தானம்' (தம்மைத் தாழ்வாகக் கூறிக் கொள்ளுதல்) போல் அமைந்துள்ளன. தம்மிடம் எந்தவிதக் குறைகளும் இல்லாதிருக்கவும் இப்படித் தம்மிடம் குறையிருப்பதுபோல் பாடுவன ஞானியரின் வழக்கம் என்று கொள்வோம். நம்மாழ்வாரும் மணிவாசகப் பெருமானும் கூட இங்ஙனம்தான் தம்மைத் தாழ்வாகக் கூறிக் கொள்ளுகின்றனர் என்பதை நினைவு கூரலாம்.

(ஈ) நாறும் குருதிச் சலதாரை
தோல்புரை நாள்தொறும்சீ
ஊறும் மலக்குழி காமத்
துவாரம் ஒளித்திடும்புண்
தேறும் தசைப்பிளப்பு அந்தரங்
கத்துஉள சிற்றின்பம்விட்டு
ஏறும் பதந்தரு வாய்திருக்
காளத்தி ஈச்சுரனே (6)

உடலின் இழிநிலையைக் காட்டி அதில் சிக்கி சிற்றின்பத்தில் ஈடுபடாமல் காத்தல் வேண்டும் என்ற விண்ணப்பத்தை காளத்திநாதன் முன் வைக்கின்றார்.

(7) **கயிலாயம்:** ஊனக்கண் காணா உண்மைக் கயிலாயத்தைப்பற்றி எட்டுப் பாடல்கள்:

(அ) கான்சாயும் வெள்ளி மலைக்கர
சேநின் கழல்நம்பினேன்
ஊன்சாயும் சென்மம் ஒழித்திடு
வாய்கர வூரனுக்காய்
மான்சாயச் செங்கை மழுவலம்
சாய வனைந்தகொன்றைத்
தேன்சாய நல்ல திருமேனி
சாய்த்த சிவக்கொழுந்தே (1)

இத்திருப்பாடலில் அடிகள் பிறவி பிணியை நீக்கியருளுமாறு வேண்டுகின்றார்.

(ஆ) அடுத்து வரும் ஆறு பாடல்கள் தாம் ஒருவித பற்றும் இன்றி அவனையே நினைந்து கொண்டு ஆனந்த அனந்தலில் இருப்பது என்றோ என்று சொல்லி ஏங்குகின்றார்.

இல்லம் துறந்து பசிவந்த
போதுஅங்கு இரந்துநின்று
பல்லும் கறைஅற்று வெள்வாயும்
ஆய்ஒன்றில் பற்றும்இன்றிச்
சொல்லும் பொருளும் இழந்து
சுகஆனந்தத் தூக்கத்திலே
அல்லும் பகலும் இருப்பதென்
றோகயி லாயத்தனே (2)

நீறுஆர்த்த மேனி உரோமம்
சிலிர்த்துஉளம் நெக்குநெக்குச்
சேறுஆய்க் கசிந்து கசிந்தே
உருகிநின் சீரடிக்கே
மாறாத் தியானம்உற்று ஆனந்தம்
மேற்கொண்டு மார்பில்கண்ணீர்
ஆறாய்ப் பெருகக் கிடப்பதுஎன்
றோயி லாயத்தனே (5)

செல்வரைப் பின்சென்று சங்கடம்
பேசித் தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவி
யாமல் பரஆனந்தத்தின்
எல்லையில் புக்கிட ஏகாந்த
மாய்எனக்கு ஆம்இடத்தே
அல்லல்அற்று என்றுஇருப் பேன்அத்த
னேகயி லாயத்தனே (6)

என்ற இந்த மூன்று பாடல்களிலும் சுகஆனந்த அனந்த லில் இருக்கும் நிலையை வெவ்வேறு விதமாய் வேண்டு வதைக் கண்டு மகிழலாம்.

(இ) வருந்தேன் பிறந்து பிறந்து
மயக்கும் புலன்வழிப்போய்ப்
பொருந்தேன் நரகில் புகுகின்
றிலேன்புகழ் வாரிடத்தில்
இருந்தேன் இனிஅவர் கூட்டம்
விடேன்இயல் அஞ்செலுத்தாம்
அருந்தேன் அருந்துவன் நின்அரு
ளால்கயி லாயத்தனே (8)

என்ற பாடலில் "பிறவிப் பிணி முன்வினைப் பயனால் நேரிட்டாலும் அப்பிணியை நின் அஞ்செலுத்து ஓதுவதால் போக்கிக் கொள்வேன்" என்று சொல்லி மகிழ்கின்றார் அடிகள்.

(8) **மதுரை:** இத்தலத்தைப் பற்றி ஒரே ஒரு பாடல். இது சொக்கநாதப் பெருமானை வேண்டும் போக்கில் அமைந்துள்ளது.

விடப்படு மோஇப் பிரபஞ்ச
வாழ்க்கையை விட்டுமனம்
திடப்படு மோநின் அருள்இன்றி
யேதின மேஅலையக்
கடப்படு மோஅற்பர் வாயிலிற்
சென்றுகண் ணீர்த்துயிலப்
படப்படு மோசொக்க நாதா!
சவுந்தர பாண்டியனே (8)

இதில் பல்வேறு நிலைகளில் ஏற்படும் தம் இவ்வகில வாழ்க்கையை எண்ணி அங்கலாய்க்கின்றார்.

(9) **பொது:** இத்தலைப்பில் 61 பாடல்கள் உள்ளன. இவை இவர்தம் உலக வாழ்க்கையைப் பல்வேறு விதமாகச் சித்திரிக்கின்றன. அரிய கருத்துகள் எளிமையாக விளக்கப் பெறுகின்றன. சிலவற்றில் ஆழங்கால் பட்டு மகிழ்வோம்.

(1) *மனநிறைவு*

உடைகோ வணமுண்டு உறங்கப்
  புறந்திண்ணை உண்டுஉணஇங்கு
அடைக்காய் இலைஉண்டு அருந்தத்தண்
  ணீர்உண்டு அருந்துணைக்கே
விடையேறும் ஈசர் திருநாமம்
  உண்டுஇந்த மேதினியில்
வடகோடு உயர்ந்தென்ன தென்கோடு
  தாழ்ந்தென்ன வான்பிறைக்கே (1)

வீடு நமக்குத் திருவாலங்
  காடு விமலர்தந்த
ஓடு நமக்குஉண்டு வற்றாத
  பாத்திரம் ஓங்குசெல்வ
நாடு நமக்குண்டு கேட்டதெல்
  லாம்தர நல்நெஞ்சமே
ஈடு நமக்குச் சொல்லவோ
  ஒருவரும் இங்கில்லையே (2)

உடல் வாழக்கைக்கு அனைத்தும் இருப்பதாலும் பரகதிக்கு ஈசன் நாமம் இருப்பதாலும், திருவாலங்காடு நமக்கு வீடாக இருப்பதாலும் நாடு நமக்கு நாடுவன வெல்லாம் நல்குவதாலும் மனநிறைவு பெறுவதாகக் கூறுகின்றார் அடிகள்.

கண்உண்டு காணக் கருத்துண்டு
  நோக்கக் கசிந்துருகிப்
பண்உண்டு பாடச் செவிஉண்டு
  கேட்கப் பச்சிலையால்
எண்உண்டு சாத்த எதிர்நிற்க
  ஈசன் இருக்கையிலே
மண்உண்டு போகுதுஐ யோகெடு
  வீர்இந்த மானுடமே (5)

வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்து வசதிகளுடன் இறைவனும் கூட இருந்தும் மானுடம் கெட்டழிகின் றதே என்று வருந்துகின்றார்.

(ii) **ஈசன் இருப்பிடம்:** ஈசனது இருப்பிடமாக நேரல் முறையில் சுட்டப்பெற்றிருப்பினும் நேர் முறையில் சுட்டுவது இது.

சொல்லிலும் சொல்லின் முடிவிலும்
    வேதச் சுருதியிலும்
அல்லிலும் மாசுஅற்ற ஆகாயந்
    தன்னிலும் ஆய்ந்துவிட்டோர்
இல்லிலும் அன்பர் இடத்திலும்
    ஈசன் இருக்கும்இடம்
கல்லிலும் செம்பிலு மோஇருப்
    பான்எங்கள் கண்ணுதலே (6)

இப்பாடலைக் கேட்டவர்களில் இதன் நயம் உணராமல் பட்டினத்தடிகள் உருவ வழிபாட்டைக் கடிபவர் எனத் தவறாகப் பிரசாரம் செய்வோரும் உளர்.

(iii) **உலகோருக்கு உபதேசம்:** நான்கு பாடல்களில் இதனைக் காணலாம்.

ஒன்றுஎன்று இரு;தெய்வம் உண்டுஎன்று
    இரு;உயர் செல்வம்எல்லாம்
அன்றுஎன்று இரு;பசித் தோர்முகம்
    பார்;நல் லறமும் நட்பும்
நன்றுஎன்று இரு;நடு நீங்காம
    லேநமக்கு இட்டபடி
என்றுஎன்று இரு;மன மே!உனக்
    கேஉப தேசம்இதே. (20)

இஃது இறைவன் இருப்பைக் காட்டுவது.

என்செயல் ஆவது யாதுஒன்றும்
    இல்லை இனித்தெய்வமே

உன்செய லேஎன்று உணரப்பெற்
றேன்இந்த ஊன்எடுத்த
பின்செய்த தீவினை யாதுஒன்றும்
இல்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோஇங்ங
னேவந்து மூன்றதுவே (22)

'எல்லாம அவன் செயல்; நடப்பது முன்வினைப் பயன்' என்று உலகோருக்கு உணர்த்துவது இப்பாடல்.

ஊரீர் உமக்குஓர் உபதேசம்
கேளும்; உடம்புஅடங்கப்
போரீர் சமணைக் கழுஏற்றும்
நீற்றைப் புறந்திண்ணையில்
சாரீர் அனந்தலைச் சுற்றத்தை
நீக்கிச் சகம்நகைக்க;
ஏரீர் உமக்கு அவர்தாமே
தருவர் இணையடியே (39)

'உடம்பு எல்லாம் நீறு பூசி, புறத்திண்ணையில் கிடந்து, அனைத்தையும் துறந்தால், அவனே உமக்கு இணையடியை நல்குவன்' என்பது ஊருக்கு உபதேசம்.

நாய்க்குஉண்டு தொண்டு; நமக்குஉண்டு
பிச்சை; நமனைவெல்ல
வாய்க்குஉண்டு மந்திர பஞ்சாட்
சரம்;மதி யாமல்வரும்
பேய்க்குஉண்டு நீறு; திகைப்புஉண்டு;
நின்ற பிறவிப்பிணி
நோய்க்குஉண்டு; தேசிகன் தன்னருள்
நோக்கங்கள் நோக்குதற்கே (43)

'ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொன்று உண்டு' என்ற உண்மையை அனைவர்க்கும் உணர்த்துவது இப்பாடல்.

(iv) **உடற்பற்று: இதுபற்றி மூன்று பாடல்கள்:**

எரிஎனக்கு என்னும்; புழுவோ
எனக்குஎனும்; இந்தமண்ணும்
சரிஎனக்கு என்னும்; பருந்தோ
எனக்குஎனும் தான்புசிக்க;
நரிஎனக்கு என்னும்;புன் நாய்எனக்கு
என்னும்;இந் நாறுஉடலைப்
பிரியமு டன்வளர்த் தேன்இத
னால்என்ன பேறுஎனக்கே (26)

எரிமுதல் நரிவரை உரிமை கொண்டாடும் நாறும் உடலைப் பிரியமுடன் வளர்த்த தனக்கு ஒரு பேறும் இல்லை என்கின்றார் அடிகள்.

என்பெற்ற தாயரும் என்னைப்
பிணம்என்று இகழ்ந்துவிட்டார்;
பொன்பெற்ற மாதரும் போவென்று
சொல்லிப் புலம்பிவிட்டார்;
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம்
வந்து குடமுடைத்தார்;
உன்பற்று ஒழிய ஒருபற்றும்
இல்லை உடையவனே (28)

தாய், மாதர், மைந்தர் வேண்டா என ஒதுக்கிய பின் தான் மட்டிலும் கொண்ட இதன்மீது பற்று வைத்திருப்பது என்னோ? என்கின்றார்.

விடக்கே பருந்தின் விருந்தே
கமண்டல வீணன்இட்ட
முடக்கே புழுவந்து உறைஇட
மேநலம் முற்றும்இலாச்
சடக்கே கருவி தளர்ந்துவிட்
டால்பெற்ற தாயும்தொடாத்
தொடக்கே உனைச்சுமந் தேன்நின்னில்
ஏது சுகம்எனக்கே (36)

உயிர் போன பின் பருந்து முதல் பலரும் விரும்பும், ஆனால் ஈன்றெடுத்த அன்னையும் தொட விரும்பாத உடலைச் சுமந்த தமக்கு அதனால் எந்த சுகமும் இல்லை என்கின்றார் அடிகள்.

(v) ***நாறும் உடல்மீது மோகம்:*** உடலைப் பற்றி - வேறொரு விதமாகவும் சிந்திக்கின்றார் அடிகள். நாறும் உடல் மீது 'மோகம்' வைத்திருப்பது அது.

சீயும் குருதிச் செழுநீர்
வழும்பும் செறிந்துஎழுந்து
பாயும் புடைவைஒன் றில்லாத
போது பகல்இரவாய்
ஈயும் எறும்பும் புகுகின்ற
யோனிக்கு இரவுபகல்
மாயும் மனிதரை மாயாமல்
வைக்க மருந்துஇல்லையே (14)

இனப் பெருக்கத்திற்காக இறைவனால் வழங்கப் பெற்ற இவ்வுணர்வை - பிறந்த இடத்தை நாடி நிற்கும் ஆண்களை - இப்படிக் கூறுவது பொருந்துமாறு இல்லை.

தாயாரும் சுற்றமும் பெண்டிரும்
கைவிட்டுத் தாழ்ந்திடும்நாள்
நீயாரு நான்ஆர் எனப்பகர்
வார்அந்த நேரத்திலே
நோயாரும் வந்து குடிகொள்வ
ரேகொண்ட நோயும்ஒரு
பாயாரும் நீயும்அல் லால்பின்னை
ஏதுநட் பாம்உடலே (47)

''எல்லோரும் கைவிட்ட நிலையில் நோயும் வந்து குடிகொண்ட போது 'பாயும் நீயும்' தான் அதற்கு நட்பாக இருப்பீர்கள்'' என்கின்றார்.

ஆங்காரப் பொக்கசம் கோபக்
களஞ்சியம் ஆணவந்தான்
நீங்கா அரண்மனை பொய்வைத்த
கூடம்விண் நீடிவளர்
தேங்குஆர் பெருமதில் காமவி
லாசம்இத் தேகம்கந்தல்
பாங்காய் உனைப்பணிந்து எப்படி
ஞானம் பலிப்பதுவே (55)

ஆங்காரம் முதலியவை ஆன்மாவின் குறைகள். அவை நிறைந்த ஆன்மாவுக்கு இருப்பிடமாக இலங்கு வது இந்த உடல். அது ஆங்காரத்தின் அரண்மனை, பெருமதில், காமவிலாசம் என்று வருணிக்கப் பெறுகின் றது. இத்தகைய உடலைத் துணையாகக் கொண்டு ஞானம் பலிப்பது எப்படி? என்பது அடிகளின் வினா.

நாய்க்குஒரு சூலும் அதற்குஓர்
மருத்துவம் நாட்டில்உண்டோ?
பேய்க்குஒரு ஞானம் பிடிபடு
மோபெரும் காஞ்சிரங்காய்
ஆக்குவர் ஆர்அது அருந்துவர்
ஆர்அது போல்உடம்பு
தீக்குஇரை ஆவதுஅல் லால்எதுக்கு
ஆம்இதைச் செப்புமினே (57)

காஞ்சிரங்காய் போன்றது உடம்பு. காஞ்சிரங்காய் உண் பதற்கு உதவாது. அதுபோல் இந்த உடம்பும் தீக்கு இரையாவதுதான் பொருத்தமாகும்.

(vi) **தவத்தின் பெருமை:** இஃது ஒரு பாடலில் காட்டப் பெறுகின்றது.

மனையாளும் மக்களும் வாழ்வும்
தனமும்தன் வாயில்மட்டே
இனமான சுற்றம் மயானமட்
டேவழிக்கு ஏதுத்துணை

திணையாம் அளவுஎள் அளவுஆ
கினும்முன்பு செய்ததவம்
தனைஆள என்றும் பரலோகம்
சித்திக்கும் சத்தியமே (12)

ஏனையவை ஓர் அளவு மட்டும் இருக்க முன் செய்த தவம் ஒரு திணை அல்லது எள் அளவு இருந்தாலும் அது பரலோகம் கிட்டச் செய்யும் என்பது அடிகள் காட்டும் ஒளிவிளக்கு.

(VII) ***உண்மை ஞானம்:*** இதுபற்றி இரண்டு பாடல்கள்:

பேய்போல் திரிந்து பிணம்போல்
கிடந்துஇட்ட பிச்சைஎல்லாம்
நாய்போல் அருந்தி நரிபோல்
உழன்றுநன் மங்கையரைத்
தாய்போல் கருதித் தமர்போல்
அனைவர்க்கும் தாழ்மைசொல்லிச்
சேய்போல் இருப்பர்கண்டீர் உண்மை
ஞானம் தெளிந்தவரே (35)

இப்பாடல் உண்மை ஞானம் தெளிந்தவரின் தோற்றத்தை இயம்புவது. இத்தகையவர் செயலை,

உளிஇட்ட கல்லையும் ஒப்புஇட்ட
சாந்தையும் ஊத்தைஅறப்
புளிஇட்ட செம்பையும் போற்றுகி
லேன்உயர் பொன்எனவே
ஒளிஇட்ட தாள்இரண்டு உள்ளே
இருத்துவது உண்மைஎன்று
வெளியிட்டு அடைத்துவைத் தேன்இனி
மேல்ஒன்றும் வேண்டிலனே (61)

என்ற பாடல் செப்புகின்றது. இறைவனது அடியிணையை உள்ளத்தில் அடைத்து வைத்ததாகவும், ஆதலால் இதன் பிறகு தமக்கு ஒன்றும் தேவை இல்லை என்பதாகவும் உரைக்கின்றார் அடிகள்.

(viii) ***உண்மை ஞானத்தின் பயன்:*** இதனை ஒரு பாடல் உரைக்கின்றது.

அத்தமும் வாழ்வும் அகத்துமட்
டேவிழி அம்புஒழுக
மெத்திய மாதரும் வீதிமட்
டேவிம்மி விம்மிஇரு
கைத்தலை மேல்வைத்து அழும்மைந்
தரும்சுடு காடுமட்டே
பற்றித் தொடரும் இருவினைப்
புண்ணிய பாவமுமே (13)

இதனால் தெளிந்தவர்கள் எல்லாம் ஒரு நிலையில் நின்றுவிட, தொடர்ந்து வருவன அவரவர் செய்த புண்ணியமும் பாவமும் ஆகும் என்பதை அறிவார்கள்.

(ix) **இதனைத் தொடர்வன:** என்பது பற்றி நான்கு பாடல்கள் நவில்கிறன:

உரைக்கைக்கு நல்ல திருஎழுத்து
ஐந்துஉண்டு; உரைப்படியே
செருக்கித் தரிக்கத் திருநீறும்
உண்டு; தெருக்குப்பையில்
தரிக்கக் கரித்துணி ஆடையும்
உண்டு;எந்தச் சாதியிலும்
இரக்கத் துணிந்துகொண் டேன்;குறை
ஏதும் எனக்குஇல்லையே (32)

''உண்மை ஞானம் தட்டுப்பட்டதும் நாவினால் நவிற்ற ஐந்து எழுத்தும் இதனைத் தொடர்ந்து உடலெங்கும் பூசிக் கொள்ளத் திருநீறும், தரிக்கக் கரித்துணி ஆடையும் இருப்பதை அறிந்து சாதி வேறுபாடு கருதாமல் பிச்சை துணிந்து ஏற்பதைத் தெளிந்தேன். இவற்றால் எனக்குக் குறையொன்றும் இல்லை'' என்பதைத் தெரிவிக்கின்றார்.

இவற்றால் ஏற்படும் பரமாபர ஆனந்தம் மூன்று பாடல்களில் உணர்த்தப் பெறுகின்றது.

சுரப்புஅற்று வல்வினை சுற்றமும்
அற்றுத் தொழில்கள்அற்றுக்
கரப்புஅற்று மங்கையர் கைஇணக்கு
அற்றுக் கவலைஅற்று
வரப்புஅற்று நாதனை வாய்ஆர
வாழ்த்தி மனம்அடங்கப்
பரப்புஅற்று இருப்பதன் றோபர
மாபரம் ஆனந்தமே (34)

அனைத்தும் அற்று எம்பெருமானை வாழ்த்தி மனம் ஆனந்தம் அடைகின்றது.

செல்வரைப் பின்சென் றுஉபசாரம்
பேசித் தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவி
யாமல் பரானந்தத்தின்
எல்லையில் புக்குநல் ஏகாந்த
மாய்எனக்கு ஆம்இடத்தே
அல்லல்அற்று என்றுஇருப் பேன்ஆல
நீழல் அரும்பொருளே (38)

பூரண ஆனந்தம் அடைந்த மனம் அல்லல் அற்று ஏகாந்தமாய் இருக்கும் நிலையைச் சுட்டுகின்றது என்பதைக் காட்டுவது இப்பாடல்.

ஓங்கார மாய்நின்ற வத்துவி
லேஒரு வித்துவந்து
பாங்காய் முளைத்த பயன்அளித்
தால்பதி னால்உலகு
நீங்காமல் நீங்கி நிறையா
நிறைந்து நிறைஉருவாய்

ஆங்காரம் ஆனவர்க்கு எட்டாக்
கனிவந்து அமர்ந்திடுமே (41)

இங்ஙனம் ஏகாந்தமாய் இருக்கும் நிலையில் ஓங்காரப் பொருளில் ஒருவிதப் பாங்காய் முளைத்த பயன் அறிந்தால் பதினான்கு உலகையும் கடந்து நிறை உருவாய் ஆங்காரம் ஆனவர்க்கு எட்டாக் கனியான பரமபதமும் கிட்டிவிடும்.

(x) ***பேரின்பம்:*** பேரின்பம் பற்றி ஒரு பாடல்.

அட்டாங்க யோகமும் ஆதாரம்
ஆறு அவத்தைஐந்தும்
விட்டுஏறிப் போன வெளிதனி
லேவியப்பு ஒன்றுகண்டேன்
வட்டுஆகிச் செம்மதிப் பால்ஊறல்
உண்டு மகிழ்ந்திருக்க
எட்டாத பேரின்பம் என்னை
விழுங்கி இருக்கின்றதே (25)

தாம் பேரின்பத்தில் ஆழ்ந்து கிடப்பதைக் காட்டுகின்றார் அடிகள்.

(xi) ***வினைப்பயன்:*** இதுபற்றி ஒரே ஒரு பாடல்; ஒப்பற்ற பாடல்.

என்செயல் ஆவது யாதுஒன்றும்
இல்லை; இனித்தெய்வமே
உன்செய லேஎன்று உணரப்பெற்
றேன்இந்த ஊன்எடுத்த
பின்செய்த தீவினை யாதுஒன்றும்
இல்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோஇங்ங
னேவந்து மூண்டதுவே (22)

தம் செயல்களைச் சோதிக்கும் பழக்கமுடைய அடிகள் தாம் நடைமுறைப் பிறப்பில் செய்த தீவினை ஒன்றும் இல்லை என்று உறுதி செய்து கொண்டு முற்பிறப்பில் செய்த தீவினைதான் தம்முடைய இன்றைய நிலைக்குக் காரணம் என்பதை அறுதியிடுகின்றார்.

(xii) ***நிலையாமை:*** உலகிலுள்ள பொருள்கள் யாவும் உண்மையல்ல, உருவெளித் தோற்றமே என்று கூறும் அற்புதமான பாடல் ஒன்று உள்ளது.

மைஆடு கண்ணியும் மைந்தரும்
  வாழ்வும் மனையும் செந்தீ
ஐயாநின் மாயை உருவெளித்
  தோற்றம் அகிலத்துஉள்ளே
மெய்யா இருந்தது நாள்செல
  நாள்செல வெட்டவெறும்
பொய்யாய்ப் பழங்கதை யாய்க்கன
  வாய்மெல்லப் போனதுவே (52)

என்ற பாடலின் அருமைப்பாட்டைப் பலமுறைப் படித்துப் படித்து அநுபவித்து மகிழலாம்.

(xiii) ***மனம் பற்றிய பாடல்கள்:*** கவிஞர்கள் தம்மை வேறாகவும் மனத்தை வேறாகவும் பிரித்துக் கொண்டு பாடும் மரபு ஒன்று உண்டு. அம்மரபையொட்டிப் பல பாடல்கள்:

வினைப்போக மேஒரு தேகம்கண்
  டாய்வினை தான்ஒழிந்தல்
தினைப்போது அளவும்நில் லாதுகண்
  டாய்சிவன் பாதம்தனை
நினைப்போரை மேவு நினையோரை
  நீங்கிஇந் நெறியினின்றால்
உனைப்போல் ஒருவர் உண்டோமன
  மேஎனக்கு உற்றவரே (பொது-7)

தன்னோடு ஒத்து நன்னெறியில வாழத் துணை புரியும் மனத்தைப் பாராட்டி மகிழ்கின்றார்.

தமக்கு உலக வாழ்வில் தேவையாக உள்ள எல்லா வசதிகளையும் பற்றி மூன்று பாடல்கள்:

ஆறுஉண்டு தோப்புஉண்டு அணிவீதி
அம்பலம் தானும்உண்டு
நீறுஉண்டு கந்தை நெடுங்கோ
வணம்உண்டு நித்தம்நித்தம்
மாறுண்டு உலாவி மயங்குநெஞ்
சேமனை தோறும்சென்று
சோறுஉண்டு தூங்கிப்பின் சும்மா
இருக்கச் சுகமும்உண்டே (16)

உடுக்கக் கவிக்கக் குளிர்காற்று
வெயில் ஒடுங்கிவந்தால்
தடுக்கப் பழைய ஒருவேட்டி
உண்டு சகம்முழுதும்
படுக்கப் புறந்திண்ணை எங்குளங்கும்
உண்டு பசித்துவந்தால்
கொடுக்கச் சிவன்உண்டு நெஞ்சே
நமக்குக் குறைவில்லையே (17)

மாடுஉண்டு கன்றுஉண்டு மக்கள்உண்டு
என்று மகிழ்வதெல்லாம்
கேடுஉண்டு எனும்படி கெட்டுவிட்
டோம்இனிக் கேள்மனமே
ஓடுஉண்டு கந்தைஉண்டு உள்ளே
எழுத்துஐந்தும் ஓதவுண்டு
தோடுஉண்ட கண்டன்அடியார்
நமக்குத் துணையும்உண்டே (18)

என்ற பாடல்களில் இவை காட்டப் பெற்றுள்ளன. மேலும் ஓதுவதற்கு ஐந்தெழுத்தும் அடியார் துணையும் இருப்பதை நினைந்து மகிழ்கின்றார்.

வேறு இரண்டு பாடல்களில் இருக்கும் நிலைக ளைப் பொறுத்துக் கொண்டு இருக்குமாறும் அனைத் தும் துயிலின் கனவு என்று கருதுமாறும் அறவுரை அருளுகின்றார்.

அழுதால் பயன்என்ன நொந்தால்
பயன்என்ன ஆவதுஇல்லை
தொழுதால் பயன்என்ன நின்னை
ஒருவர் சுடஉரைத்த
பழுதால் பயன்என்ன நன்மையும்
தீமையும் பங்கயத்தோன்
எழுதாப் படிவரு மோசலி
யாதிருஎன் ஏழைநெஞ்சே (37)

விதியார் படைப்பும் அரியார்
அளிப்பும் வியன்கயிலைப்
பதியார் துடைப்பும்நம் பால்அணு
காது பரானந்தமே
கதியாகக் கொண்டுமற்று எல்லாம்
துயிலில் கனவுஎனநீ
மதியா திருமன மேஇது
காண்நல் மருந்துனக்கே (42)

என்ற பாடல்களில் இவற்றைக் கண்டு மகிழலாம்.

பிறிது மூன்று பாடல்களில் வேறு முறையில் தரப் பெறும் அறவுரை; இங்கு அதன் பித்து நிலையைக் கடிகின்றார்.

நான்எத் தனைபுத்தி சொன்னாலும்
கேட்கிலை நல்நெஞ்சமே
ஏன்இப் படிகெட்டு உழலுகின்
றாய்இனி ஏதும்இல்லா
வானத்தின் மீனுக்கு வன்தூண்டில்
இட்ட வகைஅதுபோல்
போனத்தை மீள நினைக்கின்
றனைஎன்ன புத்திஇதே (45)

ஆயாய் பல்கலை ஆய்ந்திடும்
தூய அருந்தவர்பால்
போய்ஆ கிலும்உண்மை யைத்தெரிந்
தாய்இல்லை பூதலத்தில்
வேய்ஆர்ந்த தோளியர் காமவி
காரத்தில் வீழ்ந்தழுந்திப்
பேயாய் விழிக்கின் றனைமனமே
என்ன பித்துஉனக்கே (53)

சற்றுஆ கிலும்தன்னைத் தான்அறி
யாய்தனை ஆய்ந்தவரை
உற்றுஆ கிலுமஉரைக் கப்பொருந்
தாய்உனக்கு ஆனநிலை
பற்றாய் குருவைப் பணியாய்
பரத்தையர் பாலில்சென்றுஎன்
பெற்றாய் மடநெஞ்ச மேஉனைப்
போல்இல்லை பித்தனுமே (60)

இந்த மூன்றிலும் இந்த அறவுரைகளைக் கண்டு மகிழ லாம்.

(xiv) ***போலிக் கிரியை:*** இதுபற்றி ஒரே ஒரு பாடலில் காணலாம்.

எட்டுத் திசையும் பதினாறு
கோணமும் எங்கும்ஒன்றாய்
முட்டித் ததும்பி முளைத்துஓங்கு
சோதியை மூடர்எல்லாம்
கட்டிச் சுருட்டித்தம் கக்கத்தில்
வைப்பர் கருத்தில்வையார்
பட்டப் பகலை இரவுஎன்று
கூறிடும் பாதகரே (30)

வெளிப்பகட்டுக்காகச் செய்யப் பெறும் கிரியைகளை யும் சடங்குகளையும் சாடுவது இப்பாடல். மனிதன் தோன்றிய நாள்தொட்டு எல்லாத் துறைகளிலும் 'போலி'

தோன்றத் தொடங்கி விட்டது. போலி நோட்டு, போலி நாணயம், போலி தேச பக்தர்கள், போலி அரசியல்வாதி கள், போலிச் சமயவாதிகள் எனப் பலவகையினர். பரிசுச் சீட்டுகளிலும் போலி தோன்றியதாகப் பேச்சு அடிபடுகின்றது. ஏன்? தமிழ் இலக்கணத்தில் கூட 'போலி எழுத்து' காணப் பெறுகின்றது.

(xv) **போலிப் பூசை முறைகள்:** இது பற்றியும் இரண்டு பாடல்கள்.

நேமங்கள் நிட்டைகள் வேதங்கள்
 ஆகம நீதிநெறி
ஓமங்கள் தர்ப்பணம் சந்தி
 செபமந்திர் யோகநிலை
நாமங்கள் சந்தனம் வெண்ணீறு
 பூசி நலமுடனே
சாமங்கள் தோறும் இவர்செய்யும்
 பூசைகள் சர்ப்பனையே (44)

முற்றந் துறந்த பட்டினத்தடிகளின் கவனத்தையும் இவை ஈர்த்திருக்கின்றன.

வெட்டாத சக்கரம் பேசாத
 மந்திரம் வேறுஒருவர்க்கு
எட்டாத புட்பம் இறையாத
 தீர்த்தம் இனிமுடிந்து
கட்டாத லிங்கம் கருதாத
 நெஞ்சம் கருத்தின்உள்ளே
முட்டாத பூசையன் றோகுரு
 நாதன் மொழிந்ததுவே (50)

இப்படியும் பலவற்றைப் பதிவு செய்கின்றார் அடிகள்.

(xvi) **அழுகை:** இதுபற்றியும் ஒரு பாடல். 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்று மணிவாசகப் பெருமா னும் சொல்லிப் போனார் அன்றோ!

ஒழியாப் பிறவி எடுத்துஏங்கி
    ஏங்கி உழல்கின்றநெஞ்சே
அழியாப் பதவிக்கு அவுடதம்
    கேட்டி அநாதியனை
மழுமான் கரத்தனை மால்விடை
    யானை மனத்தில்உன்னி
விழியால் புனல்சிந்தி விம்மி
    அழுநன்மை வேண்டும்என்றே (56)

என்ற பாடலில் ஆன்மிகத்துக்கு அழுகையும் வேண் டும் என்று குறிப்பிடுவர் அடிகள்.

அழுதலின் தத்துவம்: இத்தத்துவம் குழந்தை முதல் அருளாளர் வரை கைமேல் பலன் கொடுத்து வருகின் றது. குழந்தை அழுகிறது; அதனால் பிழைக்கின்றது. 'அழுத பிள்ளை பால் குடிக்கும்' என்பது பழமொழி யன்றோ! பிள்ளைப் பேறு ஏற்பட்ட இல்லத்திற்கு வருபவர்கள் 'குழந்தை அழுததா?' என்று வினவும் வாசகத்தை நாம் கேட்டுள்ளோம். பிறந்தவுடன் குழந்தை அழவேண்டும். நூற்றுக்குத் தொண்ணூறுக்கு மேல் குழந்தைகள் அழுகின்றன; பிழைக்கின்றன. மருத் துவமனைகளில் பிறந்தவுடன் குழந்தை அழாவிட்டால் ஊசியால் அல்லது பிறவற்றால் ஊறுபடுத்திக் குழந் தையை அழச் செய்வதைப் பார்த்திருக்கின்றோம்; கேட் டும் உள்ளோம். கருவறையில் இருக்கும்போது சுவாசிக் கும் செயல் முதல் அனைத்தையும் அன்னையே செய் கின்றாள். பிறந்த பிறகு குழந்தையே அதனைச் செய்ய வேண்டும் என்பது இறைவனின் திட்டம். அழுதவுடன் நுரையீரல் (Lungs) செயற்படுகின்றது; குழந்தை சுவாசிக் கத் தொடங்கி விடுகின்றது. பிழைக்கின்றது.

## 2. வெண்பா

நலவழிபாட்டின்போது பாடிய பாடல்களுள் வெண்பா யாப்பில் பாடிய பாடல்களை ஈண்டுக் காண் டோம்.

(i) **திருவிடைமருதூர்:** இத்தலம் பற்றி ஒரு பாடல்.

மென்று விழுங்கி விடாய்கழிக்க நீர்தேடல்
என்று விடியும்எனக்கு என்கோவே - நன்றி
கருதார் புரம்மூன்றும் கட்டுஅழலால் செற்ற
மருதா!உன் சந்நிதிக்கே வந்து

என்பது.

(ii) **திருவொற்றியூர்:** இத்திருத்தலம் பற்றி மூன்று பாடல்கள். தலப்பயணத்தின் போது திருவொற்றியூர் நகரம் குறுகியவுடன்,

கண்டங் கரியதாம் கண்மூன்று உடையதாம்
அண்டத்தைப் போல அழகியதாம் - தொண்டர்
உடல்உருகத் தித்திக்கும் ஓங்குபுகழ் ஒற்றி
கடல்அருகே நிற்கும் கரும்பு (1)

என்று வெண்பா பாடி பேரானந்த உணர்வு பெறுகின்றார். உடனே,

ஓடுவிழுந்து சீப்பாயும் ஒன்பதுவாய்ப் புண்ணுக்கு
இடமருந்து யான்அறிந்து கொண்டேன் - கடுஅருந்தும்
தேவாதி தேவன் திருவொற்றி யூர்த்தெருவில்
போவார் அடியின் பொடி (2)

என்ற பாடல் பிறக்கின்றது. மெய்யடியார்களின் 'திருவடிப் பொடி' பேசப் பெறுகின்றது. அடுத்துப் பிறக்கும்,

வாவிஎல்லாம் தீர்த்தம் மணல்எல்லாம் வெண்நீறு
காவனங்கள் எல்லாம் கணநாதர் - பூஉலகில்
ஈதுசிவ லோகம் என்றுஎன்று மெய்த்தவத்தோர்
ஓதந் திருவொற்றி யூர் (3)

என்ற பாடலில் எதிர்ப்பட்ட சராசரம் முழுமையும் குருலிங்க சங்கமமாகக் கண்டு மனங்கரைந்து உருகுகின்றார்.

(12) திருவாரூர்: தியாகராசப் பெருமான் திருக்கோயில் கொண்டிலங்கும் இத்திருத்தலம் பற்றி இரண்டு பாடல்கள்.

ஆரூரர் இங்கிருக்க அவ்வூர்த் திருநாள்என்று
ஊர்ஊர்கள் தோறும் உழலுவீர் - நேரே
உளக்குறிப்பை நாடாத ஊமர்காள் நீவிர்
விளக்குஇருக்கத் தீத்தேடு வீர்

என்பது அவற்றுள் ஒன்று இது.

(13) திருஏகம்பம் (காஞ்சி): ஏகாம்பரநாதர் எழுந்தருளியிருக்கும் திருத்தலம்பற்றி ஒரு பாடல்.

எத்தனைஊர் எத்தனைவீடு
எத்தனைதாய் பெற்றவர்கள்
எத்தனைபேர் இட்டுஅழைக்க
ஏன்என்றேன் - நித்தம்
எனக்குக் களைஆற்றாய்
ஏகம்பா! கம்பா!
உனக்குத் திருவிளையாட்டோ.

என்பது அத்திருப்பாடல்.

(14) திருக்கச்சிக் காரோணம்: இது பற்றி ஒரு பாடல்.

அத்தி முதல்எறும்பீ ரானஉயிர் அத்தனைக்கும்
சித்தம் மகிழ்ந்தளித்த தேசிகா - மெத்தப்
பசிக்குதையா பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி
இசிக்குதையா காரோண ரே

என்பது அது.

(15) திருக்காளத்தி: கண்ணப்ப நாயனார் புகழ் பெற்ற காளத்திபற்றி ஒரு பாடல்.

பொய்யை ஒழியாய் புலாலை விடாய்காளத்தி
ஐயரை எண்ணாய் அறஞ்செய்யாய் - வெய்ய

சினமே ஒழியாய் திருஎழுத்துஐந் தோதாய்
மனமே உனக்குஎன்ன மாண்பு

என்பது.

*(16)* திருஇருப்பையூர், திருஐயாறு *(17)* சேவித்த பின் திருக்குற்றாலம் வருகின்றார்.

(18) திருக்குற்றாலம்: இத்தலம் பற்றி ஒரு பாடல்.

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பால்உண் கடைவாய்ப் படுமுன்னே - மேல்விழுந்தே
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு

என்பது அப்பாடல்.

(19) பொது: இத்தலைப்பில் *19* பாடல்கள் காணப் பெறுகின்றன. ஒரு சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

சிற்றம் பலமும் சிவனும் அருகிருக்க
வெற்றம் பலம்தேடி விட்டோமே - நித்தம்
பிறந்தஇடம் தேடுதே பேதைமட நெஞ்சம்
கறந்தஇடம் நாடுதே கண் (1)

பெண்ணை நாடி (பிறந்த இடம், கறந்த இடம்) சிற்றம்பலத்தையும் சிவனையும் மறந்து விட்டமைக்கு வருந்துகின்றார் அடிகள்.

(i) அடிகள் வாழ்வில் அடிகள் எந்தப் பெண்ணையும் நாடியவர் அல்லர்; எந்தப் பெண்ணும் (தாயுமான அடிகளைப் போல்) அடிகளை நாடவில்லை. மணிவாசகப் பெருமான், நம் அடிகள் கூறிக் கொள்வது கைச்சியாறு சந்தானம் (தம்மைத் தாழ்வாகக் கூறிக் கொள்ளுதல்) என்று கொள்ள வேண்டும்.

(ii) ***உணவு பற்றி:*** அடிகள் உணவு வேண்டும் என்று கவலைப்படாதவர்.

இருக்கும் இடம்தேடி என்பசிக்கே அன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன் - பெருக்க
அழைத்தாலும் போகேன் அரனேஎன் தேகம்
இளைத்தாலும் போகேன் இனி (5)

அடிகள் வாழ்வைக் கூர்ந்து நோக்கினால் இத்தகைய சந்தர்ப்பம் என்றுமே எழவில்லை என்பது தெரியும்.

(iii) ***இறைவனைப் போற்றுதல்:*** 'உயிர் உடலை விட்டுப் போனதும் சுற்றத்தார் உடலைச் சுட்டுவிடப் போகின்றார்கள். எத்தனைத் துயர் நேரிடினும் சிவனை ஏத்தவும் போற்றவும் செய்யுங்கள்; அதுவே சுகம்' என்று,

விட்டுவிடப் போகுதுஉயிர் விட்டஉட னேஉடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார் - பட்டதுபட்டு
எந்நேர மும்சிவனை ஏத்துங்கள் போற்றுங்கள்
சொன்னேன் அதுவே சுகம் (6)

இப்பாடலில் தெரிவிக்கின்றார் அடிகள்.

(iv) ***பழிக்கு அஞ்சுதல்:*** இதுபற்றி ஒரு பாடல்:

ஆவியொடு காயம் அழிந்தாலும் மேதினியில்
பாவிஎன்று நாமம் படையாதே - மேவியசீர்
வித்தார மும்கடம்பும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி (7)

உடலை விட்டு உயிர் நீங்கும் சந்தர்ப்பம் நேரிட்டாலும், 'கெட்ட பெயர்' ஏற்படாமல் பார்த்துக் கொள்; நடைப் பிணம்போல் திரிவாயாக' என்று நெஞ்சுக்கு உபதேசம் செய்கின்றார்.

(v) ***பிறப்பு வேண்டா:*** இதுகுறித்து இரண்டு பாடல்கள்:

**இன்னம் பிறக்க இசைவையோ நெஞ்சமே**
**மன்னர்இவர் என்றுஇருந்து வாழ்ந்தவரை - முன்னம்**
**எரிந்தகட்டை மீதில் இணைக்கோ வணத்தை**
**உரிந்துஉருட்டிப் போட்டது கண்டு** (12)

**எத்தனைநாள் கூடி எடுத்த சரீரம்இவை**
**அத்தனையும் மண்தின்பது அல்லவோ - வித்தகனார்**
**காலைப் பிடித்துமெள்ளக் கங்குல்பகல் அற்றஇடம்**
**மேலைக் குடியிருப்போ மே** (14)

*மீண்டும் பிறப்பு வேண்டா என்பதைக் காரணம் காட்டி விளக்குவது அற்புதம். பிறப்பைப் பிணி என்றே - பிறவிப் பிணி - உருவகஞ் செய் துணிவுள்ள பண்டையோரின் கருத்தை நினைவுகூர்ந்து மகிழ்கின்றோம்.*

(vi) ***மாதர் வெறுப்பு:*** *இதுபற்றி ஒரு பாடல்:*

**எத்தனைபேர் நட்டகுழி எத்தனைபேர் தொட்டமுலை**
**எத்தனைபேர் பற்றி இழுத்தஇதழ் - நித்தம்**
**பொய்யடா பேசும் புலைமா தரைநீக்கி**
**உய்யடா உய்அடா உய்.** (16)

*பாடலைப் படிக்கும் போதே - முதல் இரண்டு அடிகள் - அருவருப்பு ஏற்படுகின்றது. ஒரு மகானின் வார்த்தைகளா இவை? என்ற ஐயமும் தோன்றுகின்றது. பிறரால் ஏற்பட்ட இடைச் செருகலாக இருக்குமோ என்ற சந்தேகமும் எழுகின்றது.*

(vii) ***தீங்கு செய்யற்க:*** *இதுபற்றியும் ஒரு பாடல்:*

**இருப்பதுபொய் போவதுமெய் என்றுஎண்ணி நெஞ்சே**
**ஒருவருக்கும் தீங்கினை உன்னாதே - பருத்ததொந்தி**
**நம்மதுஎன்று நாம்இருப்ப நாய்நரிகள் பேய்கழுகு**
**தம்மதுஎன்று தாம்இருக்கும் தான்** (பொது-17)

*நரமாமிசம் ஒருவர் உண்டதாக வரலாறு இல்லை. கதை*

களில் தான் அது உண்டு. அதற்காக "இராக்கதர்களைப் படைத்துள்ளான் மனிதன்". எனினும் பாடல் கருத்தை உள்ளத்தில் ஆணித்தரமாகப் பதிய வைக்கின்றது.

(viii) *முத்தர் மனம்:* இதுபற்றியும் ஒரு பாடல்:

எத்தொழிலைச் செய்தாலும் ஏதுஅவத்தை பட்டாலும்
முத்தர் மனம்இருக்கும் போதே - வித்தகமாய்க்
காதிவினை யாடிஇரு கைவீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான். (பொது-18)

(ix) *பிள்ளைப் பேறு:* 'மக்கட் பேறு' என்று வள்ளுவர் பெருமான் போற்ற, பிள்ளைப் பேற்றை அடிகள் வெறுப்பது வியப்பாக உள்ளது.

மாலைப் பொழுதில்நறு மஞ்சள்அரைத் தேகுளித்து
வேலை மினக்கிட்டு விழித்திருந்து - சூல்ஆகிப்
பெற்றாள் வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்துஆனாள் என்செய்வாள் பின். (9)

இதற்குத் தாய் என்ன செய்வாள்? இது சூழ்நிலையால் ஏற்பட்டிருக்கலாம். பெண்குலத்தின்மீது பழி போடுவதாக உள்ளது இது. இது அடிகள் அருளிய பாடலாகத் தோன்றவில்லை.

(20) அன்னையாருக்கு இறுதிக் கடன்: இதுபற்றிப் பத்துப் பாடல்கள். பத்தும் முத்தானவை. தாய்ப் பாசம் முற்றுந்துறந்த முனிவரையும் ஆட்டி வைக்கின்றது. ஆதிசங்கரரையும் அசைத்து விட்ட அற்புதப் பண்பல்லவா? பத்து மாதம் சுமந்த வயிறு. திருமணம் ஆகும் வரை சுவையான உணவை அன்பொழுக வழங்கிய கை. ஒரு சிலவற்றைக் காட்டுவேன்.

ஐயிரண்டு திங்களா அங்கம்எல்லாம் நொந்துபெற்றுப்
பையல்என்ற போதே பரிந்துஎடுத்துச் - செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி. (1)

முற்றும் துறந்த முனிவருக்கும் 'ஆண் பிள்ளைப்' பாசந் தான் இப்படிப் பாட வைக்கின்றது.

முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள்சுமந்தே
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்முட்டு வேன். (2)

மூன்றாண்டுப் பருவத்தில் தந்தையை இழந்த அடியேனைத் 'தந்தையாகவும்' இருந்து வளர்த்து என் 42 வயது வரை என்னுடன் இருந்து மகிழ்ந்த அன்னையாருக்கு (காரைக்குடியில்) 'விறகிட்டுத் தீ மூட்டியதை நினைக்கின்றேன்.[4]

அரிசியோ நான்இடுவேன் ஆத்தாள்தனக்கு
வரிசைஇட்டுப் பார்த்து மகிழாமல் - உருசிஉள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே எனைஅழைத்த வாய்க்கு (5)

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகம்மேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு. (6)

4 பிறந்தது பெரகம்பி (இலால்குடி வட்டம்) தாயார் பிறந்த இல்லத்தில்; சில ஆண்டுகள் வளர்ந்தது அங்கு; அடுத்து வளர்ந்தது கோட்டததூர்; தந்தையார் பிறந்த இல்லத்தில் (முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்); பணியாற்றிய இடங்களில் ஒன்றாகிய காரைக்குடியில் (1958) வாய்கருத் தங்கத்தாலான வாய்க்கரிசி இட்டுத் தழல் மூட்டியது கண்ணீர் மல்க நினைவு கூர்கின்றேன். தாய்ப்பாசம் இது! உறவினர் யாரும் உதவ அருள் இல்லை. துணிக் கடை முதலியார் நண்பர் ஒருவர் அனைத்திறகும் உதவினார்.

வேகுதே தீஅதனில் வெந்துபொடி சாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ - மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்துஎடுத்த கை (8)

முன்னை இட்டதீ முப்பு ரத்திலே
பின்னை இட்டதீ தென்இ லங்கையில்
அன்னை இட்டதீ அடிவ யிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே (7)[5]

எங்கோ தலப் பயணத்தில் இருந்தபோது அன்னையார் மரித்த செய்தியைக் கேட்டு ஓடோடி வந்து அன்னையின் உடலைப் 'பச்சை வாழை மட்டை மேல் கிடத்தி 'ஞானத்தீ' (பாட்டால்தீ) எரித்ததாக வரலாறு.

(21) **திருவெண்காட்டுத் திருவிசைப்பா:** இத்தலைப்பில் மூன்று விருத்தப் பாடல்கள் உள்ளன. முதல் இரண்டு பாடல்கள் 'இறைவனே ஏகநாயகனே' என இறுவன. மூன்றும் மும்மணிகள். மூன்றையும் தருவேன்.

பூதமும் கரணம் பொறிகள்ஐம் புலனும்
பொருந்திய குணங்கள்ஓர் மூன்றும்
நாதமும் கடந்த வெளியிலே நீயும்
நானுமாய் நிற்கும்நாள் உளதோ
வாதமும் சமய பேதமும் கடந்த
மனோலய இன்பசா கரமே
ஏதும்ஒன்று அறியேன் யாதுநின் செயலோ
இறைவனே ஏகநா யகனே (1)

5 வெணபா கூட்டத்தில் விருத்தம் கலந்து விட்டது. விருததம எனும பாவினம்தான் உணர்ச்சிப் பிழம்பை எழுப்ப வல்லது.

யாவரே இருந்தும் யாவரே வாழ்ந்தும்
யாவரே எமக்குஉற வாயும்
தேவரீர் அல்லால் திசைமுகம் எனக்குத்
திருவுளம் அறியவேறு உளதோ
பாவலன் ஒருவன் செந்தமிழ்க்கு இரங்கிப்
பரவையார் ஊடலை மாற்ற
ஏவலாள் ஆகி இரவெலாம் உழன்ற
இறைவன் ஏகநா யகனே (2)

உண்டதே உண்டும் உடுத்ததே உடுத்தும்
அடுத்துஅடுத்து உரைத்ததே உரைத்தும்
கண்டதே கண்டும் கேட்டதே கேட்டும்
கழிந்தன கடவுள்நாள் எல்லாம்
விண்டதா மரைமேல் அன்னம்வீற்று இருக்கும்
விழவறா வீதிவெண் காடா
அண்டரே போற்ற அம்பலத்து ஆடும்
ஐயனே உய்யுமாறு அருளே (3)

(22) ஒரு திருமண வீட்டில்: *பாடியதாக ஒரு பாடல்.*

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி
நலன்ஒன்றும் அறியாத நாரியரைக் கூடி
பூப்பிளக்க வருகின்ற புற்றுஈசல் போலப்
புலபுலஎனக் கலகலஎனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறிவீர் கைவிடவும் மாட்டீர்
கவர்பிளந்த மரத்துளையில் கால்நுழைத்துக் கொண்டே
ஆப்புஅதனை அசைத்துவிட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட் டீரே

*சிறு வயதில் - மனப்பக்குவம் இல்லாத நிலையில் - பட்டினத்தடிகள் பாடல்கள் சிலவற்றைப் படித்த துண்டு. அவற்றுள் இதுவும் ஒன்று. இப்பாடல் எப்ப*

டியோ மனப்பாடம் ஆகிவிட்டது. அடிக்கடிச் சொல்லி மகிழ்வேன். இதுபற்றி இரண்டு நிகழ்ச்சிகள்:

(1) 1943இல் நான் வித்துவான் தேர்வுக்குப் (துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியனாக இருந்த காலம் - வயது 27) படித்த காலம். சிவஞான முனிவரின் தொல்காப்பிய முதல் சூத்திர விருத்தி பாடங் கேட்க சென்னையில் பன்மொழிப் புலவர் வே. வேங்கட ராஜுலு ரெட்டியார் இல்லத்தில (13, வடக்கூர் செல்வ விநாயகர் கோவில் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004) தங்கியிருந்த போது சீறாப் புராணம் பதிப்பிக் கும் பணியில் சென்னைப் பல்கலைக் கழக உருது - அரபி - பாரசீகம் துறையில் பணியாற்றிய டாக்டர் அப்துல் நயினார் அவர்கட்கு துணை புரிய மூன்று ஆண்டு நியமிக்கப் பெற்றிருந்தவர் முத்து சு.மாணிக்கவா சக முதலியார். பன்மொழிப் புலவரிடம் பரிந்துரைப்படி இப்பெரும் புலவர் அகநானூறு களிற்றியானை நிரை யில் 50 பாடல்கட்குப் பாடங் கேட்ட பெருமை உண்டு. முத்து சு.அவர்கட்குப் பல பிள்ளைகள். வறுமைப் பிணியால் துன்புற்றவர். ஒரு நாள் இப்பாட்டை அவரி டம் சொல்லி விட்டேன். அவர் தன்னை நோக்கிச் சொன்னதாக நினைத்துக் கொண்டார். (அப்போது அவ ருக்குப் பிள்ளைகள் அதிகம் என்பதும், வறுமையால் துன்புற்றார் என்பதும் எனக்குத் தெரியாது... பன்மொ ழிப் புலவர் பரிந்துரையால் இப்பணியில் அமர்ந்தவர்); வருந்தினார். பின்னர் இவர் துறவுக் கோலம் பூண்டு காஞ்சி முதலியார் மடத்தில் மடாதிபதியாக இருந்தவர்.

(2) சில ஆண்டுகள் கழித்து (1946 என்பதாக நினைவு) தவத்திரு சித்பவானந்த அடிகள் தொடர்பு

ஏற்பட்டபோது, இப்பாடலைக் குறிப்பிட்டு "திரும ணத் தம்பதிகளை இப்படி வாழ்த்தலாமா?" என்று கேட்க, "துறவிகளை திருமணத்திற்கு அழைக்கக் கூடாது" என்றார். "ஏன்?" என்று கேட்டேன். அதற்கு அவர் "துறவிகள் தம் உடலைக் கட்டை (=பிணம்) என்று கருதுபவர்கள். பிணம் அபசகுனம் அல்லவா?" என்றார்.

(22) **உடற்கூற்று வண்ணம்:** இது ஒரு சந்தக் குழிப்பு. உயிரானது தாய் உதரத்தில் கருவாய் மானிட வடிவம் பெற்றுப் பிறப்பது முதல் இறப்பது வரை பெறும் பலவகை அநுபவங்களையும் பரக்கக் கூறுவது. அறி ஞர்கள் இடப்பாடலை இரண்டாவது பட்டினத்தார் பாடினதாக ஒப்புக் கொள்வதில்லை.

# இயல் - 6

## மூன்றாம் பட்டினத்தார்?

தமிழ் கவிதையுலகம் செருகு கவிகட்குப் பெயர் போனது. கம்பராமாயணத்தில் உள்ள செருகு கவிகளைக் காட்டியவர் இரசிகமணி - ஜஸ்டிஸ் மகராஜன் வாக்கில் **இரசஞானி** - என்ற பெயர் பெற்றவர். சிந்தாமணி கந்தியார் என்ற ஒருவர் (கந்தியார் பிணிப்பு) சேர்த்த செருகு கவிகளைக் குறிப்பிட்டுள்ளனர் அறிஞர்கள். பொது மக்களை ஈர்ப்பது சமயமாதலால் அது சம்பந்தப்பட்ட இலக்கியங்களில் புதிய கவிகளின் சேர்க்கை எளிதாக அமைந்து விடுகின்றது. '**பட்டினத்துப் பிள்ளையார் பாடல் திரட்டு**' என்று பழமையாக அச்சிட்டு வழங்கும் தொகுப்பில் காணப் பெறும் இத்தகைய தனிப்பாடல்கள் இரண்டாம் பட்டினத்தார் பாடியவை என்பதை அறிஞர்கள் ஒப்புக் கொள்வதில்லை.

இத்தகைய சேர்க்கையில் முதல்வன் முறையீடு (72 கண்ணிகள்), அருட்புலம்பல் (117 கண்ணிகள்), இறந்த காலத் திரங்கல் (17 கண்ணிகள்) என்பவை அடங்கும். அருட்புலம்பலில் கடைசிக் கண்ணியில் இஃது ஒப்பாரி என்றே ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அடுத்து நெஞ்சொடு புலம்பலில் 37 கலி விருத்தங்கள்; பல பழமொழிகள் இதனுள் பயின்று வருகின்றன. பூரணமாலை 'பூரணமே' என்று முடிகின்ற 102 கண்ணிகள் கொண்டது. இறுதிக் கண்ணி பலன் கூறுகின்றது.

> பூரண மாலைதனைப் புத்தியுடன் ஓதினர்க்குத்
> தாரணியில் ஞானம் தழைப்பாய் பூரணமே

என்பது காண்க. இவற்றையடுத்து 'உடற்கூற்று வண்ணம்' என்ற ஒரு 'சந்தக் குழிப்பு' பட்டினத்தார் பாடியதென்றே வழங்கி வருகின்றது.

'**முதல்வன் முறையீடு**' கன்னி வனநாதரை முன்னிலையாக்கி முறையிடுகின்றது. '**அருட்புலம்பல்**' திருவருட்செயலை விரித்துரைக்கின்றது. '**இறந்த காலத்திரங்கல்**' சென்ற காலத்தில் தாம் எவ்வாறு நெறியல்லா நெறிபற்றிக் கெட்டோம் என்பதை நவில்கின்றது. '**நெஞ்சொடு புலம்பல்**' நெஞ்சத்தையே முன்னிலையாக்கி அதன் இழிவை எடுத்துரைக்கின்றது. '**பூரணமாலை**' பூரணப் பொருளாகிய கடவுளை முன்னிலைப்படுத்தி போகநெறி, ஞான நெறிகளைச் சாங்கமாகச் சாற்றுகின்றது. '**நெஞ்சொடு மகிழ்தல்**' நல்வழிப்பட்ட நெஞ்சின் நிலையைப் புகழ் பாடுவதாக அமைகின்றது.

'**பாடல் திரட்டு**' அல்லாமல் இங்குத் தனியே குறிப்பிட்ட இப்பகுதியில் மிகப் பலவான கொச்சைச் சொற்களும் உலக வழக்குச் சொற்களும் காணப் பெறுகின்றன. 'மாங்கிசம்', 'ஒப்பாரி', 'வங்கிசம்', 'கலக்குறண்டா' என்பன போன்ற சொல்லாட்சிகள் காணப் பெறுகின்றன; இவை மிகப் பலவாகவும் உள்ளன. இவற்றையும் இப்பாடல்களின் பொதுவான கருத்தோட்டத்தையும் ஊன்றி ஆராயும்போது இவை இரண்டாம் பட்டினத்தார் பாடியன அல்ல என்றே முடிவு செய்ய வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப் பெறுகின்றோம். இவை பின்வந்தோர் பாடிச் சேர்த்தவை என்று உறுதி செய்ய வேண்டும் என்ற நிலைக்கு வரவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.

பத்திரகிரியார் **திருப்புலம்பல்** என ஒன்று பாடியிருக்கவே, அப்பாடல் போன்ற புலம்பல் முதலான பெயர் வரும் இப்பாடல்களைக் கேட்ட பிற்காலத்தார் இவை பட்டினத்தார் பங்கில் இருக்கட்டும் என்று இவர் தலையில் ஏற்றி விட்டார்கள் என்று கருதத் தோன்றுகின்றது. ஆகவே, முதல் இரு பட்டினத்தாருமல்லாமல பின்னும் பல பாடல்களைப் பாடியவர் ஒருவர் இருந்தார். அவர் இன்னார் என்று உறுதி செய்து அறியக் கூடவில்லை.

ஆகவே, அவரை 'மூன்றாம் பட்டினத்தார்' என்று பெயர் சொல்லுவதும் பிழையாகிறது; பொருந்துவது மாகும். இவருக்கு நாம் வைக்கும் பெயர் மூன்றாம் பட்டினத்தார்!

இவை தவிர, **சித்தர் கோவையில்** பட்டினத்தார் ஞானம் 100 என்று முதல் நூறு வெண்பாக்கள் அந்தாதித் தொடையாக உள்ளன. காப்பாக வருவது முருகன் பாட்டு. அடுத்தது 'நெஞ்சொடு புலம்பல்' என்பதைப் பெயர் சுட்டிக் குறிப்பிடுகின்றது. நூல் முழுதும் சித்தாந் தக் கருத்துகள் அடங்கியவை. இவை இரண்டாம் பட்டி னத்தாரின் வாக்கு என்று துணிந்து சொல்ல இயல வில்லை. நெஞ்சில் பசுமரத்தாணிபோல் பதியும்படி நேர் முகமாகக் கருத்தை உணர்த்துகின்ற பட்டினத்தாரு டைய தெளிவும் வேகமும் இவற்றில் சிறிதும் இல்லை. மேலும் சித்தர்ஞானக் கோவையில் மிக்க பிற்காலத்தார் பலர் பாடித் தொகுத்து வைத்த பல பாடல்களும் பனுவல்களும் காணப்படுவது நன்கு அறிந்த செய்தி. இவை போல பட்டினத்தார் ஞானமும் பிற்காலத்தார் பாடல் என்றே கருத வேண்டும். நாம் வாழும் இக்காலத் தில் 'விரைந்து கவி பாடும் வேந்தர்கள்' இருப்பது போலவே அக்காலத்திலும் இருந்திருக்க வேண்டும். அவர்களில் ஒருவருடைய படைப்புதான் இது என்று முடிவு கட்டுவது தவறுடையதாகாது.

இதுகாறும் காட்டியவற்றால் இவண் கூறப்பெறும் செய்திகள் விளக்கமாகும். பட்டினத்தார் என்ற பெய ரில் பலர் இருந்திருக்கக் கூடும்.[1] உண்மையான பட்டி னத்தாருக்கு விசிறிகள் (Fans) ஆகி அவர்களில் ஒருவர்

1. இக்காலத்தில் பலர் அரசியல் தலைவர்களை விசிறிகளாக் கொண்டு அண்ணாத்துரை, காமராசர், கருணாநிதி என்று பெயர்கள் சூட்டிக் கொளவ தைப் போல் அக்காலத்திலும் புகழ் பெற்றவர்கள் பெயர்களைச் சூட்டிக் கொண்டிருக்கலாம் இக்காரணத்தால் தான் சிவப்பிரகாசர், ஞானப்பிரகசர், மறைஞானசம்பந்தர், சிவவாக்கியர் போன்ற பெயருடையோர் பலர் காணப் பெறுகின்றனர் என்பதை உணர முடிகின்றது.

பாடல் பாடும் ஆற்றல் கைவரப் பெற்றிருந்தமையால் அவர் பல பாடல்களைப் பாடியிருத்தல் கூடும் என்று கருதுவதில் தவறு ஒன்றும் இல்லை. ஒருவர் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர்; பதினோராந் திருமுறையுள் உள்ள ஐந்து பிரபந்தங்களையும் பாடியவர். இரண்டாமவர் 14-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்து பல பாடல்களைப் பாடினார். இவருடைய காலமே சித்தர்கள் பலரும் வாழ்ந்த காலம்.[2] சிவவாக்கியர், ஞானமார்க்கம் பாடிய ஔவையார், வேறு பல சித்தர்கள் இக்காலத்தில் வாழ்ந்தார்கள் 'சித்தர் கோவை' என்ற நூலும் இவரை ஒரு சித்தராக வைத்து இவர் பாடல்களையும் சித்தர் பாடல்களோடு சேர்த்துக் கூறும். எனவே, இப்பட்டினத்தார் சித்தர் வரிசைக்குரியவர் என்ற கருத்தும் பொருள் உடையது. இவ்விரு பட்டினத்தாருக்கும் உரியன அல்லாத வேறு பல பாடல்கள் பிற்காலத்தில் தோன்றி மூன்றாம் பட்டினத்தார் பெயராலேயே வழங்குகின்றன. இங்ஙனம் 'மூன்றாம் பட்டினத்தார்' என்று ஒருவர் வாழ்ந்ததாகத் தெரியவில்லை. இந்த 'மூன்றாம் பட்டினத்தார்' ஒரு 'கற்பனைப் பெரியார்'. மக்களால் அல்லது யாரோ ஒருவரால் 'மூன்றாம் பட்டினத்தார்' என்று சூட்டப் பெற்ற ஒரு 'கற்பனைப் பெரியார்'. முதல் இரண்டு பட்டினத்தார் போல் பிறந்து வளர்ந்து மக்களோடு உறவாடியவர் அல்லர் இவர்.

2. பட்டினத்தாரை அடுதது வாழ்ந்த தாயுமான அடிகள் காலததிலும சித்தர்கள பலர் வாழ்ந்த செய்தி அவருடைய 'சித்தர்கணம்' என்ற பாடல தொகுப பால் அறியலாகும் விளங்காப் புதிரபோல (Mysterious) பாடியவர்கள் யாவருமே சித்தர்களே பாரதியார் கூட 'நானும் ஒரு சித்தர்' என்று சொல்லிக் கொணடாரலலவா?

# பின்னிணைப்பு
# பயன்பட்ட நூல்கள்


**அருணாலசம், மு: *தமிழ் இலக்கிய வரலாறு - (தமிழ்ப் புலவர் வரலாறு) - 14ஆம் நூற்றாண்டு (முதல் பகுதி) (1969)*** காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம் மாயூரம், திருச்சி மாவட்டம்.

**ஆழ்வார்கள்: *நாலாயிர திவ்வியப் பிரபந்தம்*** (கி வேங்கசாமி ரெட்டியார் பதிப்பு (மூன்றாம் பதிப்பு - 1987), திருவேங்கடத்தான் திருமன்றம் 32, பெருமாள் முதலித் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014.

**காரைக்கால் அம்மையார்: *அற்புதத் திருவந்தாதி*** (பதினோராகந் திருமுறை (திருப்பனந்தாள் - காசி மடம் - 1950)

**சிவஞானபோதம்** - பேருரை.

**தாயுமானவர்: *தாயுமானவர் பாடல்கள்*** (மணிவாசகர் பதிப்பகம், 8/7, சிங்கா தெரு, பாரிமுனை - சென்னை - 600 108.)

**திருமூலர்: *திருமந்திரம்*** (குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம் (1976)

**பட்டினத்தார்: *பட்டினத்தார் பாடல்கள்*** (மணிவாசகர் பதிப்பகம் (மார்ச் 2001).

**மாணிக்கவாசகர்: *திருவாசகம்*** (திருமாபுர ஆதீனம் வெளியீடு (1949)

**வெள்ளைவாரணன்: *பன்னிரு திருமுறை வரலாறு*** (முதல் இரண்டாம் பகுதிகள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர் (1969)

**வேதாந்த தேசிகர்: *ஸ்ரீ தேசிகப் பிரபந்தம் - உரை*** (வங்கிபுரம் நவநீதம் ஸ்ரீராம தேசிகாசாரியர் உரை. ஒப்பிலியப்பன் சந்நிதி. பதிப்பாளர் வழுந்தூர் R ரங்கசாமி அய்யங்கார், செல்வம் நகர், தஞ்சாவூர்)

## பேராசிரியர் டாக்டர்
# ந.சுப்பு ரெட்டியாரின் நூல்கள்

### ஆசிரியம் (5)

1. தமிழ் பயிற்றும் முறை
2. அறிவியல் பயிற்றும் முறை
3. கவிதை பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனெஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூல முதல் நூல்

### இலக்கியம் (15)

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. அறிவியல் தமிழ்
11. திருக்குறள் கருத்தரங்கு மலர் - 1974 பதிப்பு
12. கம்பனில் மக்கள் குரல்
13. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
14. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
15. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
16. தமிழ் இலக்கியங்கள் - அறம், நீதி, முறைமை

17. புதுவை(மை)க் கவிஞர் - சுப்பிரமணிய பாரதியார்: ஒரு கண்ணோட்டம்
18. பாவேந்தர் பாரதிதாசன்: ஒரு கண்ணோட்டம்
19. திருக்குறள் தெளிவு
20. வாய்மொழியும் வாசகமும்
21. மாபெருங் கவிஞர் பாரதியார் கவிதைகள் (பதிப்பு)

## சமயம், தத்துவம்

## (அ) விளக்க நூல்கள் (20)

22. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
23. சைவ சமய விளக்கு
24. சைவ சித்தாந்தம் - ஓர் அறிமுகம்
25. சைவமும் தமிழும்
26. வைணவமும் தமிழும்
27. ஆன்மிகமும் அறிவியலும்
28. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சமவாதம்)
29. கலியன் குரல் (அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு)
30. கீதைக் குறள் (பதிப்பு)
31. கண்ணன் எழில்காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)
32. ஆண்டாள் பாவையும் அழகு தமிழும் (பதிப்பு)

33. கண்ணன் துதி (பதிப்பு)

34. இராமர் தோத்திரம் (பதிப்பு)

35. முருகன் துதியமுது (பதிப்பு)

36. திருப்பாவை விளக்கம் (திருமலை - திருப்பதி தேவஸ்தான வெளியீடு)

37. நவவிதசம்பந்தம்

38. அர்த்த பஞ்சகம்

39. அர்ச்சிராதி

40. ஐந்து இரகசியங்கள்

41. வைணவப் புராணங்கள்

## (ஆ) திருத்தலப் பயண நூல்கள் (11)

42. மலைநாட்டுத் திருப்பதிகள்

43. தொண்டைநாட்டுத் திருப்பதிகள்

44. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்

45. வடநாட்டுத் திருப்பதிகள்

46. சோழநாட்டுத் திருப்பதிகள் - முதற் பகுதி (தமிழ்நாடு அரசு பரிசு பெற்றது)

47. சோழநாட்டுத் திருப்பதிகள் - இரண்டாம் பகுதி (தமிழ்நாடு அரசு பரிசு பெற்றது)

48. தம்பிரான் தோழர்

49. நாவுக்கரசர்

50 ஞானசம்பந்தர்

51. மாணிக்கவாசகர்

52. என் அமெரிக்கப் பயணம்

## திறனாய்வு (28)

53. பாட்டுத்திறன்

54. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை

55. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்

56. அகத்திணைக் கொள்கைகள்

57. கவிதையநுபவம்

58. அண்ணல் அநுமன்

59. புதுக்கவிதை - போக்கும் நோக்கும்

60. கண்ணன் பாட்டுத் திறன்

61. பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு

62. பாரதீயம் (தமிழ்நாடு அரசு பரிசு பெற்றது)

63. குயில் பாட்டு. ஒரு மதிப்பீடு

64. உயிர்தந்த உத்தமன் (பதிப்பு)

65. ஆழ்வார்கள் ஆரா அமுது

66. விட்டுசித்தன் விரித்த தமிழ்

67. சடகோபன் செந்தமிழ்

68. பரகாலன் பைந்தமிழ்

69. பாவேந்தர் பாட்டுத் திறன்

70. பாண்டியன் பரிசு - ஒரு மதிப்பீடு

71. கவிஞர் வாலியின் அவதார புருஷன் - ஒரு மதிப்பீடு
72. கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி - ஒரு மதிப்பீடு
73. வாழும் கவிஞர்கள்
74. அறிவியல் நோக்கில் - இலக்கியம், சமயம், தத்துவம்
75. தந்தை பெரியார் சிந்தனைகள்
76. பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியம்
77. இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்
78. கவிமணியின் தமிழ்ப்பணி - ஒரு மதிப்பீடு
79. அண்ணல் அநுமன்
80. பல்சுவை விருந்து

## வரலாறு, தன் வரலாறு (15)

81. நினைவுக் குமிழிகள் - முதற்பகுதி
82. நினைவுக் குமிழிகள் - இரண்டாம் பகுதி
83. நினைவுக் குமிழிகள் - மூன்றாம் பகுதி
84. நினைவுக் குமிழிகள் - நான்காம் பகுதி
85. நினைவுக் குமிழிகள் - ஐந்தாம் பகுதி
86. மலரும் நினைவுகள்
87. நீங்காத நினைவுகள்
88. வேமனர்

89. குரஜாட
90. சி.ஆர்.ரெட்டி
91. தாயுமான அடிகள்
92. பட்டினத்தடிகள்
93. இராமலிங்கர்
94. இராமானுசர்
95. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள்
96. தமிழ்க்கடல் ராய்.சொ.
97. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்

## அறிவியல் (16)

98. மானிட உடல்
99. அணுவின் ஆக்கம்
100. இளைஞர் வானொலி
101. இளைஞர் தொலைக்காட்சி
102. அதிசய மின்னணு
103 நமது உடல் (தமிழக அரசு பரிசு பெற்றது)
104. அம்புலிப்பயணம்
105. தொலை உலகச் செலவு
106. அணுக்கரு பெளிதிகம் (செ.ப.க. பரிசு பெற்றது)
107 இல்லற நெறி
108 வாழையடி வாழை

109. அறிவியல் விருந்து (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றது)

110. தமிழில் அறிவியல் - அன்றும் இன்றும்

111. விண்வெளிப் பயணம் (தமிழக அரசு பரிசு பெற்றது)

112. இராக்கெட்டுகள் (தமிழக அரசு பரிசு பெற்றது)

113. தமிழில் அறிவியல் செல்வம்

## ஆராய்ச்சி (7)

114. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி

115. வைணவச் செல்வம் - முதற் பகுதி (தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு)

116. வைணவச் செல்வம் - இரண்டாம் பகுதி (தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு)

117. வட வேங்கடமும் திருவேங்கடமும்

118. Religion and Philosophy of Nalayiram with Special reference to Nammalvar

119. Studies in Arts and Science (61st Birth day comunemoration volume)

120. Collected papers

# இந்நூலாசிரியர் பற்றி



*86 அகவையைக் கடந்தவர்*

**பணிகள் :**

1. *9 ஆண்டு உயர் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் (1941–50)*
2. *10 ஆண்டுகள் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி – தமிழ்ப் பேராசிரியர் துறைத் தலைவர் (1950 – 60)*
3. *திருவேங்கடப் பல்கலைக் கழகத் தமிழ்த் தலைவர் (1960–70)*

**ஓய்வுக்குப் பின்னர் பணிகள்:**

1. *15 திங்கள் தமிழ்க் கலைக் களஞ்சிய முதன்மைப் பதிப்பாசிரியர்*
2. *18 திங்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் – காஞ்சித் தத்துவ மையம் பதிப்பியல் பேராசிரியர்.*
3. *சென்னைப் பல்கலைக் கழகம் – தமிழ் இலக்கியத் துறை வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்.*
4. *மதிப்பியல் இயக்குநர் மரபியல் பண்பாட்டு நிறுவனம் (சென்னைப் பல்கலைக் கழகம்)*

**பிறபணிகள்:**

*திருப்பதி, மதுரை, பெங்களூர், மைசூர், திருவனந்தபுரம், சென்னைப் பல்கலைக்கழகங்களில் பல்வேறு பணிகள் – பொறுப்புகள்*

**பெற்ற பரிசுகள் :** *14 நூல்கள் பரிசு பெற்றவை*

**பெற்ற விருதுகள்:** *பத்துக்கு மேல் – பல்வேறு நிறுவனங்களின் மூலம்.*

000767